Registered as a News Paper
பக்கம் - 20+IV

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் -15 | வெள்ளி-15 | 04-10-யூன்-2004

## அறிவு எமது ஆயுதம்...

## எழுதும் கரங்கள் ஓயுமா?




ஜி.நடேசன்

மூத்த பத்திரிகையாளர் கோபு வன்னியில் கௌரவிப்பு...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 04 . 06 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# தட்டிக்களிக்க முடியாது...?

அரசு-புலிகளுக்கிடையிலான சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்டும் என்ற கரிசனையில் புலிகள் கொண்டிருக்கும் ஆர்வம் சிறிலங்கா அரசுக்கு இல்லை.

இதனை முடங்கிப்போயிருக்கும் சமாதான முன்னெடுப்புகளும், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவை காத்திருந்து சந்திக்க வேண்டியேற்பட்ட அதே வேளை சந்தித்த பின்னரும் உருப்படியான எந்த முடிவையும் எட்ட முடியாது வெறுங்கையுடன் பிரஷெலஸ் செல்லவேண்டி ஏற்பட்ட நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் பயணமும் சுட்டுகின்ற விடயங்கள்.

இலங்கையின் ஐம்பதுவருட காலத்திற்கு மேற்பட்ட இனப்பூசலில் சுமார் முப்பது ஆண்டு காலமாக தங்கள் குருதியைச் சிந்தி விடுதலைக்காக போராடிய தமிழ் மக்களின் தலைமை வரலாற்றில் வழங்கும் நல்ல வாய்ப்பை உதாசீனம் செய்ய அரசு முற்படுகிறது.

இதனை சிறிலங்கா அரசின் தற்போதைய நடவடிக்கைகள் மிகவும் துலாம்பரமாக வெளிக்காட்டிநிற்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தனியரசே தீர்வு என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் வந்து பல ஆண்டுகள் கடந்த பின்னர் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண வேண்டும் என்று புறப்பட்ட எல்லாத் தரப்புமே இப்போது பேச்சை இழுத்தடிக்க விரும்பும் அரசை பேச்சு மேசைக்கு கொண்டுவர படாதபாடுபட வேண்டியிருக்கிறது.

குறிப்பாக அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் லிக்கி யுன் ஜின்னிடம் தெரிவித்தது போல், *புதிய அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வம் காட்டுவதைத் தவிர்த்து வருகிறது. மாறாக சர்வதேச நாடுகளிடமிருந்தும் சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி போன்ற நிதிவழங்குனர்களிடமிருந்தும் நிதியைப் பெறுவதிலேயே கவனம் செலுத்திவருகிறது.*

இந்த வகையில் சமாதான முன்னெடுப்புகள் முன்னெடுக்கப்பட்டால் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான ஒரு முடிவுக்கு அரசு வரவேண்டி ஏற்படும். அவ்வாறு ஒரு நிலை ஏற்படின் ஆட்சிஅமைத்திருக்கும் கூட்டணி கட்சிகளுக்குள்ளேயே குழப்பம் ஏற்பட்டு அரசு ஆட்டம் கண்டு விடும் என்பதற்காக பேச்சுக்களை முன்னெடுப்பதில் அரசு அசமந்த போக்கை கடைப்பிடிக்கிறது.

இதைவிட சமாதான முன்னெடுப்பை தொடர்வதில், அரசு காலத்தை இழுத்தடிப்பதற்கு வேறு காரணம் இருக்கமுடியாது அவ்வாறு இருக்குமாயின் அது சிங்கள பௌத்த பேரினவாத எண்ணக் கோட்டைக்குள்ளிருந்து விடுபடமுடியாத் சிங்கள மேலாண்மை மனோபாவமே தவிர வேறில்லை.

கொழும்பு மைய அரசில் எந்த கட்சி ஆட்சிபீடம் ஏறினாலும் அவர்களின் அடிப்படை எண்ணக்கருவில் மாற்றம் ஏற்படாதவரை தமிழர்களுக்கு எந்த தீர்வையும் வழங்கப்போவதில்லை.

இதனை தமிழ் மக்கள் பல தசாப்தங்களாகவே நன்குணர்ந்தும், அனுபவித்தும் உள்ளனர்.

இந்த நிலையில் சிங்கள தேசம் இந்த வறட்டு மனோபவத்திலிருந்து விடுபட அல்லது தமிழ் மக்களின் துயரம் தோய்ந்த துன்ப வரலாறு முடிவை எய்ய காத்திரமான பங்கையாற்ற வேண்டிய கடப்பாடு சர்வதேச சமூகத்திற்கே உண்டு.

ஒரு இறைமையுள்ள நாடு என்பதற்காக இலங்கை அரசை சர்வதேச சமூகம் திருப்தி செய்து கொண்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

இதற்கு சர்வதேச சமூகம் சற்று காரமாகவே சிறிலங்கா அரசுக்கு அழுத்தத்தைக்கொடுக்கவேண்டும். அந்தவகையில் பெல்ஜிய தலைநகர் பிரஷெலஸ்சில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலே நிதி வழங்கப்படும் என்ற எச்சரிக்கைக்கு அப்பால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக சர்வதேச சமூகம் இராஜதந்திர அழுத்தத்தை அதிகமாகவே அரசின் மீது பிரயோகிக்கவேண்டும்.

இதுவே தமிழ்மக்கள் சர்வதேசசமூகத்திடம் எதிர்பார்ப்பதும் கூட.

# முற்றுப்புள்ளி வைக்க முடியாது...



எம்மைப் புறந்தள்ளி
நியாயமான கோரிக்கைகள்
வீணாகிப் போக,
முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள்
என்ன நினைத்தார்கள்.

நாக்கிற்கு மட்டும் அறுசுவை,
எமது வாக்கிற்கும், எழுத்திற்கும்
ஒரு அசைவுமே இல்லாமல்
எத்தனை உயிர்கள்
பிணமானது.

சமாதான காலமாக இருந்தும்
வாய் மூடி

கைகள் கட்டப்பட்ட நிலையில்
கண் திறந்தும் என்ன?
மூடியும் என்ன?
பிணமாக நடமாடுவதா?

மேளம் அடித்தால் ஆடும்
மனிதர்கள் இருக்கும் வரை வசூல்
அதிகம் தான்.
வெட்கம் கெட்ட அரசாங்கம்
பட்டமரத்தில் நம்பிக்கை வைத்து
முறிந்த கொப்பில்
தூக்குக் கயிற்றினை கட்டி
யாரை ஏற்ற முடியும்.

சுடப்பட்டும்
வெட்டிக் கொல்லப்பட்டும்
எழுத்தின் ஆழத்தை மூடிவிட
முடியவில்லை உன்னால்

திரும்பிப் பார்!
அந்த வட்டவடிவமுள்ள
துப்பாக்கியின் குழாய்
உன்னையும் குறிபார்க்கும்.

அடக்கு முறையை எதிர்த்து
குரல்கொடுத்தோம்
அடக்கி ஆள நினைத்து
குரல்வளையை நசித்தாய்.


எழுத்துவடிவம் கொண்டு
சரித்திரம் படைத்தோம்.

இரவு இரவாய்
வானவேடிக்கை காட்டி
வெளிச்சம் காட்ட முடியாது
நீ
எத்தனை பேரை
சுடமுடியும்?

பேச்சு வார்த்தை மேசையில்
உட்கார்ந்திருக்கிறோம்
உன் கோழைத்தனமே
உன்னை யாரென
இனங்காட்டப் போதுமானது!
இனிவரும் காலங்கள்
எழுத்தின் காலங்கள் உயிர்
ஊட்டிய வண்ணமே இருக்கும்

அழியாத எழுத்துக்கள்
அடையாளப் படுத்திக் கொண்டே
வரலாற்றின் மிகுதிப் பாகத்தையும்
நிரப்பியவண்ணமேயிருக்கும்.

–ராதேயன்



# இந்தியா சமாதானத்தைக் குழப்புமா?

**பாகம்-02**

**நிலாந்தன்**

டிக்சிற் மறுபடியும் அரங்கினுள் பிரவேசித்துள்ளார். இலங்கையைபொறுத்து இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை மாறாது என்பதை புலிகளுக்கு எதிராக வியாக்கியானம் செய்து வைத்திருக்கும் எல்லோருக்கும் இது உற்சாக மூட்டக்கூடியது.

இவர்கள் எல்லோரும் சிறிபெரும் புத்தூரில் வெடித்த ஒருகுண்டோடு வரலாறு உறைந்துபோய்விட்டதாக நம்புவதுபோலத்



தோன்றுகிறது.

ஆனால், இந்தியா உறைந்துபோய் நின்றுவிடவில்லை. கடந்தசுமார் ஒருதசாப்த காலத்திற்கும் மேலாக அது உலகின் பலமான பெரும்போக்கு ஒன்றுடன் தன்னை வெற்றிகரமாக தகவமைத்துக்கொண்டுவருகிறது. இந்த மாற்றங்களின் பிதாஎன்று வர்ணிக்கப்படும் மன்மோகன்சிங் பிரதமராகப் பதவி யேற்றிருப்பதிலிருந்தே இந்தியா புதிய பூகோள பொருளாதார யதார்த்தத்துடன் எவ்வளவு தூரத்துக்கு தன்னைத் தகவமைத்துக்கொள்ளத் தயார் என்ற செய்தி குறிப்பாலுணர்த்தப்படுகிறது.

எனவே ஈழப்போர் குறித்த இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை எனப்படுவது இங்கிருந்துதான் தொடங்கப்படவேண்டும். நிச்சயமாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்திலிருந்தோ அல்லது சிறிபெரும்புத்தூரில் இருந்தோ அல்ல.

இந்தியாவின் அணுகுமுறையை மன்மோகன்சிங்கிற்கூடாகத்தான். அதாவது, அவர் பிரதிநிதித்துவம் செய்யும் பொருளாதாரக் கொள்கைகளுக்கூடாகத்தான். அதிகபட்சம் விளங்கிக்கொள்ளவேண்டும். தனிய டிக்சிற்றுக்கூடாகமட்டும் விளங்கிக்கொள்ளக்கூடாது.

மன்மோகன்சிங் ஒரு சிறுபான்மை சீக்கிய இனத்தவர் என்பதால் அவர் இலங்கைத் தீவிலுள்ள சிறுபான்மைத்தமிழரிடம் இரக்கமாய் இருப்பார் என்பதல்ல. அப்படி இரக்கங்களுக்கூடாக வெளியுறவுக் கொள்கையைப்பார்ப்பது என்பதே டிக்சிற்றுக்கூடாகப்பார்ப்பதன் மற்றொரு பக்கம்தான். மாறாக இந்தியாவில் அண்மைத் தசாப்தங்களில் தோன்றிய புத்திஜீவிப் பிரதமர் மன்மோகன் சிங்கே. அமெரிக்கமயப்பட்டுவரும் இவ்வுலகில் இந்தியாவை அறிவுபூர்வமாக மேற்குநாடுகளுக்கு திறந்துவிட்டவர் அவர் என்பதன் அடிப்படையில்தான் நிலைமைகளைப் பார்க்கவேண்டும். அவர் தொடக்கி வைத்த புதிய தசாப்தம் இந்தியாவை எங்கே கொண்டுவந்து விட்டிருக்கிறது? அது இந்திய வெளியுறவுக்கொள்கையில் எத்தகைய பிரகடணப்படுத்தப்படாதவிலகல்களைக்கொண்டு வந்திருக்கிறது என்பதே இங்கு முக்கியம்.

இந்தியா என்றைக்கு தனது சந்தைகளை மேற்கின் நிறுவனங்களுக்கு திறந்துவிட்டதோ: என்று அது இன்ரநெற் இணைப்பைப்பெற்று தகவற்பெருஞ்சாலையில் வீறுநடைபோடத் தொடங்கியதோ: என்று அது சிலிக்கன் பள்ளத்தாக்கின் வெற்றி பெற்றமென்பொருள் வல்லுனராக பிரகாசிக்கத்தொடங்கியதோ அன்றிலிருந்து தொடங்கி இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் விலகல்கள் வரத்தொடங்கி விட்டன.

இந்த விலகல்களின் விளைவாகத்தான் இந்தியா இலங்கைத்தீவில் கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக மேற்கின் சமாதான முயற்சிகளை குறிப்பிடத்தக்க அளவுக்கு சகித்துக்கொண்டது. இனி டிக்சிற் வந்து எல்லாவற்றையும் 'றிவேர்சில் 'கொண்டுபோய் விடமுடியும் என்றால் மன்மோகன்சிங்கும் அவர் கொண்டுவந்த திறந்த சந்தைப்பொருளாதாரப் போக்கும்கூட றிவேர்சில் போகவேண்டியிருக்கும்.

ஆனால் அது முடியாது. அப்படி றிவேர் சில் போகத்தொடங்கினால் முடிவில் ஒஸாமா பின்லாடனின் அல்லது ஓமர்முல்லாவின் மறைவிடத்துக்குத்தான் போய்ச்சேர வேண்டியிருக்கும்.

எனவே கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக உருவாகிவந்திருக்கும் பொருளாதார யதார்த்தம் ஒன்றுக்கூடாகவே எதையும் அதிகபட்சம் பார்க்கவேண்டியிருக்கிறது.

கடந்த நூற்றாண்டுகளில் பிரித்தானியமயப்பட்டுவந்த உலகில் இந்தியா எப்படி தனது தனித்துவங்களையும் பிராந்தியத்தில் தனது முதன்மையையும் பேணியபடி தனது நவீன வெளியுறவுக்கொள்கைக்கு வந்துசேர்ந்ததோ அப்படியே இப்பொழுது அமெரிக்கமயப்பட்டு வருமிவ்வுலகில் தன்னை வெற்றிகரமாக தகவமைத்துக் கொண்டுவருவதன்மூலம் தனது வெளியுறவுக்கொள்கையை மற்றொரு புதிய கட்டத்துக்கு எடுத்துச் செல்லத்தயாராகி வருகிறது என்பதே சரி.

இப்படி கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக உலகளாவிய பெரும்போக்கு ஒன்றுடன் ஒத்திசைந்துவரும் இந்தியா ஏறக்குறைய இதேகாலப்பகுதியில் இப்பிராந்தியத்தில் ஈழத்தமிழர்கள் மத்தியில் உண்டாகிவரும் அசாதாரண மாற்றங்கள் சிலவற்றைகவனத்திலெடுத்து தனது வெளியுறவுக்கொள்கையில் ஏதும் சுதாகரிப்புக்களைச் செய்யமுன்வருமா என்பதே இப்போதுள்ள பிரதானகேள்வி.

தன்னைவிடப்பலமான ஒரு உலகப் பெரும்போக்குடன் நெகிழ்ந்துவரும் இந்தியா தனது பிராந்தியத்தில் சுமார் ஒரு தசாப்த காலத்துக்கு முன்பு இருந்த ஈழத்தமிழர்கள் இப்பொழுது இல்லை என்ற மாறிவரும் அரசியல் சமூகப் பொருளாதார மற்றும் படைத்துறை யதார்த்தம் ஒன்றை உள்வாங்கி தனது வெளியுறவுக்கொள்கையை சுதாகரித்துக்கொள்ளுமா?

இதில் இந்தியா எடுக்கக்கூடிய முடிவுகளை ஆராய்வது இப்பத்தியின் நோக்கமல்ல. மாறாக அந்த முடிவுகளை எடுக்கும்போது தவிர்க்கவியலாதபடி கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஒரு பெருமாற்றத்தை சுட்டிக்காட்டுவதே இன்று இப்பத்தியின் பிரதான நோக்கம். எனவே அந்தப் பெருமாற்றம் எதுவென்று சற்றுவிரிவாகப் பார்ப்போம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்புவரை இலங்கைத்தமிழ் அகதிகள் இந்தியாவைநோக்கியே போனார்கள். அங்கே அவர்களுக்குப் புகலிடம் தந்த இந்தியா அமெரிக்கச் சார்பு ஜெயவர்த்தனமீது அழுத்தங்கொடுக்கத்தேவையான மனிதச்சுமையாக அவர்களைப் பயன்படுத்தியது. அது ஈழத்தமிழர்கள் இந்தியாவைத் தாய் என்றும் தம்மைச்சேய் என்றும் நம்பி இறுமாந்திருந்த ஒருகாலம்.

ஆனால் இலங்கை - இந்திய உடன்படிக்கையோடும் அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த சம்பவங்களோடும். எல்லாமும் தலைகீழாகி விட்டது. இந்தியாவில் அதிகம் சந்தேகிக்கப்படும் பிரகிருதிகளாக ஈழத்தமிழ் அகதிகள் மாறினார்கள். அகதிமுகாம்களில் இருந்து சிறப்பு முகாம்களைநோக்கி அரசியல் நகர்ந்து செல்லலாயிற்று.இந்தியாவைநோக்கிப் போதல் என்பது ஆபத்தானதாக மாறியது. இது ஏற்கெனவே தொடங்கிவிட்டிருந்தஒருபோக்கான ஐரோப்பாவை நோக்கிப் புலம்பெயர்தல் என்பதை மேலும் ஊக்குவித்தது. இந்தப்போக்கு இந்தியாவுக்குப் புலம்பெயரும் ஒருபோக்குக்கு சற்றேறக்குறைய சமாந்தரமாகவே தொடங்கியது. ஆனால் இந்தியா கதவுகளைமூட மூட ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்தல் என்பது அதிகரித்த அளவில் நிகழலாயிற்று.

இலங்கை-இந்திய உடன்படிக்கைக்கு முன்புவரை ஈழப்போர் ராணுவவார்த்தைகளில் குறை அடர்த்தி யுத்தமாகவேஇருந்தது. ஆனால் இலங்கை இந்திய உடன்படிக்கைக்குப்பின் நிகழ்ந்த மாற்றங்களின் விளைவாக தொண்நூறுகளில் தொடங்கிய இரண்டாவது ஈழப்போர் அரை நிறையடர்த்தி யுத்தமாக மாறியது. இது புலப்பெயர்வை மேலும்தூண்டியது.

இப்படியாக கடந்த சுமார் இருதசாப்தங்களுக்கும் மேலாக புலம்பெயர்ந்துவரும் ஈழத்தமிழர்கள் இப்பொழுது அமெரிக்க, ஐரோப்பிய, ஒஸ்ரேலியக்கண்டங்களில் ஒரு துருத்திக் கொண்டுதெரியும் சனத்திரளாக உருவாகிவருகிறார்கள்.

இந்தியாவை நோக்கிப்போன அகதிகளிடமிருந்து இவர்கள் கூர்மையாக வேறுபடும் சில இடங்கள் உண்டு. முதலாவது, இந்தியாவுக்குப்போன அகதிகள் புவிசார் அரசியல் லாபநட்டங்களுக்கேற்ப எந்தவேளையும் திருப்பி அனுப்பப்படலாம். ஆனால் மேற்கில் இருக்கும் புலம்பெயரிகள் அங்கெல்லாம் படிப்படியாக வதிவிடஉரிமை அல்லது பிரஜா உரிமை பெற்று வருகிறார்கள்.



இரண்டாவது, இந்தியாவுக்குப்போன அகதிகள் தமது சீவனோபாயத்துக்காக இந்திய அரசை நம்பியிருந்தார்கள். ஆனால் மேற்கில் வாழும் புலம்பெயரிகளோ அங்கெல்லாம் பொருளாதார ரீதியாக தம்மைஸ்தாபித்துக் கொண்டுவருகிறார்கள் மட்டுமல்ல, ஈழப்போரின் நிதிச்சுமையை சுமப்போராகவும் மாறிவருகிறார்கள்.

எனவே ஈழத்தமிழ்ப் புலம்பெயரிகள்புகலிட நாடுகளில் ஒரு பலமான சமூகமாக உருவாகத் தொடங்கிவிட்டார்கள். இனிவரும் காலங்களில் இவர்கள் அங்கெல்லாம்அரசியல் செல்வாக்கு மிக்க ஒரு சமூகமாக உருவாகமுடியும் உதாரணத்துக்கு அமெரிக்காவிலுள்ள ஐரிஸ் காரர்கள் மற்றும் யூதர்களைப்போல.

தற்சமயம் கிடைக்கும் சில தகவல்களின் படி ஈழத்தமிழர்களில் நால்வரில் ஒருவர் புலம்பெயரியாய்க்காணப்படுகிறார். இது இந்தப் பிராந்தியத்திலேயே ஒப்பீட்டளவில் மிகக் குறுகியகாலத்துள் நிகழ்ந்த ஒரு பெரியபுலப் பெயர்ச்சி. முழுஆசியாவிலும் யூதர்களோடு ஒப்பிடுகையில் தென்னாசியப்பிராந்தியத்தில் அதிகம் மேற்கு மயப்பட்டுவரும் ஒரு சனத்திரளாக ஈழத் தமிழர்கள் காணப்படுகிறார்கள்.

சில தசாப்தங்களுக்கு முன்பு ஈழத் தமிழர்கள் என்றால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில்காணப்பட்ட ஒருசிறிய சனத்திரள்தான். ஆனால் இப்பொழுது வாழ்தலின் அர்த்தத்தில் இப்பிராந்தியத்துக்கு வெளியே விரியுமொரு சனத்திரளாக ஈழத்தமிழர்கள் மாறிவருகிறார்கள்.

ஏற்கெனவே றலிசைக்கிள், சிங்கர் தையல் மெசின் என்று ஐரோப்பிய மோகம்கூடிய மக்கள் இவர்கள். கடந்த சுமார் இருதசாப்த காலப் புலப்பெயர்ச்சியோடு அதிகரித்த அளவில் மேற்கத்தைய மயப்பட்டுவருகிறார்கள்.

ஒருகாலம் இந்தியப்பண்பாட்டின் ஒரு நீட்சியாகத் தம்மைக்கருதி பெருமைப்பட்டு மகிழ்ந்த மக்கள் இவர்கள். ஆனால் இப்பொழுது இந்தியாவின் பிடிக்குள்ளிருந்து நழுவி மேற்கின் நீட்சியாக மாறிவருகிறார்கள்.

புலம்பெயர்ந்து வாழும் முதலாம் தலைமுறை அகதிகளிடம்தான் குறைந்தபட்ச இந்திய நினைவுகளாவது இருக்கின்றன. இரண்டாம், மூன்றாம் தலைமுறையோ பெருமளவுக்கு மேற்கத்தையச் சாயலோடுதான் உருவாகிவருகிறது. உதாரணமாக, முதலாம் தலைமுறை புலம்பெயரிகள் தமதுபொழுதுபோக்கிற்கு தமிழ்த்திரைப்படங்களையே பார்க்கிறார்கள். ஆனால் இரண்டாவது மூன்றாவது தலைமுறையோ அதில் அதிகம் ஈடுபாடின்றிக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. பிரான்சில் இருந்து வந்த ஒரு புலம்பெயரி சொன்னார்... தமிழ்ப்படம் பலவிதங்களிலும் சீரழிவாகத்தான் காணப்படுகிறது. என்றாலும் அதுவும் இல்லையென்றால் பிள்ளைகளுக்கு தமிழை நினைவூட்ட வேறு வழிஇல்லையென்று.

இந்தியா தனது பிராந்தியத்தில் இப்படியொரு தலைகீழ்மாற்றத்தை அதுவும் மிகக்குறுகியகாலத்துக்குள் எதிர்பார்த்திருக்குமோ தெரியவில்லை. ஆனால் ஈழத்தமிழர்கள் மேற்குமயப்பட்டு வருவதன் விளைவுகளில் ஒன்றே இம்முறை மேற்கிலிருந்துவரும். சமாதானமும்.

இந்தியப் பண்பாட்டின் நீட்சியாகக் காணப்பட்ட ஒரு சிறிய மக்கள் திரள் மேற்கு மயப்பட்டு தென்னாசியாவின் யூதர்களைப்போல உருவாகிவருவதையிட்டு இந்தியா என்ன நினைக்கிறது? தனது பண்பாட்டு வலயத்துக்குள் வரும் இச்சிறிய சனத்திரள் வேறொரு பண்பாட்டின் செல்வாக்கு வலயத்திற்குள் போனதற்குதான் பொறுப்பில்லை என்று இந்தியா கருதுகிறதா?

தன்னைத் தாய் என்று கூறி தம்மைச் சேயாகப் பாவித்து தனது கதவுகளைத் தட்டிய சிறிய ஆனால் வீரமும் விச்சுழியும் மிக்க ஒரு சனத்திரளை இந்தியா திரும்பிப்பார்க்கவில்லை. பதிலாக கதவுகளை இறுக மூடியது. அது மிகக்குறுகியகாலத்துள் இந்தச் சனங்களை தென்னாசியாவின் யூதர்களாக மாற்றிவருகிறது.

எனவே இப்புதிய வளர்ச்சியைக் கவனத்திலெடுத்து இந்தியா ஈழப்போர் குறித்த தனது வெளியுறவுக்கொள்கையில் நெகிழ்ந்து கொடுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இலங்கை -இந்திய ஒப்பந்த காலத்தில் இருந்த இந்தியா இப்பொழுது இல்லை. அக்காலகட்டத்திலிருந்த ஈழத்தமிழ்ச் சமூகமும் இப்பொழுதில்லை. ஈழத்தமிழர்கள் மேற்குமயப்பட மயப்பட சமாதான முயற்சிகளும் தவிர்க்கவியலாதபடி மேற்குமயப்பட்டவைகளாகவே மாறும்.

இந்நிலையில் சமாதான முயற்சிகளை திடீரென்று இந்தியமயப்படுத்துவது என்பது மன்மோகன்சிங் தொடங்கிவைத்த பொருளாதாரப்போக்கை திடீரென்று றிவேர்ஸ் கியருக்கு மாற்றுவதற்குச் சமனானது.

எனவே சமாதான முயற்சிகளில் இந்தியத் தலையீடு எனப்படுவது இப்புதிய யதார்த்தத்தைக் கவனத்தில் எடுப்பதிலிருந்தே தொடங்கப்பட முடியும். அதாவது, தனது பண்பாட்டின் நீட்சியாகக்காணப்பட்ட மக்கள் எப்படிமேற்கத்தையப் பண்பாட்டின் நீட்சியாகமாறத் தொடங்கினர் என்ற கேள்விக்கு விடைகாண்பதிலிருந்து. ●

திருப்தியே, தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் ஞானியின் கல். -பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

# நறுக்கென...



## சந்திரிகாவின் தடுமாற்றம் போர்க்குணத்தின் எதிரொலியா?

பழையபடி மாமியார் கழுதை போலானாராம் என்று ஓர் தமிழ் பழமொழி பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா?

கிட்டத்தட்ட இந்தப்பழமொழிக்கு உயிரூட்டுமாப்போன்றுதான் சிறிலங்கா சனாதிபதியின் அரசியல் நகர்வுகள் இடம் பெற்றுவருகின்றன.

அதுவும் குறிப்பாக சமாதான முயற்சிகள் பற்றிய அம்மணியின் நாளாந்த பேச்சுக்கள், அறிக்கைகள், கருத்துக்கள் என எல்லாமே மெல்ல மெல்ல 1995 ஆம் ஆண்டு நிலைமைகளுக்கு பின்வாங்கிச்செல்வதையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

முன்னர் சமாதானத்திற்கான சமாதானம் எனத் தொடங்கி சமாதானத்திற்கான யுத்தம் என்று கதை விட்டார்... கடைசியில் கதை கந்தலானது தான் மிச்சம்.

இப்போது நிதிக்கான சமாதானப்பேச்சுக்களை சாதுரியமாக நீதிக்கான சமாதானம் என்று மாற்றிப்பிரசாரம் செய்துகொண்டு அநீதியாளர்களுடன் கைகோர்த்தபடி மீண்டும் வெண்புறா வேடம் போட முற்பட்டபோதும், கழுகுக்குணத்தை மறைக்க முடியாது திணறிக்கொண்டிருக்கிறார்.

பாவம்.. அவருக்கு ஆட்சி வேண்டும், அதிகாரம் வேண்டும்,( அதுவும் நிறைவேற்று அதிகாரமே வேண்டும்) அதனை ஆண்டு அனுபவிக்க அளவற்ற நிதி வேண்டும் அதற்காக சமாதானம் பற்றி பேசிக்கொண்டே.. அதாவது வெறுமனே பேசிக்கொண்டு மட்டுமே.. இருக்கவேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை ஆங்காரமாக தன்வசம் வைத்துள்ள அவர் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான யோசனைகளை ஏற்றுக்கொள்ளும் யோசனையில் இல்லை. மாறாக மீண்டும் தனது முற்கால அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளைத் .... தூசு தட்டி கதிர்காமர் மூலம் சுமக்க வைக்க முயச்சிக்கிறாராம்... முன்னர் இந்த அதிகாரப்பரவலாக்கல் தீர்வுப்பொதியை சுமந்து திரிந்தே கூன் விழுந்து போனவர் முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆவர்.

ஆனால் சமாதான முயற்சிகளின் தன்மைகள் 1995 இல் இருந்ததைப் போன்று இப்போது இல்லை என்பதும் அது இப்போது சர்வதேசப் பார்வைகளுக்குப் பட்டு புதிய பரிமாணங்களுக்கு வளர்ச்சி கண்டு விட்டது என்பதும் சந்திரிகா அம்மணிக்கு புரியவில்லைப்போலும்!

அல்லது பழைய நிலைமைக்கு போனால் விடுதலைப்புலிகள் மீண்டும் யுத்தத்திற்கு திரும்புவார்கள்.. மீண்டும் தான் சமாதானத்திற்கான யுத்தத்தை பிரகடனம் செய்துவிட்டு.... சர்வதேச சமூகத்தைப்பேய்க்காட்டி விடுதலைப்புலிகளை ஆயுத முனையில் ஒடுக்க உதவிகளைப் பெறமுடியும் எனக்கனவு காண்கிறார் போலும்...

அவரது புதிய தோழமைக்குரிய பழைய இடது சாரித்தோழர்களும் புதிய பேரினவாதச் சித்தாந்திகளுமான ஜே.வி.பி. யினரின் கனவும் அதுவாகவே இருக்கிறதாம்....!

ஜே.வி.பியை திருப்திப்படுத்தாவிட்டால் ஆட்சி அலங்கோலமாகிவிடும் அவர்களை சமாளிக்க முடிவெடுத்தால் அமைதி கேள்விக்குறியாகிவிடும்... அமைதி குலைந்தாலும் ஆட்சி குலையைக்கூடாது என்பதே இப்போது அம்மணியின் இலக்காக இருக்கிறது போல் தெரிகிறது...

சமாதானப் பேச்சுக்கள் குறித்த சந்திரிகாவின் தடுமாற்றம் அவரது போர் குணத்தின் எதிரொலியாகவும் இருக்கலாம் அல்லவா?

## ஆண்டுகள் மாறினாலும் கலவரங்கள் மாறுமா?



இனக்கலவரம் என்பது சிறிலங்காவின் பௌத்த சிங்கள கலாச்சாரத்தில் பிரிக்கவேமுடியாத ஒரு இயல்பான அம்சமாகவே ஆகிவிட்டது.

அதுவும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு மகிழ்வதென்றால் பேரினவாதப்பதர்களுக்கு புதுவருஷக்கொண்டாட்டம் மாதிரித்தான்.

1958,1960,1977,1981,1983 என்று காலத்திற்கு காலம் பெருமெடுப்பில் நிகழ்த்திய தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரங்களின் பின்னணியில் அரசுகளும் , பௌத்த அடிப்படைவாத அமைப்புக்களும் எவ்வாறு தீவிரமாக இயங்கி பௌத்த தர்மத்தை நிலைநாட்ட எப்படி செயற்பட்டன என்பது வரலாறு.

1983 இன்பின்னர் அதற்கு முன்னர் போன்று இனக்கலவரக்காணிகளை கழியாட்ட விழா மாதிரி நடத்த சிங்கள இனவெறிக்கும்பல்களுக்கு முடியாத நிலை ஏற்பட்டாலும் சிறு சிறு அளவிலாவது அவ்வப்போது வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமிழ்மக்கள் மீது ஏன் இஸ்லாமிய தமிழர்கள் மீதும் தான் தங்களது இனக்கலவரப் பண்பாட்டை அரங்கேற்றி மகிழத்தவறுவதே இல்லை...

இதற்கு அரச பீடங்களினதும் , மதபீடங்களினதும் ஆசிகளும், ஆயுதப்படைகளின் அனுசரணையும் மிகவும் நுணுக்கமாகவும், வேண்டிய வகையிலும் கிடைத்து வருவது தான் இனக்கலவர கதாநாயகர்களின் பலம்.

இனக்கலவரங்கள் ஏற்படக்காரணம் எதுவென்றில்லை.. பக்கத்தில் நிற்கும் ஒரு அப்பாவித்தமிழர் தும்மியதாகவும் இருக்கலாம்.

அதுவே கலவரத்தை தொடங்க கிடைத்த வரமாகிவிடும்.

அதில் பாதிக்கப்படுவோர் தமிழர்கள் மட்டுமே என்பதால் அந்த அரச பயங்கரவாதத்தை அகில உலகம் கண்டித்தாலும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

சாதாரண இனக்கலவரங்கள் தான் இன்று பாரிய இனவிவகாரமாகி நாட்டையே குட்டிச்சுவராக்கி விட்டுள்ள நிலையிலும்கூட இனவெறியாளர்களின் வன்முறைகள் அவ்வப்போது தம் உயிர்ப்பு நிலையை வெளிக்காட்ட தவறுவதேயில்லை.

அண்மையில் கந்தப்பளை,பிங்கிரிய போன்ற இடங்களில் நடந்த இனக்கலவரங்களின் தாக்கமும் பாதிப்பும் இன்னமும் அடங்காத நிலையில் இப்போது புலத்சிங்களவில் கலவரம் அரங்கேறியுள்ளது. சிங்களக்குண்டர்களின் தாக்குதலுக்கு இருபதுக்கும் அதிகமான தமிழ்மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பதற்றம் தொடர்கிறது. பாதுகாப்புக்காக பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனராம்!

பாலுக்கு பாதுகாப்பாக பூனைகளை நியமித்தது போல...

போர் நிறுத்தம் இந்த நாட்டில் படையினருக்கும், இனவெறியாளர்களுக்கும் தான் சுதந்திரத்தை கொடுத்திருக்கிறது என்றால் அதுதான் உண்மை..!

அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவார் என்பது குறித்து யோசிக்கத் தோன்றுகிறதல்லவா..

## அரை மந்திரிப் பதவியானாலும் ஜெனரல் பதவி வருமோ?



புத்த விகாரைகளில் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கவேண்டும் எனவும் அதன் மூலம் பௌத்த சிங்கள தேசமான சிறிலங்காவை விடுதலைப்புலிகளிடமிருந்து பாதுகாக்கவேண்டும்எனவும் ஒரு காலத்தில் பகிரங்கமாகவே முழங்கிய அந்த பேரினவாத சிந்தனா வெறியரை ஞாபகமிருக்கிறதா?

அவர்தான் அந்த முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவைத்தான் கூறுகிறேன்.

ஒரு காலத்தைய பிரதமர் இப்போது பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக அரங்கேறியுள்ளார்... பிரதிப்பாதுகாப்பு அமைச்சரை வீடு கொழுத்திற 'ராணி'க்கு நெருப்பும் எண்ணையும் எடுத்துக்கொடுக்கிற அறிவுள்ளவராகத் தேர்ந்தெடுப்பதில் சந்திரிகாவுக்கு நிகர் சந்திரிகாவே தான்...

முன்னர் மாமா அநுருத்த ரத்வத்தையை அந்தப்பதவியில் அமர்த்தினார் அவர் ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடி அடங்கிப்போய் எம்.பி. பதவிக்கே லாயக்கற்றவராக மருமகளே தீர்மானிக்கும் நிலைக்கு இறங்கிப்போனார்.

இப்போது 'ரத்னசிறி தாத்தா அந்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு அமர்த்தப்பட்டுவிட்டார்.

ஒரு முன்னாள் பிரதமர், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதி சிரேஷ்ட உறுப்பினர் பெரும் அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்து தன்னை அடையாளப்படுத்தியவர் (எப்படி அடையாளப்படுத்தியவர் என்று கேட்க வேண்டாம்... அது அசிங்கம்), இப்படி ஓர் அரை மந்திரிப்பதவியில் அமர்வது கௌரவமா என யாரும் கேட்கலாம்.

ஆனால் பதவிப்பதராகியவர்களுக்கு அரைப்பதவியென்றாலென்ன, முழுப்பதவியென்றாலென்ன..?.... ஏதோ ஒரு பதவி... அவ்வளவு தான்.. விடுங்கோ...!

சரி, இப்போது அவரது இலட்சியத்தை. அதாவது புத்த விகாரைகளை இராணுவ ஆட்சேர்ப்பு மையங்களாக மாற்றும் திட்டத்தை செயற்படுத்தலாமல்லவா?

பாதுகாப்பு அமைச்சரான அந்த அமைச்சை தன்வசம் வைத்துள்ள .. சனாதிபதி சமாதானத்தை முன்னெடுக்கும் உறுதி கொண்டவராகத் தெரியவில்லை... எனவே மீண்டும் அவர், சமாதானத்திற்கான போரை ஆரம்பிக்கத் தூண்டிவரும், ஹெலஉறுமய மற்றும் ஜே.வி.பி கார்ரை திருப்திப்படுத்த முயன்றால் ரத்னசிறியார் விகாரைகளை இராணுவ ஆட்சேர்ப்பு மையங்களாக மாற்றுவதில் தீவிரம் காட்டக்கூடும்....

அதுசரி .. ரத்னசிறியாரே... ஏதோ உங்களுக்குள் நிறையப்பிரச்சினைகள் குடும்பத்துள் சிக்கல்கள்... ஆளையே கொஞ்சக்காலம் காணவில்லை என்றெல்லாம் பேசிக்கொண்டார்களே.. அதெல்லாம் உங்கள் அரசியல் வாழ்வை நன்றாகப் பாதித்துவிட்டது போலும்...!

ஒரு காலப்பிரதமர் ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக கூட ஆவதற்கு தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படவேண்டிய நிலை... ஒரு முழுமையான அமைச்சராக கூட ஆகமுடியாது பிரதி அமைச்சராக பதவி ஏற்க வேண்டிய நிலை...

என்றாலும் அந்த அரைகுறை ஜெனரல் ரத்வத்தை வகித்த பதவியல்லவா...

ஆர்கண்டது. நீங்களும் ஒரு நாள் ஒரு ஜெனரலாக வரக்கூடுமல்லவா? அம்மணியின் கருணையிருந்தா எதுதான் நடக்காது?

## கதிர்காமநாரதருக்கு நப்பாசை போகுமா?



வழமைபோல் அமெரிக்காவில் இருந்து திரும்பிய 'களை' மாறுவதற்கு முன்னே கதிர்காம தேரர் ( லக்ஸ்மன் கதிர்காமர் தான்..) மீண்டும் இந்திய யாத்திரைக்கு கிழம்பிவிட்டார்...

ஓய்வொழிச்சலற்ற பயணம் அவருக்கு... அமெரிக்காவைச்சமாளிக்க வேணும், இந்தியாவைச்சமாளிக்கவேணும்,ஒன்று உலக வல்லரசு மற்றது பிராந்திய வல்லரசு, எப்படியோ சீமான் எல்லாருக்கும் 'பெப்பே' காட்டி வருகிறார்.

இலங்கை இந்தியாவின் சொற்படி கேட்கிறதா அல்லது அமெரிக்காவின் அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுகிறாதா என்பது சிதம்பர ரகசியமாக இருக்கும் வகையில் கதிர்காமரின் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன...

இப்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளமைக்கு நிறையக்காரணங்களும் உள்நோக்கங்களும் உண்டு.

மத்தியில் புதிய ஆட்சி, அதாவது காங்கிரஸ் கூட்டணியின் ஆட்சி பதவியேற்றுள்ள நேரம் .. கடந்த பாரதீய ஜனதா ஆட்சியை ஓரளவு தனது கைப்பிடிக்குள் வைத்துக்கொண்ட கதிர்காமர் மிக அண்மைக்காலம் வரைக்கும் இலங்கையில் இந்திய நலன்கள் மீது பெரும் அக்கறையும், ஆர்வமும் கொண்ட ஒருவராகத்தன்னை இனம் காட்டிக்கொண்டு ஆடிய நாடகங்கள் பல கோமாளித்தனமானவைகளாகும்...

உதாரணம் குரங்குப்பாஞ்சான் விடுதலைப்புலிகளின் முகாம், சீனன்குடா எண்ணைக்குதங்களின் பாதுகாப்பு குறித்த விவகாரம் போன்றவைகளாகும்.

இப்போது புதிய ஆட்சியில் தனது நாரதர் வேலையை ஆரம்பிக்க திக் விஜயம் செய்திருக்கிறார். காங்கிரஸ் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நிலைப்பாட்டைக் கொண்ட கட்சி என்பதாலும் புதிய அரசு ஆட்சிபீடம் ஏறிய பின் விடுதலைப்புலிகள் மீதான தடை மேலும் இருவருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருப்பதாலும் இந்தியாவில் தன் கோல்மூட்டல் பணியை கச்சிதமாகச்செய்யலாம் எனக் கதிர்காமர் கணக்குப்போட்டிருக்கக்கூடும்.

அத்துடன் தட்வர்சிங், ஜே.என்.டிக்ஸிக் போன்ற பழைய பிரமுகர்கள் எல்லாம் மீண்டும் பதவிப்பொறுப்புக்களை ஏற்றுள்ள நேரம் இது... காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவும் அவர் திட்டமிடலாம்.

எப்படியோ சனாதிபதிக்கு விசுவாசமாக உழைத்தால் போதும் அவ்வளவுதான் அன்னாரின் இலட்சியம் .

இந்தியாவில் நின்றுகொண்டே சமிக்ஞைகள் அனுப்பத்தொடங்கியும் விட்டார். இலங்கைப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா சாதகமான வழிகளில் எல்லாம் உதவி செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

இந்தியாவும் அதற்கு தயார் எனப் பதில் கூறியுள்ளதாம்!

ஐயா கதிர்காமரே இங்கே உங்களின் சமாதான முயற்சிகளுக்கு உதவி செய்ய உங்கள் கூட்டணியில் உள்ள ஜே.வி.பி யினரே தயாராக இல்லை.. ஹெல உறுமய எதிர்ப்புக்காட்டுகிறது. இந்த நிலையில் உலகத்திடம் ஆதரவு கேட்பது உங்களுக்கே கோமாளித்தனமாகப்படவில்லையா?

அது சரி கோமாளியிடம் கோமாளித்தனம் தானே இருக்கும்.

— செங்குட்டுவன்

அன்பு எனும் விளக்கை,உன் வாழ்க்கையைக் கொண்டு ஒளிபெறச் செய். - ரவீந்திரநாத் தாகூர்

மட்டக்களப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜி.நடேசன் மீது குறிவைக்கப்பட்டது ஏன்?

இந்த படுகொலையின் பின்னர் கொலைதாரிகள் எதிர் பார்க்கும் அனுகூலங்கள் தான் என்ன ?

ஜி.நடேசன் அவர்கள் தன்னைச் சுடதூண்டும் அளவுக்கு அப்படி என்ன எழுதிவிட்டார்.

இவைஇன்று தவிர்க்க வியலாதபடி எழும் கேள்விகள்.

இந்தச் சம்பவத்தோடு கிழக்கில்நடந்துமுடிந்த, நடந்து வருகின்ற சில சம்பவங்களையும் இணைத்துப் பார்க்கப்படுகிறது பார்க்கவேண்டியதும் தான்.

அந்தவகையில் கிழக்கில் தோன்றியிருக்கும் புதியதுப்பாக் கியின் குறிஇலக்குகளுக்குள் அகப்படுபவர்கள் யார் என்பது முக்கியமாக பார்க்கவேண்டியது.

கிழக்கில் கருணாவின் அசம்பாவிதங்களின் பின்னர் தமிழ் அறிஞர்களும், ஊடக வியலாளர்களும் கொலை இலக்குக் உள்ளாக்கப்படுகிறார்கள்.


திரு. ஜி.நடேசன் அவர் கள் கொல்லப்படுவதற்கு அவர் ஒரு வடபகுதியைச் சேர்ந்தவர் என்று ஒரு காரணம் கூறப்படுகிறது.

இது கருணா குழுவினரின் அட்டகாசம் மட்டக்களப்பில் இருந்தபோது மட்டக்களப்பில் இருந்து வடபகுதி வர்த் தகர்களும், வைத்தியர்களும், கல்விமான்களும் வெளியேற் றப்பட்டதன் பின்னணியில் எழும் ஒரு ஊகமாகும்.

ஆனால் உண்மையில் திரு.ஜி.நடேசன் அவர்கள் மீது வைக்கப்பட்ட குறிக்கு பல காரணங்கள் உண்டு.

சமாதான முயற்சி காலத்தில் தமிழ் ஊடக உலகில் ஏற்பட்ட கருத்து மாற்றம் என்பது சிங்கள தேசத்தை மட்டுமன்றி அயல் நாடான இந்தியாவைக் கூட சிந்திக்கவைத்தது.

ஏனெனில் போர்நடை பெற்றுக்கொண்டிருந்த காலத் தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான வாசல்கள்



யாவும் கண்ணி வெடிகளாலும் பொறிவெடிகளாலும் மூடப்பட்டு ஊடகங்களின் சுதந்திரமான பார்வை இங்கு தடுக்கப்பட்டது.

இதன்விளைவு பிரதான செய்தி வழங்குநர்களாக அரசே மாறியதால் அரசுக்குச் சார்பான ஒரு கருத்து நிலை தோற்றுவிக் கப்பட்டதோடு, புலிகள் தொடர் பாகவும் தமிழ்மக்கள் தொடர் பாகவும் அரசு வழங்கும் செய்தி களின் அடிப்படையில் இருந்துதான் ஒரு நிலைக்கு வர

கத்தின் கருத்துக்களும், அவர் களின் அரசியல் இலக்கும், மக்களுடனான புலிகளின் அனுகுமுறையும் மக்களின் ஆதரவும் எனப்புலிகள் தொடர் பான ஒருதெளிவான நிலைப் பாட்டிற்கு வரக்கூடிய ஏதுநிலை ஊடகங்களுக்கு ஏற்பட்டது.

இத்தகைய நிலையில் தான் தமிழ் ஊடகஉலகம் தமிழ்த் தேசிய உணர்வை தமிழ் மக்கள்

மத்தியில்' வலுப்படுத்துவதிலும் புலிகள் இயக்கத்தின் நியாயத் தன்மைகளை உரியமுறையில்' சொல்வதிலும் அதிக ஆர்வம்காட்டின.

இதனால்' புலிகள் இயக்கம் தொடர்பான கருத்துலக மாயைகள் கொஞ்சம் கொஞ்சமாக அகற் றப்பட்டு

சிங்களத்தேசம் அச்சத்தோடு எதிர்கொண்ட இந்த கருத்துலக அறிவுபூர்வ ஆயுதத்தை உடைப் பதற்கு இந்த நயவஞ்சக கொலைத் திட்டத்தை தீட்டிக்கொண்டு ஜி.நடேசன் அவர்களை கொன் றொழித்தும் விட்டது.

இரண்டாவது ஜி.நடேசன் அவர்கள் கொலைசெய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் களயதார்த்தம் முக்கியத்துவம் பெறுகிறது.

எதிரிகளின் கூர்மையான நயவஞ்சக சூழ்ச்சிகள் எங்கு அதிகம் நடைமுறைப் படுத்தப்படுகிறதோ அங்கு கூர் மையான பார்வைமிக்க ஊடக வியலாளர்கள் இருப்பது எதிரிக்கு ஆபத்தானது.

ஏனெனில் எப்படித்தான் மிகவும் இரகசியமான முன் தயாரிப்புகளோடு 'பாதுகாப் புகளோடும் எதிரி தனது திட் டங்களை நடைமுறைப்



படுத்தினாலும் அவைவெளிப் பட்டுவிடும் அதுவும் கூர்மை

அப்போது யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளிச்சிறைச் சாலையாக மாற்றப்பட்டு இராணுவ அராஜகம் அரங்கேற்றப்பட் டபோது நிமலராஜன் துணிச் சலாக செயலாற்றியமை அரசுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. அதன் விளைவு நிமலராஜன் கொலை செய்யப்பட்டார்.

இப்போது கிழக்கில் அரசுமேற்கெள்ளும் நிழல் யுத்தத் திற்கு தடையாக ஜி.நடேசன் இருந்ததோடு, அச்சம் தரும் தமிழ் ஊடகத் துறையின் நேர்மையான பார்வைக்கும் எதிரிக்கு அச்சுறுத்தலை கொடுத்ததால் ஜி.நடேசன் அவர்களை கொல்ல துணிந்துள்ளார்கள்.

ஜி.நடேசன் அவர் களின் மறைவு ஒரு ஊடகவிய லாளன் மறைவுஎன்ற வகையில் மனிதாபிமானம், மனித உரிமை கள். பத்திரி கையாளர் களின் சுதந் திரம், சுதந் திரக்கருத துக்களை, எதிர்பார்ப் பவர்கள் என்ற எல் லோருமே இதற்கான தமது எதிர் ப்பை எவ் வாறு தெரி விக்கப் போகிறார் கள்.

ஒரு ஊடகவியலாளன்

# எழுதும் கரங்கள் ஓயுமா...?

அவற்றில் நாம் இரண்டு காரணங்களை மட்டும் பார்ப்போம்.

அதாவது திரு.ஜி.நடே சனின் கொலையானது தனித்து ஒரு பத்திரிகையாளன் என்ற வரை யறைக்குள் மட்டும் உள்ளடக கப்படாது இன்றைய தமிழ்பத் திரிகை மற்றும் ஊடகஉலகின் மீது வைக்கப்பட்ட குறி என்பதே பொருத்தபாடுடையதாக இருக்கும்.

இரண்டாவது ஜிநடேசனின் கொலை நடைபெற்ற பிரதே சத்தின் இன்றைய களயதார்த்தம் முக்கியத்துவம் பெறுகிறது.

இனி இதில் முதலா வதாக கூறப்பட்ட இன்றைய தமிழ்பத்திரிகை உலகின் மீதான குறி என்பதை பார்ப்போம்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நான்காண்டு கால

வேண்டிய ஒரு நிலை தோற்று விக்கப்பட்டது.

இதனால் உண்மையில் தமிழ் தேசியம் என்பது ஒரு கருத்து நிலையோடு மட்டும் இருந்ததோடு. அது முழுமையாக மக்கள் மயப்படுவது நெருக்கடிகளைச் சந்தித்தவாறே இருந்தது.

இதன் விளைவாக எல்லா அனுகூலங்களையும் அரசு தன்னு டைய அரசஇயந்திரத்தின் வலுவூட்டலுக்கு ப'பன்படுத்தியும் கொண்டது.

ஆனால் நோர்வே யுடனான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து புலிகளுடன் ஊடகங்களின் தொடர்பு நெருங்கிவந்தது.

இதனால் புலிகள் இயக் புலிகளின் ஜனநாயகப் பண்புகள் வெளிப்பட்டன.

இத்தகைய புலிகள் தொடர்பான ஒரு கருத்தியல் மாற்றங்கள் ஏற்படக் காரணமாக

**சிறி.இந்திரகுமார்**

அமைந்தவைகளுள் ஜி நடேசன் போன்ற சிரேஸ்ட ஊடகவிய லாளர்கள் அச்சு ஊடகங் களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் எழுதிய, தெரிவித்தக்கருத்துக்கள் பாரிய பங்கை வகித்தன.

இது தமிழ்த் தேசியத் துக்கு உரம் போடுவதாக அமைந் ததோடு தமிழர்களின் தாயகத்தின ஒற்று மைக்குப் பலம் சேர்த்தது.

இந்த நிலையில் தான் மிக்க ஊடகவியலாளர்களின் கண்களில் இருந்து தப்பிவிடாது.

எனவேதான் கிழக்கில் இராணுவ புலனாய்வுத்துறையும் படையினரும் இணைந்து சமாதான முயற்சிகளுக்கான புதைகுழியை தோண்டிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அது வெளிப்படுத்தப்பட்டு விட்டால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அவமானப்பட நேரிடும் என்ற வகையில் ஜி.நடேசன் அவர்கள் குறிவைக்கப்பட்டார்.

இதனை முன்பு நடந்த யாழ்ப்பாண பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலைக்கூடாக நோக்கமுடியும்.

நிமலராஜனின் கொலையும் இதேசனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்திலேயே நடைபெற்றது.

திட்டமிட்டுக் கொலைசெய்யப் படுகின்றான் என்றால் அங்கு எதிர் அச்சம் அடைய தொட ங்கிவிட்டான் என்றேபொருள்.

ஒரு ஊடகவியலாளன் கொலை செய்யப்படுகிறான என்றால் அங்கு உண்மைகளை மறைக்க எத்தனிக்கப்படுகிறது என்றே பொருள்.

ஒரு ஊடகவியலாளன் கொலைசெய்யப்படுகிறன் என்றால அங்கு அபாயம் ஒன்று கருக் கொள்கிறது என்றே பொருள்.

ஆனால் ஒரு ஊடக வியலாளன் கொலைசெய்யப் படுகிறான் என்றால் அத்தோடு ஊடகத்தின் ப்ணி முடிந்து விட்டது என்றல்ல பொருள்.

இதனை கொலைஞர்கள் எப்போதும்புரிந்து கொண்டதே இல்லை.



## மதவடி மயிலர்

*பழைய படி மாமியார் கழுதை போல் ஆனாராம் என்று ஒரு பழமொழி இருக்கு தெரியுந்தானே...! எங்கடை சந்திரிகா அம்மையாற்றை செயலும் அது போலத்தான் கிடக்குது பாருங்கோ.. சமாதானத்தை சாட்டாக வைத்துக்கொண்டு தனக்கு வேண்டியதை தந்திரமா சாதிக்க நினைக்கிறாபோலை கிடக்குது. முந்தின அரசு சமாதானம் பேசேக்கை அதை எதிர்த்து... நோர்வேக்காரரையும் 'கெட்அவுட்' என்று சொல்லாத குறையாக நடந்துகொண்டவ தான் ஆட்சிக்கு வந்தவுடனேயே 'நோர்வே' காரற்றை கால்லை விழுந்தாவெல்லே.... எனக்கு அப்பவே தெரியும் அம்மணி ஒரு நாடகத்திற்கு தயாராயிட்டாவென்று..."*

*'சமாதானம் என்றா ஏதோ சங்கங்கடையில கூப்பன் சாமான் பங்கிட்டுக்குடுக்கிற விசயம் போலெல்லே அம்மையார் நினைச்சிட்டார் பாருங்கோ... இது பேரம் பேசிற அரசியலில்லை எண்டது அவாவுக்கு விளங்கேல்லை போலும்...*

*"அந்த ஜே.வி.பி.காரங்களோடை பேசிய பேரத்திலேயே அம்மணிசறுக்கத் தொடங்கிட்டார் என்று டில்வின் சில்வா புலம்பத் தொடங்கிட்டார் தெரியும் தானே...!*

*"வாக்குறுதி அளிக்கிறதை விடவும் இரண்டு மடங்கு வேகத்திலை வாக்குறுதிகளை அம்மணி மீறி விடுவார் எண்ட விஷயம் எங்களுக்குகெல்லே தெரியும்..."*

*"இதுக்குள்ளை கதிர்காமர் அண்மைம் டில்லி -வோஷிங்டன் கொழும்பு, கொழும்பு வாஷிங்டன் டில்லியென்று ஒரே பறத்தலாய் பறக்கத்தொடங்கிட்டார் பாருங்கோ... அவற்றை நோக்கம் ஒண்டும் சரியா இல்லை. இன்னொருவகையிலை இந்தியாவை இதுக்குள் முழுசாக் கொண்டுவந்து விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கிற திட்டம் போலை.. அமெரிக்காவுக்கு வாலையும் இந்தியாவுக்கு தலையையும் காட்டி விலாங்கு மீன் போலை பேய்க்காட்டப்பாக்கிறார் பாருங்கோ..."*

*"இதுக்குள்ளை கிழக்கிலை நடக்கிற சம்பவங்களைப்பார்த்தா அரசு சமாதானத்திற்கு வரப்போற மாதிரித் தெரியேல்லை.. பத்திரிகையாளர் நடேசன்ரை கொலையோடை அரசாங்கம் மீதான நம்பிக்கை 'அற்றுப்போச்சு பாருங்கோ.. சண்டித்தனம் தான் செய்யப்போகினம் போலை...."*

*சண்டியாய் எழுந்தால் நொண்டியாய் விழவேண்டும் என்ற காசி ஆனந்தனின் வரிதான் நினைவுக்கு வருகுது பாருங்கோ...!*

சட்டத்துடன் சுதந்திரம், அடுப்பிலுள்ள நெருப்பு: சட்டமில்லாத சுதந்திரம், தரையில் கிடக்கும் நெருப்பு -ஜார்ஜ் கில்லார்ட்

நேர் நோக்கு

# பயனற்ற வேலையே தொடர்கிறது

கோதுமை மாவின் விலை தொடர்பாக கடந்த வாரம் அரசாங்கம் பிறீமா நிறுவனத்துடன் போர் ஒன்றை ஆரம்பித்து நடத்திவருகிறது. அதன் விலை 27ரூபாவையும் கடந்து 31 ரூபாவரை உயரலாம் என தகவல் ஒன்று வெளியானதை யடுத்து இது தொடர்பான ஒரு இழுபறி ஆரம்பிக்கப்பட்டது.

கோதுமை மாவை அத்தியாவசியப்பொருளாக்கிய அரசாங்கம் அதன்விலையை நினைத்ததுபோல் உயர்த்த முடியாது எனவும் கூறியது. அதேவேளை பிறீமா அதிகாரிகளுடனான சந்திப்பின்போது விலையை அதிகரித்தால் ஒப்பந்தம் ரத்தாகும் என வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பர்ணான்டோபுள்ளே எச்சரித்தார். அவ்வாறாயின் மேலதிக செலவீட்டை அரசாங்கம் ஏற்க வேண்டும் தவறினால் தாம் நாட்டைவிட்டு வெளியேறப் போவதாக பிறீமா நிறுவனம் அறிவித்தது. இந்தியாவிலிருந்து குறைந்தவிலைக்கு மாவை இறக்குமதி செய்யப் போவதாக அரசாங்கம் பின்னர் அறிவித்தது.

இந்த இழுபறி தற்காலிகமாக முடிவுக்கு வரலாம். ஒன்றில் நிறுவனம் இணக்கப்பாட்டுக்குவரலாம் அல்லது அரசாங்கம் மானியம் வழங்காது இந்தியாவிலிருந்து மாவை இறக்குமதிசெய்யலாம்.

ஆனால் தீர்வு எதுவாயினும் அது தற்காலிகமானதாகவே இருக்கும் என்பது வெளிப்படை. ஏனெனில் கோதுமை மாவின் விலை அதிகரிப்பு என்பது இதுதான் முதற் தடவையல்ல. அது அதிகரிக்கவும் சிலவேளைகளில் சிறிதுகுறையவும்கூடும். அது சந்தை நிலவரத்தைப் பொறுத்தது என்பது சாதாரணவிடயங்களே.

ஆனால் சிறிலங்காவைப் பொறுத்து மற்றெல்லாவற்றையும்விட கோதுமை மா பாண் என்பவற்றின் விலை என்பது அரசியலில் இரண்டறக்கலந்தது. இவ்வளவிற்கும் கோதுமை இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பொருள் அல்ல. எவ்வாறாயினும் அது இறக்குமதி செய்யப்பட வேண்டியபொருளாகவே என்றும் இருக்கிறது.

வேறுபலநாடுகளிலும் இவ்வாறு உணவுப்பொருட்கள் தொடர்பான விவகாரம் ஆட்சியாளரைத்தீர்மானிப்பதாக இருந்தாலும் அவை பெரும்பாலும் அந்நாடுகளில் உற்பத்திசெய்யப்படுவதைச் சந்தைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல் காரணமாகவே எழுவதுண்டு. அல்லது வறட்சி புயல், வெள்ளம், என்பவற்றால் ஏற்படும் அழிவுகள் காரணமாக எழும் பிரச்சினைகளாக அவை இருக்கும். ஆனால் சிறிலங்காவின் அரசியலைப் பொறுத்தவரை ஆட்சியாளரைத் தீர்மானிப்பவையாக இனவாதத்திற்குச் சமனாக பாண்,கோதுமைமா, பருப்பு, என்பவை அமைந்துவருகின்றன.



1994ஆம் ஆண்டில் இடம்பெற்றதேர்தலில்கூட சமாதானம் ஏற்படுத்தப்படும் என்பதுடன் மா,பாண், பருப்பு என்பவற்றின் விலை குறைக்கப்படும் எனவும் வாக்குறுதி அளித்தே சனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்தார்.

1970ஆம் ஆண்டுத் தேர்தலில் இரண்டு இறாத்தல் இலவசஉணவு வழங்குவதாகக் கூறி ஆட்சியைக் கைப்பற்றிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கதலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி மாவின் இறக்குமதியை குறைத்ததால் ஏற்பட்ட "வரிசையுகம்" அவர்களைப் 17 ஆண்டுகள் ஆட்சி பீடம் ஏற முடியாமல் தடுத்தது.

ஆனால் எவ்வாறுதான் வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் கூறியவாறு மாவின் விலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க எந்த அரசாங்கத்தினாலுமே முடிந்ததில்லை. ஆட்சிக்குவரும்போது இருந்ததிலும் அதிகரித்தவிலையிலேயே அவை ஆட்சியைவிட்டுச் செல்கின்றபோது இருந்திருக்கின்றது.

இவையெல்லாம் சிறிலங்கா மக்களாலோ அல்லது அவர்களின் ஆட்சியாளராலோ பொருட்டாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. சிறிலங்கா மக்களைப் பொறுத்தவரை விலையைக் குறைத்துவழங்குவதாக வாக்குறுதியளிப் போருக்குவாக்குகளைப் போட்டு ஆட்சியிலேற்றுவதுடன் அவர்களின் கடமை முடிந்துவிடுகிறது. ஆட்சி பீடம்ஏறுவோர் விரும்பியவாறு விலையை அதிகரித்துவிட்டு தேர்தல் சமயத்தில் சிறிது விலைக்குறைப்பு செய்தால் போதுமென நினைக்கின்றனர். எதிர்க்கட்சியிலிருந்தால் விலையேற்றத்திற்கு ஆளும் கட்சியைக் குறைகூறிவிட்டு விலையைக் குறைப்பதாக வாக்குறுதியளித்தால் போதுமெனநினைக்கின்றனர். பின்னர் ஆட்சியைக்கைப்பற்றியபின் விலை அதிகரித்தாலும், எதிர்க் கட்சியினரையே குறைகூறுகின்றனர். இது ஒரு சுழற்சியாக இருந்து வருகின்றது. மாற்றம் எதுவும் ஏற்படுவதாக இல்லை. மாற்றம் ஏற்படவும்மாட்டாது.

ஆனால் இவ்வாறு தாம் உற்பத்திசெய்யாத அல்லது நாட்டில் உற்பத்திசெய்யப்படாத ஒரு பொருளுக்காக ஆட்சியாளரைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக இங்கு உற்பத்தியாகும் பொருள் ஒன்றிற்கான உள்ளீடுகள் அவற்றின் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு என்பவற்றுக்காகப் போராடினால் பயன் வீட்டிற்கும் நாட்டிற்குமானதாக இருக்கும் இதன் மூலம் மக்களின் உழைப்பு மக்களிற்கும் நாட்டிற்கும் கிட்டுவதன்மூலம் நாடும் வீடும் வளரவாய்ப்பேற்படும்.

வேலவன்

# திடீர் கரிசனை எப்படி வந்தது?

யாழ்ப்பாணத்தில் உள்ளஅரச நிர்வாக, நீதித் துறைகளில் திடீர் விழிப்புணர்வு சில நாள்களாக ஏற்பட்டுள்ளது. தடாலடியாக அவை சட்டம், ஒழுங்கு பற்றிய கரிசனையை வெளிப்படுத்தத்தொடங்கியுள்ளன.

கடந்தவாரம் அரச செயலகத்தில் சமூக விரோதச்செயல்களை கட்டுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் சிறிலங்கா பொலிஸ்தரப்பும் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை யாழ் நீதிமன்று பொலிசாருக்கு பிறப்பித்துள்ள உத்தரவொன்றில் வீதிகளில் தேவையற்று கூடி நிற்கும் இளைஞர்களையும் கூட்டமாக சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் சென்று அட்டகாசம் செய்பவர்களையும் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜராகுமாறு தெரிவித்துள்ளது.

இவ்வமைப்புக்களின் திடீர் நடவடிக்கைகள் ஏதோ நேற்றோ நேற்று முன்தினமோ தான் இதற்கான தேவைகள் ஏற்பட்டன போன்று உள்ளன. ஆனால் ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக முளைவிட்டு வளர்ந்த இந்த சமூக நெருக்கடியை இதுவரை இவைகள் கண்டும் காணாமலுமே விட்டு வைத்திருந்தன.

சாமானிய மக்களிடம் இருந்து இந்நெருக்கடிகள் தொடர்பாக ஏற்பட்ட விசனமும் அதிருப்தியும் குறைவானதல்ல அதைத்தடுக்கவோ எதிர்கொள்ளவோ வழியின்றித்தான் யாழ்ப்பாணத்தின் சிவில் சமூகம் இருந்து வந்திருக்கிறது.

சாதாரண மக்கள் இந்த சமூக விரோத அடாவடித்தனங்களை எதிர்க்க முடியாமல் இருந்தமைக்கு அவை குடா நாட்டை ஆக்கிரமித்து இருந்த சிறிலங்கா படையினரதும் பொலிசாரதும் தேச விரோத சக்திகளதும் அனுசரணையுடன் இடம்பெற்றமையே காரணமாகும்.

இதையெல்லாம் கண்மூடி மௌனமாகப்பார்த்தபடியிருந்த நிர்வாகங்கள் இப்போது திடீர் விழிப்புற்றமைக்கு எல்லாளன் படை என்ற அமைப்பின் வருகையே காரணமாகும். அண்மை நாள்களாக குடா நாட்டின் முரட்டுத்தனமான சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்த எல்லாளன் படை நடவடிக்கைகளை தொடங்கியிருக்கின்றது.

எல்லாளன் படையின் நடவடிக்கை சமூக விரோதக் கும்பல்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது. இதேவேளை மக்களிடம் நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது. இது ஏற்கெனவே செயலிழந்தது போலிருந்த அரச நிர்வாகங்களின் பொறுப்பை மேலும் கேள்விக்குள்ளாக்கும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது எனலாம்.

இதன் வெளிப்பாடாகவே அவை தற்போது விழித்துக்கொண்டுள்ளன.

ஆனால், அவற்றின் செயற்பாடு என்பது இது விடயத்தில் எவ்வாறு இருக்கப் போகிறது என்பதே கேள்வியாகும். சிவில் நிர்வாகத்தை ஒழுங்கமைக்கும் அவற்றின்



செயற்பாடுகள் சரியாக நடந்தால் பயனடையப்போவது மக்களே. அதனால் யாரும் விசனம் அடையப் போவதில்லை.

ஆனால், ஆக்கிரமிப்புப் பிரதேசமாக உள்ள யாழ்ப்பாணத்தில் அவை நியாயமான முறையில் இயங்கவில்லை, இயங்கப்போவதுமில்லை என்பதுதான் யதார்த்தமாகும். ஏனெனில் இச்சமூகவிரோத செயல்களுக்கு எதிராக சிறிலங்காப் பொலிசார் நடவடிக்கையை மேற்கொள்வது என்பது தமது நட்பு சக்திகளுக்கு முரணாகச் செயற்படுவதாகவே இருக்கும்.

அல்லது தமக்கு மேலதிக வருமானத்தை ஈட்டித்தரும் நபர்களை நீதியின் முன் நிறுத்தி தம்மைத்தாமே கைதுசெய்துகொள்வதாகவே இருக்கும். இத்தகைய சமூக விரோதிகள் முன்னர் சில சந்தர்ப்பங்களில் கண்துடைப்புக்கு கைதுசெய்யப்பட்டிருந்தார்கள்.

ஆனால், கைமாறப்பட்ட பணத்தின் பின்னர் அவர்கள் விடுதலையாகி பழையபடி முருங்கைமரம் ஏறியவர்களாகவே உள்ளனர்.

நீதிமன்ற உத்தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒரு விடயம். வீதிகளில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் கூட்டமாக நிற்போரால் வீதிவிபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதாகும் அது சரியானதே. ஆனால், சிறிலங்கா பொலிசார் வீதியால் மோட்டார் சைக்கிள்களையோ வாகனங்களையோ செலுத்துபவர்கள் அதற்குரிய அனுமதிகளை பெற்றிருக்க வேண்டும் எனக் கூறுகின்றார்கள்.

ஆனால், வாகனம் செலுத்துபவர்களில் எத்தனை பேர் அனுமதியைப் பெற்றுள்ளனர்? அல்லது அனுமதி பெற்றுள்ளவர்கள் எல்லோரும் போக்குவரத்துப் பொலிசாரை திருப்திப் படுத்தாமல் பயணம் செய்யமுடிகிறதா?

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிசார் உரிய ஆவணங்கள் இருந்தாலும் கையூட்டு பெற்றே வாகனங்களை போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கின்றனர்.

அதேதருணத்தில் ஆவணங்கள் எதுவுமற்றவை அவர்களிடம் அகப்படாமல் வேகமாகப் போய்வருகின்றன. இதனைக் கருத்தில் எடுத்துத்தான் அந்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

நீதிமன்ற உத்தரவுகளாலோ நிர்வாகங்கள் மேற்கொள்ளும் தடாலடியான செயல்களாலோ ஏற்படப்போகும் பயன் பெரும்பாலும் ஒன்றுமில்லை எனலாம். இவற்றின் அவசர அவசரமான இப்போதைய செயற்பாடுகள் கவனிப்பாரற்றுப் போயுள்ள நீதி, சட்டம், ஒழுங்கு என்பவற்றை இன்னோர் தரப்பு நிலை நாட்டுவதைத் தடுப்பதற்காகவே ஆகும்.


இன்னொருவகையில் எல்லாளன் படை போன்ற ஒன்றினால் சமூகவிரோத நடவடிக்கைகள் ஒடுக்கப்படுவதை தடுப்பதற்கானதும் ஆகும். அதாவது சமூக விரோதிகளை காப்பதற்கான முன்ஏற்பாடுகளும் ஆகும்.

யாழ்ப்பாண குடாநாட்டின் இதுவரையான நிலைமை இதைத்தான் உணர்த்துகின்றது.

ஞாபகன்

# அறிவே எமது ஆயுதம்





யாழ் நூலகம்

நமது நாட்டின் பக்கம் உலகின் கவனத்தைத் திருப்பி நாம் நமது நாட்டின் சிறப்புப் பற்றியும், ஆற்றல் பற்றியும் பாட்டிலேபாடி சொல்லிலே சொல்லிவிட்டோம். நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு, என்றெல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத் திற்குப்பின்னர் வழி முழுவதும் கயஸ் வாகனம், சினிமாவின் வருகை.எல்லாம் சரி எமது நாட்டின் கல்வி நிலை பற்றிக் கேட்டால் நாம் வெட்கித்தலை குனியும் நிலைதான் இருக்கிறது.

அண்மையில் யாழ் பல்கலைக்கழக உதவி நூலகரினால் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான நூலகமும் அதன் பயன்பாடும் பற்றி ஒரு கருத்தமர்வு நடாத்தப்பட்டது. "கற்றது கைமண்ணளவு" என்று தொடங்கியவர் நாம் கற்றறிந்தது 1 வீதமான அறிவுதான் மீதி 99 வீத அறிவை எங்கே? எப்படி? பெற்றுக்கொள்வது என வினா எழுப்பினார். உண்மையிலேயே 99 வீத அறிவை உலக நூலகங்களிலிருந்தே பெற்றுக்கொள்ளமுடியும் என்பதைத் தெளிவு படுத்தினார்.

நூலகம் பாடசாலைகளிலும் இருக்கவேண்டும். ஆனால் எமது வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளில் நாம் படிக்கும் காலம் தொட்டு இன்றுவரையும் ஒரு சிறிய அறையில் விளையாட்டு உபகரணங்கள், விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், மனையியற் கூட உபகரணங்களுடன் கூடவே நூலக புத்தகங்களும் அடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறைக்குள் இருப்பதற்கு இடமில்லை. அப்படியிருக்கும் போது எப்படி நல்ல நூல்களைத் தேடி எடுத்துக் கற்கமுடியும். அன்று பாட்டி சொன்ன பாண்டவர் கதையும் ஆத்திசூடியும், சிலப்பதிகாரமும், கந்த புராணமும்தான் எமக்குத் தெரிந்த சிறிய அறிவு. 21 ஆம் நூற்றாண்டு தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு பலவேலைகள் துரிதகதியில் நடந்தேறிக் கொண்டிருக்கும் உலகில் நாமும் ஒரு மூலையில் முடங்கி இருப்பது வேதனைக்குரிய விஷயமாகும்.

இன்று மாறிவரும் உலகில் கல்வித்திட்டங்களும், கல்விக்கொள்கைகளும் பிரிவு படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நூலகத்தை முன்னுரிமைப்படுத்தி கல்வித்திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேலையில் இலங்கையின் தென் பகுதியில் நூலகங்கள் கணனி மயப் படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் போது இலங்கையின் வட புறத்தில் குறிப்பாக வன்னியில் 1AB தரப் பாடசாலைகளில் கூட நூலகம் இல்லாத அவல நிலை. எமது பிரதேசத்தில் 1AB பாடசாலையின் நூலகத்திற்காக அரசால் நிதி ஒதுக்கப்பட்டு 11/2 ஆண்டுகளாகியும் கட்டடத்திற்கான அத்திவாரம் மட்டும் போடப்பட்டநிலையில் காலம் கழிந்து போகின்றன.

அதுமட்டுமல்லாமல் அரசால் வழங்கப்படும் நூலகத்திற்கான நூல்கள் பெரும்பாலும் இன்றைய கல்விக்கொள்கைக்கு அமைவாக அல்லாமல் அபிதான கோஷம், அபிதான சிந்தாமணி, அபிராமி அந்தாதி என்றும் கடைகளில் விற்பனையாகாத புத்தகங்களை மலிவுவிலையில் பெற்று அன்பளிப்புச் செய்துகொண்டிருக்கிறது. அரசின் இச்செயலானது குருடர்களைக் கூட்டிவைத்து "வழிகாட்டுவோர் வாழும் இடம்" என்று பெயரிடுவதற்கு ஒப்பானதாகும்.

ஒழுங்கான நூலகமோ நூல்களோ இல்லாத நிலையில் நூலகங்களைப் பயன்படுத்துவது பற்றிய அறிவு எப்படி வரும்? இத்தனை அவலங்களையும் கண்ணுற்று கேட்டறிந்த உதவி நூலகர் "கல்வியே எங்கள் மூலதனம் கத்தி வைக்கிறது ஆழும் இனம்" என்பதை தெளிவுபடுத்தினார். அவர் இறுதியாகக் கூறியது தத்தம் பிரதேசங் களையும், பிரதேச வாழ் மக்களையும் வளப்படுத்துவது அப்பிரதேச கல்விமான்களையே சாரும். சிறு துளியாகச் சேர்க்கப்படும் பணம் மூலம் மன வளத்தை ஏற்படுத்தும் உலக அறிவை உருப்படியான காரியத்தைத் தரும் நூல்களை வாங்கி வகுப்பறை நூலகத்தை உருவாக்கி வளப்படுத்த வேண்டும். அப்படிச் செயல் வடிவம் காட்டுவீர்களேயானால் என்னாலும் உங்களுக்கு உதவி செய்ய முடியும் என பெருந்தன்மையோடு கூறியதை கருத்தமர்வில் கலந்துகொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் வரவேற்றனர்.

உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால் எமது நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்கவேண்டுமானால் இந்த சூழ்நிலை மாற்றியாக வேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம் இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது நாம் எமது நாட்டிற்கு மறைமுகமாகச் செய்யும் துரோகமாகும். பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள மட்டுமல்ல, ஏற்கெனவே நமது மக்களுக்கு தெரிந்திருக்கும் (மூடநம்பிக்கைகள்) பல விஷயங்களை மறந்து போகச்செய்வதற்கும் பல நூல்கள் தேவை எனவே நூலகம் அவசியம் தேவை.

தமிழர்களின் அறிவு வளர்ச்சியும் அறிவுத் தேடலும்தான் சிங்கள அரசின் கண்களுக்குள் யாழ்நூலகம் அன்று தமிழர்களின் வலுமிகு ஆயுதமாகத்தென்பட்டது.

இதன் நீட்சியாகவே யாழ் நூலகம் குறிவைக்கப்பட்டு தீ மூட்டி எரிக்கப்பட்டது.

1981 ஜீன் 01 அன்று இனவெறி பிடித்த காமினிதிசாநாயக்காவின் நேரடி கண்காணிப்பில் தீமூட்டப்பட்ட நிகழ்வை இங்கு நினைவுகூறு வது பொருத்தப்பாடுடையதாக இருக்கும்.

இருபத்து மூன்று ஆண்டுகளின்பின்னான இன்றைய நாட்களில் கூட நூலகத்தின் தேவையும் அதன் அவசியத்தை எமக்கு உணர்த்திய படிஇருப்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

**பா.றஜினா**

# ஆதிச்சநல்லூர் காட்டும் — திராவிட நாகரீகத்தின் சான்றுகள்

இந்திய புதை பொருள் ஆய்வு மன்றத்தின் சென்னை வட்டத்தினர், 2800 ஆண்டுகள் பழைமை வாய்ந்த எழும்புக் கூடுகள் பன்னிரண்டைக் கொண்ட ஈமத்தாழிகளை ஆதிச்சநல்லூர் ஈமத்தாழிகள் இடுகாட்டில்சேதமில்லாமல் கண்டு பிடித்துள்ளனர். இங்கு பல்வேறு அகழ்வு அகழிகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட 100 வரையான ஈமத்தாழிகளில் இவையும் அடங்குகின்றன.

இந்த ஈமத்தாழிகளில் புராதன தமிழ் பிராமி எழுத்துகளை ஒத்த எழுத்துகளை கொண்ட துண்டங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஈமத்தாழிகள் 2-3 மீற்றர் ஆழத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன

தமிழ் நாட்டினுடைய புராதன கலாச்சாரத்தினதும் தென்னாசியாவின் எழுத்து வடிவங்களினதும் மூலங்கள் பற்றிய கோட்பாடுகளில் இந்தச் கண்டு பிடிப்புக்கள் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.



"தென்னிந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் ஆக முன்னதாக நிலவியது பெருங்கற்பண்பாடு (MEGALITHIC) என்றே பலரும் கருதுகின்றனர். ஆனால் அதற்கு முந்திய பண்பாட்டு சான்றுகளை ஆதிச்ச நல்லூரில். நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம். என்று மேற்பார்வையிடும் புதைபொருள் ஆய்வாளர் கலாநிதி T.சத்தியமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

தென்னிந்தியாவின் பெருங்கற் பண்பாடு கி.மு.3 ம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 3ம் நூற்றாண்டு வரை நீடித்தது.

ஆதிச்ச நல்லூர் இடுகாட்டை தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டவற்றில் ஆக முந்தியது என்று கூறிய திரு. சத்தியமூர்த்தி, அதற்கு அருகே குடியிருப்புக்கள் இருந்ததா என ஆராய்ந்து வருவதாகவும் அப்படிக்கண்டுபிடிக்கப்பட்டால் அதுவே, தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்படும் ஆக முந்திய குடியிருப்பாக இருக்கும் என்றும் கூறியிருக்கிறார். தமிழ் பிராமி எழுத்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மிக முக்கியமானது'' என திரு. மூர்த்தி கூறியிருக்கிறார்.

எலும்புக் கூடுகளின் பகுதிகள் காபண்-14 பரிசோதனைகளுக்கென ஹைதராபாத் தேசிய புவிபௌதிகவியல் ஆய்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த எழும்புக் கூடுகளுடன், கோதுகள், அரிசி மணிகள், எரியுண்ட அரிசிகள் மற்றும் புதிய கற்கால (NEOLITHIC)(கோடரி போன்ற) விவசாய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு மூன்று தாழிகளில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள், பெருங்கற் காலத்துக்கு முன்னதாக, இந்த மக்கள், தங்கள் இறந்தவர்களை அவர்கள் பயன்படுத்திய பொருட்களுடன் புதைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

முதற்சங்க நூல்களிலே, ஈமத்தாழி புதைப்பு முறை பற்றிய விவர மான விளக்கங்கள் காணப்படுகின்றன.

ஆதிச்சநல்லூர் அகழ்வு அகழிகளின் மேல் மண் அடுக்குகளில் கி.மு 3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ம் நூற்றாண்டு வரையான காலம் நீடித்த முந்திய வரலாற்றுக் கால மட்பாண்டங்கள் காணப்பட்டன. அவற்றுக்கு கீழே இருந்த மண் அடுக்குகளில் ஈமத்தாழிகள் காணப்பட்டன.எனவே ஆதிச்ச நல்லூரில் கண்டு பிடிக்கப்பட்டவை, அனேகமாக, கி.மு 7 வது அல்லது 8வது நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம். அதாவது, முதற் சங்க காலத்துக்கு முந்தியவையாக அவை இருக்கலாம். என கலாநிதி சத்தியமூர்த்தி கூறியிருக்கிறார்.



பிராமி எழுத்துக்கள் எலும்புக் கூடுகளுடன் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், எலும்புகளின் காலத்தை நிர்ணயிப்பதன்மூலம் எழுத்துக்களின் காலத்தையும் நிர்ணயிக்கமுடியும். இதுவரை காலமும் தொல்லெழுத்துக் கலை (PALAEOGRAPHY) முறையிலேயே எழுத்துக்களின் காலம் நிர்ணயிக்கப்பட்டது. இக் கண்டுபிடிப்பின்மூலம் அறிவியல் ரீதியான காலத்தை கண்டுபிடிக்கமுடியும்

கி.மு 600 ம் ஆண்டைச்சேர்ந்த பிராமி எழுத்துக்கள் சிறிலங்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஆதிச்சநல்லூர் கண்டுபிடிப்புகள் மிக மிக முக்கியமானவை என சிறிலங்காவின் புதைபொருள் ஆய்வு வாரியத்தின் ஆலோசகர் கலாநிதி S.U. தெரணிய கல தெரிவித்திருக்கிறார். இந்தக் கண்டுப்பிடிப்புகள் தென்னாசிய எழுத்துக்கலையின், மூலம், தொடர்பான சான்றுகளை முழுமையாக வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன என அவர் கூறியுள்ளார்.

சிறிலங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட இடுகாடுகளுக்கு அண்மையிலும் குடியிருப்புகள் இருந்ததற்கான சான்றுகள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது ஆர்வமூட்டுவதாகும்.

அத்தோடு ஆதிச்ச நல்லூரில் எலும்புக் கூடுகளுடன் பல செய்பொருட்களும் (ARTIFACTS) கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கிரிகைகளில் பயன்படுத்தப்படும் சிறிய மண் குவளைகள், கி.மு 7ம் நூற்றாண்டில் இருந்து கி.பி 2ம் நூற்றாண்டு வரையான பெருங்கற்காலத்தை சேர்ந்த சிவப்பு கறுப்பு மட்பாண்டங்கள் சுரண்டு வரி ஓவியங்களுடன் (GRAFFITI) கூடிய மட்பாண்ட துண்டுகள், இரும்பு ஈட்டித்தலைகள், கத்திவாதாரைகள், முழுநிறைவானவட்டம் உள்ளிட்ட வடிவங்களிலான சில்லுகள் (HOPSCOTCHES) முதலியன இவற்றுள் அடங்குகின்றன.

இவை எடைகளாக பயன்பட்டிருக்கலாம் என கலாநிதி தெரணியகல கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

**அனபாயன்**

# மீள் அடக்கம் செய்யப்பட்ட போர் வீரன்!

“ விக்ரோரியா குரொஸ் (The Victoria Cross) விருதானது பிரித்தானியாவின் அதி உயர் விருதாகும். 1856 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அரசி விக்ரோரியாவால் ஏற்படுத்தப்பட்ட விருது. எதிரிகளுடனான மோதலில் பெரிதும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய தைரியத்திற்காகவும் சாகசத்திற்காகவும் தியாகத்திற்காகவும் கடமையில் கொண்டிருக்கும் எல்லை கடந்த பக்திக்காகவும் இந்த ஞாபகப் பதக்க விருதானது வழங்கப்படுகிறது. முதலாம் உலகப்போரின் போது மொத்தமாக 633 ஆயுதம் தாங்கிய படைவீரர்களுக்கு விக்ரோரியா குரொஸ் விருது வழங்கப்பட்டது. இதில் 187 பேர் தமது துணிகரச்செயல்களினால் மரணத்தைத் தழுவிக் கொண்டமைக்காக இவ்விருது பெற்றிருந்தனர். ”

அடிப்படையில் கிராமப்புறத்திலிருந்து வந்து (லண்டன்) Manor Park பகுதியில் குடியேறிவாழ்ந்துகொண்டிருந்த Eli & Alice cornwell தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வனான John Travers Cornwell எப்போதும் Jack ஜக் என்றே அழைக்கப்பட்டுவந்தார். தனது பதின்னான்காவது வயதில் பாடசாலைக் கல்வியை நிறுத்திக்கொண்டJack ஒரு மாலுமியாக வேண்டும் என்று பெருவிருப்பம் கொண்டிருந்தார். இவரது கவனம் எப்போதுமே கடற்படையை (The Royal Navy) நோக்கி ஈர்க்கப்பட்டுக்கொண்டிருந்தபோதும் முதலாம் உலகப்போர் ஆரம்பிக்கும் வரை இவரது பெற்றோர்கள் இவர் கடற்படையில் இணைவதற்கான அனுமதியை வழங்க மறுத்திருந்தார்கள். பெற்றோர்களின் இணக்கத்துடன் படையில் இணைந்து கொள்வதற்கு போர் இவருக்கு வழிவகுத்தது. 1915ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் Jack தனது வேலையை (as a deli very boy - பொருட்கள் விநியோகம் செய்யும் சிறுவன்) தூக்கி எறிந்து விட்டு, உள்ளூர் படை சேர்ப்பு அலுவலகத்திற்கு சென்று கடற்படையில் தன்னை இணைத்துக் கொண்டார். ட்ராம் (tram) வாகனத்தின் சாரதியாக பணியாற்றி வந்த இவரது தந்தையார் Eli முதலாம் உலகப்போர் ஆரம்பித்து எழுச்சி பெற்ற போது இராணுவத்தில் இணையும் வயதைத் தாண்டிய நிலையிலும் ஓர்மத்துடன் இராணுவத்தில் இணைந்து பிரான்சில் சண்டையில் பங்கெடுத்துக் கொண்டார். இராணுவ சேவையில் இணைவதற்கான பட்டியலில் கையொப்பமிட்ட போது என்றைக்கும் பிரித்தானிய இராணுவ வரலாற்றில் மதிப்பிற்குரியவர்களின் பெயர்வரிசையில் தனது பெயரும் சித்திரமாக செதுக்கப்படுமென்று Jack இடம் எந்த எண்ண முமே இருக்கவில்லை.

சிறுவயதில், 15 வயதில் தனது ஆரம்ப பயிற்சியை Plymouth இல் அமைந்திருந்த Keynham கடற்படை பயிற்சியில் பெற்றுக்கொண்டார். அப்போது இவரிடமிருந்த மிகுந்த உணர்வுடன் கூடிய புத்திகூர்மையினதும் நுணுக்கமாக அவதானிக்கும் வேகமான விவேகத்தினதும் அடிப்படையில் இவர் மேலதிக பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு போர்க் கப்பலின் தளத்தில் மிகவும் பொறுப்பான பதவியானதுப்பாக்கிக் கட்டுப்பாட்டாளருக்கான பயிற்சிக்காகவே இவர் அப்போது தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நாட்களில் துப்பாக்கித் தலைமைப்பதவியானது அனுபவத்தில் முதிர்ச்சியடைந்த பக்குவப்பட்ட ஒரு மாலுமி வகிக்கும் பதவியாக இருந்தது. அதி தீவிரமான இந்தப் பயிற்சியானது மட்டுமட்டாக பாடசாலைப்படிப்பிலிருந்து விடுபட்டுக்கொண்ட ஒரு இளைஞனுக்கு கடினமாக இருந்தது. ஆனால் ஒரு நட்பான லண்டன் காவலதிகாரியின் உதவியுடனும் வழிகாட்டலிலும் பயிற்சியில் இவர் தேர்ச்சிபெற்று, முதல்வகுப்பு இளைய கப்பலோட்டியாக (as Boy Seaman, First Class ) வெளியேறினார்.

Scotland Rosyth கப்பற்படைப் பிரிவில் இணையும்படி கிடைத்த தந்திக்கிணங்க உயிர்த்தெழுந்த திருநாளை ஒட்டிய திங்களன்று Jack குடும்பத்தினரிடமிருந்து விடைபெற்று புறப்பட்டார். அப்போது இவரது தாயார் பரபரப் படைந்து இவரைப் பற்றி கவலைகொண்டார். ஆனால் அம்மா, இதற்காகவே நான் இணைந்தது. இது எனது கடமை. நான் கட்டாயமாக சென்றாகவேண்டும் என்று Jack கூறினார். அவ்வாறாக Rosyth வந்தடைந்தவர் அங்கு ஆச்சரியத்துடன் உணர்வூட்டும் காட்சியை கண்டார். அங்கு போர்க்கப்பல்களும் காவற்கப்பல்களும் நங்கூரம் இட்டிருந்தன. படங்களில் மட்டுமே பார்த்திருந்த இவரது கனவு உண்மையானது. நாளடைவில் இவர் HMS Chester மூன்றாவது கப்பற்படையில் நியமிக்கப்பட்டார்.

மே 31 1916 ஆம் ஆண்டு மாலை 5.40 இற்கு வடகடலிற்கு அருகாமையில் Jutland இல் காவற்கப்பலான (சண்டைக் கப்பல்) Chester நான்கு ஜேர்மனிய கப்பல்களின் தாக்குதலிற்கு உள்ளாகியது. இத்தாக்குதல் பின்னைய நாட்களில் “Battle of Jutland'' என்று அழைக்கப்பட்டது. Chester இன் துப்பாக்கிகள் ஜேர்மனிய கப்பல்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியவையாக இல்லாதிருக்க, சில நிமிடங்களுக்குள்ளே 17 தடவைகள் Chester தாக்கப்பட்டது.

இப்பலமான தாக்குதலிற்கு பின்பும் ஒரே ஒருவர் மட்டும் பீரங்கித்தாங்கி சுழல் மேடையில் நின்றுகொண்டிருந்தார். துப்பாக்கிக் கண்காணிப்பாளராக Johu Travers Cornwell துப்பாக்கிக்கட்டுப்பாட்டிலிருந்து கிடைக்கும் கட்டளைகளை ஏற்று, அவற்றிற்கேற்ப துப்பாக்கிக்கும் இலக்கிற்குமிடையிலான அவசியமான தூரத்திருத்தங்களை தளத்தில் நின்று செய்துகொண்டிருந்தார். சொல்லப் போனால் அப்போது இவர் பதினாறரை வயதையும் தாண்டாத ஒரு சிறிய இளைஞனாகவும் கடற்படையில் இணைந்து ஒரு வருடம் கூட பூர்த்தியாகாத நிலையிலேயுமே இருந்தார். ஆனால் குறுகிய மாத காலப்பகுதியில் இவர் பெற்றுக்கொண்ட ஒழுக்கமான கடற்படைப் பயிற்சி எடுத்துக்கூறியது. Cornwell உயிருக்கு ஆபத்தான காயத்துக்குள்ளாகிய நிலையிலும், ஏனைய சிப்பந்திகளின் இறப்பிற்கும் தன்னைச் சுற்றியிருந்த உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையிற்கு மத்தியிலும் சண்டை முடியும்வரை நிதானமாக கட்டளைகளை ஏற்று அவற்றிற் கேற்ப அங்கேயே நின்று செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் கரைக்குக் கொண்டுவரப்பட்டு Grimsby வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வரை உயிருடனிருந்த Cornwell யூன் 2,1916 ஆம் ஆண்டு வைத்திய சாலையில் காலமானார். படைத்தலைமைக் காரியாலயத்திலிருந்து கிடைக்கப் பெற்ற தந்தியுடன் தாயார் மருத்துவமனையை நோக்கி வந்துகொண்டிருந்த போதும் இவருடைய இறுதிவார்த்தைகளை “எனது தாயாருக்கு எனது அன்பை தெரிவியுங்கள். அவர் வந்துகொண்டிருக்கிறார் என்று எனக்குத் தெரியும்.....'' தாயார் கேட்பதற்கு முன்பே இவர் சாவைத் தழுவிக் கொண்டார். கையிலிருந்த சிறிதளவு பணத்துடன் இவரது குடும்பத்தினர் மிகவும் அமைதியான முறையில் இவரை அடக்கம் செய்தார்கள். ஆனால் இவரது விபரம் வெளியுலகத்திற்கு தெரியவர மக்கள் இவருக்கான அங்கீகாரத்தை உரிமையுடன் கோர, செப்டெம்பர் மாதத்தில் இவர் மீளடக்கம் செய்யப்பட்டார். மிக நெரிசலான மக்கள் கூட்டத்திற்கு மத்தியில் Manor Park இடு காட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு மீளடக்கம் செய்யப்பட்டார்.

**அன்பரசு**

யுத்த வீரனின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் விருதான விக்ரோரியா குரொஸ் (Victoria Cross) விருதை ஒரு இளம் வீரனான இவருக்கு வழங்குவதற்கு அரசர் (King Georgs V) இணக்கம் தெரிவித் திருந்ததை அடுத்தும் இவரது இந்த மீளடக்க வைபவம் வியக்கத்தக்க வகையில் மிக சிறப்பாக நடைபெற்றது. ஒரு மாதத்தின் பின் இவரது தந்தையார் இதே இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார். தனது மகனுக்கு வழங்கப்பட்ட விக்ரோரியா விருதை பார்ப்பதற்கு இவரது தந்தை உயிருடன் இருக்கவில்லை. ஒக்டோபர் 25,1916 ஆம் ஆண்டு அவர் காலமானார். இவரது தாயார் நவெம்பர் 16,1916 ஆம் ஆண்டு தனது மகனுக்கு அரசரினால் (King Georgs V) வழங்கப்பட்ட விக்ரோரியா குரொஸ் விருதை மாளிகையில் (Buckingham Palace) பெற்றுக் கொண்டார்.

இவரது வீரமரணத்தை ஞாபகம் கொள்ளும் முகமாக ஒவ்வொருவருடமும் இவர் அடக்கம் செய்யப்பட்ட இடு காட்டில் சிறியளவில் விழா ஒழுங்கு செய்யப்பட்டு இன்றும் Jack cornwell நினைவு கொள்ளப்பட்டு வருகிறார். Manor Park பகுதியில் இவரது பெயரில் வீதி ஒன்றும் (Jack cornwell Street) உள்ளது.

(HMS Chester) கப்பலதிகாரியிடமிருந்து (Jack ) இன் தாயாருக்கு கிடைத்த கடிதத்தில் ஒரு பகுதி:

வலியை தாங்கிக்கொள்ளும் மெச்சத்தக்க மனோபலத்தையும் துணிவையும் மே 31 ஆம் திகதி சண்டையில் வெளிக்காட்டிய உங்கள் மகனைப் பற்றி அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்கள் என்பதை அறிவேன். அவர் கடமை மீது கொண்டிருந்த பக்தி எங்கள் எல்லோருக்கும் ஒரு உதாரணமாக அமைந்தது. அவரது சாவிற்கு காரணமான அந்தக் காயங்கள் சண்டை ஆரம்பித்த சில நிமிடங்களுக்குள்ளே ஏற்பட்டவை. ஆனால் அவர் உயிருக்கு ஆபத்தான நிலையிலும் உறுதியுடன் தொடர்ந்தும் துப்பாக்கிக்கு அருகாமையில் கட்டளைகளுக்காகக் காத்திருந்தார்.

அவரது துப்பாக்கி எதிரியை தாக்கக்கூடியதாக இல்லாத போதும். பத்து சிப்பந்திகளில் அனைவரும் காயங்களுக்குள்ளாகியும் இறந்துபோன பின்பும், அவர் ஒருவர் மட்டும் அவ்வாறு உயிருக்கு ஆபத்தான நிலையில் நின்றுகொண்டிருந்தார். தனது தேவையை அவர் உணர்ந்திருந்தார்.அதனால் கடுமையான துப்பாக்கிச் சூட்டிற்கு மத்தியில் தனது தைரியமான மனதோடு அவர் தொடர்ந்தும் அங்கேயே நின்று காத்துக் கொண்டிருந்தார். இந்த போரில் மகனை இழந்த உங்களுக்கு எனது ஆச்சரியத்தை தெரிவிக்கமுடியவில்லை. இவ்வளவு தைரியமான ஒரு சிறுவனின் தாயாருக்கு வேறு எந்த ஆறுதலையும் தர முயற்சிக்கவில்லை. ஆனால் அவர் எப்படியிருந்தார், என்ன செய்தார், எவ்வாறான உதாரணத்தை எமக்கு கொடுத்தார் என்பதைப் பற்றி நிச்சயமாக சொல்ல வேண்டும். இளைஞர்களின் உணவு விடுதியில் அவரது பெயருடன் திகதியையும் அத்தோடு “விசுவா சத்துடன் சாவை நோக்கி'' என்ற சொற்களையும் தாங்கிய தாம்பாளம் ஒன்று வைக்கப்படும் என்பதை திடமான நம்பிக் கையோடு தெரிவிக்கின்றேன். எதிர் காலத்தில் சிலசமயம் நீங்கள் அங்கு வரக்கூடிய சந்தர்ப்பம் இருந்தால் அதை நீங்கள் அங்கு பார்க்கலாம் என நம்புகிறேன். ◎

# சுகவாழ்வை நாடி...

கிளிநொச்சிவாசிகள் புதிய வாழ்க்கைத் தூரத்தை நோக்கி நகர்கிறார்கள். அல்லது நகர்த்தப்படுகிறார்கள். கடந்த காலங்களில் பொருளாதாரத் தடை,காரணமாக, மனித வாழ்வின் 21ஆம் நூற்றாண்டின் எந்த ஒளிக் கீற்றையும், காணாத யுத்தப் புரத்துவாசிகள் இப்போது சிறிது சிறிதாக நவீன மனுக் குலத்தின் இயல்போட்டத்தை நோக்கி நடைபயில்கிறார்கள்.

உணவுப்பொருள்,மருந்து, எரி பொருள், அழகுசாதனங்கள் கட்டடப்பொருள் என அடுக்கிச் செல்லக்கூடிய பட்டியலுள், எமக்கு மறுக்கப்பட்ட பொருட்கள் இருந்தன இது ஒருவகை சித்திரவதை இதனை இங்குவாழ்ந்த தமிழ்மக்கள் அனுபவித்தார்கள்.

நவீன சாதனங்களும் தகவல் தொழில்நுட்பயுகமும், எமக்கு இப்போதுதான் அண்மித்திருக்கிறது. இது நீடிப்பதும் இடைநிறுத்தப்படுவதும் சர்வதேசத்தின் மனச்சாட்சியில் தங்கி இருக்கிறது.

இவ்வாறு நெருக்கடிக்குள் வாழ்ந்த மக்கள், வயது,பால் வேறுபாடுகளைக்கடந்து உளவியல்ரீதியாக கடுமையாகப்பாதிக்கப்பட்டார்கள். இவற்றின் வெளிப்பாடாக மனஅழுத்தம், Mehtalstress" உள்ளானார்கள் (இருக்கிறார்கள்)



எமது விடுதலைக்கு விலைகொடுத்துக்கொண்டிருக்கும் பகுதியில் அதிகசுமையை முகங்கொடுத்திருக்கும் இம்மக்கள் இந்த மூச்சுவிடும் (இடைவேளை) காலப்பகுதியில் இயல்பை நோக்கி நிமிர்கிறார்கள். அதன் தெறிப்பாக கடந்தவாரம் கிளிநொச்சி கலாசார, மண்டபத் தில், மருத்துவர் யூடி தலைமையில் ஆரம்பமான யோகாசனப் பயிற்சிப் பட்டறை மிகமுக்கியமான தாகக் கொள்ளலாம்.

பாரம்பரிய கீழைத்தேய விஞ்ஞான முறை தேகப்பயிற்சியான யோகாசனம், தேகத்துக்கும், மனதுக்கும் இடையேயான உறவு நிலையின் அவசியம் (Rapprt) பற்றி அதிகமாக வலியுறுத்துவதுடன், அதற்கூடாக ஆன்மீக ஆற்றல், அதன்பின் இந்தவாழ்வின் அர்த்தம் என்பவற்றை நோக்கி இழுத்துச் செல்கின்றது.

கடந்த பல தசாப்த்ங்களாக மேலைத்தேய மருத்துவத்தை எமக்கான ஒரேயொரு உயிர்காக்கும் மருத்துவமாக வரித்துக்கொண்ட நாம் இயற்கைமருத்துவம், எமது சொந்த மருத்துவம் பற்றிய அக்கறையீனம் விழிப்புணர்வு இல்லாத மூடமூட்டத்துள் திளைத்திருந்தோம். உடலுக்குத் தீயன தரக்கூடிய அனைத்தையும் அதிகமாக பழக்கிவிட்ட மேற்கத்தவர்களே, தமது மருத்துவமுறையையும் இங்கு விதைத்தார்கள் பிறப்பால் கீழைத்தேயத்தவர்கள் பழங்குடிமக்களாகிய நாம் செயற்பாடுகள், விழுமியங்களை அவர்களதிலிருந்து ஒட்டவைத்துக் கொண்டு விட்டோம். விஞ்ஞானயுகத்தில் கைஓங்கியவர்களாக மேலைத் தேயத்து வாழ்வுமுறைகளில் நாம் தவிர்க் கமுடியாதபடி ஈடுபட்டாலும் எம்மிடமிருந்து மேலைத்தேயத்தவர் தழுவிக்கொண்ட பலநல்ல வாழ் வுமுறைகளை நாம் மீட்டு எடுக்கவேண்டும்.

யோகாசனம் அத்தகைய ஒன்று. பலதரப்பட்ட எமது மக்கள் வாழ்வுத் துன்பங்களுக்கெல்லாம் தீர்வு தரக்கூடிய மனதோடு நெருக்கமுடைய இக்கலையை கிளிநொச்சி மருத்துவர் அமைப்பு முன்னெடுக் கின்றமை அதன் ஆரோக்கிமான எதிர் காலத்துக்கான 'சமிஞ்ஞை' என்றால் மிகை யாகாது.

மனதோடு சம்பந்தப்பட்ட கலையாக இது இருக்கின்றது எனவே இதன் சில குணாம்சங்கள் மனதிலிருந்து வெளிப்படும் பிரார்த்தனை, ஜெபம், மனதை ஒருமைப்படுத்தலோடு நெருங்குகின்றது.

இரண்டு, காதலர்களின் விடயமும், இந்த மனோசக்தியின் வெளிப்பாடே. ஏனெனில் இருவர் காதலிக்கும் காலத்தில் அவர்கள் வெளிப்படுத்தும் ஒருவகை சக்தியானது ஒருவரிலிருந்து மற்றவருக்குச் சென்றடைகின்றது இதனை ஒரு காந்தசக்தி எனக்கொள்ளலாம் அதனால்தான் விரகதாபம் மேலிட்ட காதலர்கள் துன்பப்படுகிறார்கள். 'ப்ரானா' என வடமொழியில் குறிப்பிடப்படும். இவ் வலுவானது. வாழ்வு வலு எனப்படுகிறது. உடலுக்கு இவ்வாறான வாழ்வுவலு இல்லாத வாழ்வே இல்லை. உடலுக்கும் மனதுக்கும் இடையிலான தொடர்பை, 'PNIE SYSTEM' (Psych - neuro immun) - endocteine system) எனக் கூறலாம். உளத்தாக்கத்தால், பக்கவிளைவுகள் பல்வேறு உடல் உறுப்புச் செயற்பாடின்மையையும் விளைவிப்பதை நாம் அறிவோம்.

உடலுக்கும் மனதுக்குமப்பால், ஆரோக்கிய வாழ்வென்ற பிறிதொரு பரிமாணம் உள்ளது. அதனை சக்தி உடல் எனவும் இதனை மனோபலம் சார்ந்தது எனவும் குறிப் பிடலாம்.

எனவே எமது எண்ணங்களே எமது வாழ்வு அம்சத்தைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகக் காணப்படுகிறது. ஏற்கெனவே குறிப்பிட்ட வாழ்வுவலுவானது உயிர்த்திரவம் ஒன்றால் கட்டாயமாக சூழப்பட்டே இருக்கும். இதுவே, உடல்புறமாகவும் இருக்கும். இதனை 'அவுறா' Aura இதில் உள்ளக அவுறாவும். வெளிஅவுறாவும் என இரண்டு உள்ளது. இவற்றை நவீன கணனிப்புகைப்படக்கருவிகள் கொண்டும் படம் எடுத்துள்ளனர். அதனை அந்தப்படங்கள் வெளிப்படுத்தியுமுள்ளன. நோய்க்குறிகள், அவை வரும்முன்னரே இந்த உயிர்த்திரவத்தில் ஏற்பட்டுள்ள வித்தியாசங்களால் கண்டுபிடிக்கப்படுகின்றது.

எண்ணங்களின் பின்புலமாக வலுவும்

**பெருமாள் கணேசன்**

உள்ளது. அதனால் மன அழுத்தம், மனஎழுச்சி சீர்கேடு என்பன எமது உயர்த்திரவம் அல்லது வலுவுடலையும், அதனைத்தொடர்ந்து மெய்உடலையும் பாதிக்கின்றன.

இந்த உயிர்த்திரவத்தை வசப்படுத்திக் கொள்ளல்மூலம் மெய்யுடலில் உள்ள நோய் அம்சங்களைக் களையலாம். நீங்கள் தியானம் செய்பவராக அல்லது மனோசக்தி மிக்கவராக இருப்பின் அந்த உயிர்த்திரவம் உங்களில் சக்திமிகுந்த பொன்னிறமாகக் காணப்படும். பக்திமான்களான சமயப் பெரியார்கள், மனோசக்திமிக்கவர்கள் தமக்குள் இந்த வகையான அதிவலுவைத்தோற்றுவிக்கின்றனர்.

இந்தப்பூமியில் வலு எனப்படுவது சூரியன். வாயு, நிலம், மற்றும் தருக்கள் என்ற வடிவத்தில் காணப்படுகின்றன இவை ஒவ்வொன்றிலிருந்தும் உங்கள் மீது புத்துணர்ச்சி பாச்சப்படுகின்றன. தென்அமெரிக்க. ஐரோப்பா, தென்.கிழக்கு.ஆசியா, அமெரிக்கா, இலங்கை, கனடா போன்ற நாடுகளில் இதன் மருத்துவ வடிவமான (Pranic healing) மனோசக்தி மருந்தும் கைக்கொள்ளப்படுகிறது Choakoksui "ச்சோ ஆக்குச்சுயி" என்பவர்தான் பிலிப்பின்ஸ் நாட்டில் இத்துறையில் விற்பன்னராகவும் இதனை உயிர்ப்பிப்பவராகமு ள்ளார்.



இதயநோய், மாரடைப்பு, குருதிதாழ், உயர்அமுக்கங்கள், நீரிழிவு,வாயு, குடற்குறைபாடுகள், சிறுநீரக, சிறுநீர்ப்பை செயற்பாட்டின்மை, கர்ப்ப உறுப்புநோய்கள். ஆஸ்மா, மூட்டுவாதம், ஆண்மைக்குறை, ஒற்றைத்தலைவலி, கண்காது குறை, எக்சிமா, மன அழுத்தம், புகை குடி விருப்பு, எலும்பு தசைசீரின்மை, கட்டிகள், புற்றுநோய்கள், என்பவற்றிற்கு. மனோசக்தி மருத்துவத்தினால் தீர்வுகாணலாம்.

வருடாவருடம், 6 மாதத்துக்கு ஒருதடவை மனோசக்தி முறைக்கான இலங்கை நிலையம், பயிற்சிபெறுநர்களை இந்தியாவுக்கு அனுப்புகின்றது. இவர்களுக்கு உயர் கற்கைநெறிகள் நடாத்தப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள். மார்ச்சில் ஆரம்பமாகும் கற்கை நெறிக்கு 52பேரும் அதில் 2 இலங்கை மருத்துவ இளம்மானிகள் செல்வர்.

மனோசக்தி மருத்துவத்தை கற்பிக்க சுமிலாசா, பெங்களூரில் இருந்து இலங்கைக்கு வந்திருந்தார். இவர் இந்த மருத்துவத்தை செயற்படுத்துவதற்கு பயிற்றுவித்தார். இவர் புற்றுநோயைக்குணப்படுத்த மனோசக்தி மருத்துவம் சிறப்பானதென்றார் Kirilian Photography கிரிலியன் போட்டோக்கிறபி" என்ற புகைப்பட முறைமையினூடாக நோய்களைக் கண்டறியலாம் என்பதை அவர் உறுதிசெய்தார். அமைதியின்பிறப்பிடமான வழிபாட்டிடங்கள், அதில் சஞ்சரித்தலே இந்த மன அமைதி, மனோசக்தி மருத்துவத்தின் தோற்றுவாய் என்றார்.



எனவே கிளிநொச்சி மருத்துவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட யோகாசன, பிரார்த்தனைப் பயிற்சிப் பட்டறை எம்மையும் மனோசக்தி மருத்துவத்தின் சிறப்பை உணரப் பண்ணி அதிலும் எம்மவர்களை ஈடுபடச் செய்யும், ஒரு புத்துணர்ச்சி மிகுந்த வாழ்வோட்டத்தை இங்கு ஏற்படுத்தித் தருமென எதிர்பார்க்கலாம்.

மனவலிமை குன்ற இப்பிரதேசத்தில் பல்வேறு காரணிகள் காணப்பட்டன. சொந்த இருப்பிடத்தை விட்டு களைந்தோடியமை, உற்றார் உறவினரைப் பிரிந்தமை, தொழில் இழந்தமை, திருமணம் நடக்காமை, போரில் செத்த உறவுகள். உழைக்கமுடியாது காலம் சென்றுவிட்டமை, எனப்பல்வேறு காரணிகள் எம்மைச் சூழ்ந்து கொண்டேயுள்ளன. இவற்றில் இருந்து எம்மை சமநிலைக்குக்கொண்டுவர ஒரே ஒரு வழி தியானமுறை, யோகாசனமுறை, இயற்கைமுறை மருத்துவ உத்திகளே.


எம்முன்னோர் முனிவர்களாக, தவ வல்லமையுடையவர்களாக தீர்க்கதரிசிகளாக, ஞானிகளாக, இருந்தார்கள் என இதிகாச புராணங்களும், சமய இலக்கியங்களும் எடுத்தியம்பின "அக்குபஞ்சர்" என்றழைக்கப்படும் ஊசியால் குத்தி நோய் குணப்படுத்தும் மருத்துவமுறையும், குறிப்பாக இந்து சமூகத்தினிடமிருந்தே வேறுநாடுகளுக்குச் சென்றுள்ளது. நாம், எமது முன்னோர்களை மூடநம்பிக்கையுடையவர்களாக ஒட்டுமொத்தமாக முடிவெடுத்து அவர்கள் எழுதிவைத்தவற்றை அடுத்தசந்திக்கு எடுத்துவரவில்லை. அவர்கள் செய்தவற்றை தொடர்ந்து கடைப்பிடிக்கவில்லை. இவை எமது சமூகத்தின் முட்டாள்த்தனமென்றே சொல்லவேண்டும். அதைவிட அவற்றின் வலிமைபற்றி ஆராயும் ஆராய்வூக்கமும் எமது வாழ்வுமுறையில் இல்லாமை கவனிக்கப்படாமை என்றெல்லாம் குறிப்பிட வேண்டியுள்ளது.

ஆயுர்வேத மருத்துவ முறைகளையெல்லாம் இன்றும் கூட எமது மக்கள் பெரிதும் பின்பற்றுவதில்லை. அதைவிட ஆயுர்வேதத்தைக் கண்ணியமாக நடைமுறைப்படுத்தும். "பரிகாரிகளும்" இல்லை. சுதேச மருத்துவச் சிந்தனை மீண்டும் எம் மக்கள் மத்தியில் முளை கொள்ளச் செய்யவேண்டும்.

காலாச்சார மண்டபத்தில் நடாத்தப்படும் தேகப்பியாசச் செயற்பாடுகளும், தியானச் செயற்பாடுகளும் இச்சமூகத்தால் வளர்த்து எடுத்துச் செல்லப்படுவதோடு இளம் சந்ததிக்கு விசேடமாகக் கருத்தரங்குகள் மூலம் செய்முறைகள்மூலம் இதுபற்றிய விருப்பையும் தெளிவையும் ஏற்படுத்துதல் இந்தப் பண்பாட்டு போராட்டத்தின் பிறிதொரு அங்கமாக இருக்கும் என்பது வெள்ளிடை மலை.

ஒரு சிறு சம்பிரதாயத்தைஉருவாக்குவதற்கும்,எல்லையற்ற அளவு வரலாறு தேவைப்படுகிறது. -ஹென்றி ஜேம்ஸ்

> "அண்மையில் போராளி மலைமகள் எழுதிய 'புதிய கதைகள்' சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. அந்த சிறுகதைத் தொகுதியில் வெளியாகியுள்ள 'எனது மனிதர்கள் - 01' எனும் சிறுகதை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. விரைவில் இந்நூல் தொடர்பான விமர்சனம் வெள்ளி நாதத்தில் பிரசுரிக்கப்படும்."




# எனது மனிதர்கள் - 01



என்ன. முடிவை எடுப்பது என்று தெரியாத நிலையில் நாங்களிருந்தோம். தளம்முழுதும் நூல்கள். வழமையாக நாங்கள் நகர முன்பே அவற்றை நகர்த்தி விடுவோம். கொக்குவிலிலிருந்து சாவகச்சேரி, அங்கிருந்து கிளிநொச்சி, பின்னர் துணுக்காய், இப்போது ஒட்டுசுட்டான் என்று பத்திரமாய் நாம் நகர்த்தி வந்த சீதனம் அவைதான். சீதனத்துக்கு இப்போது ஆபத்து வந்துவிட்டது.

வெற்றி நிச்சயம் நடவடிக்கைப்படையினரை நெடுங்கேணிப்பகுதியில் இடைமறித்துப்புலியணிகள் போரிட்டுக் கொண்டிருந்தன. ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்த எல்லாத்தளங்களும் பாதுகாப்பான தூரத்துக்கு நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தன. மக்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டிருந்தார்கள். ஊர்தி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக எங்களுடைய தளத்தைச் சேர்ந்த எல்லாரும் எமக்குத் தெரிந்த வழிகளிலெல்லாம் முயன்று கொண்டிருந்தோம். மூன்று நாட்களாகியும் முடியவில்லை.

எங்களது பிரிவுக்குவர முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசியல் பணி செய்து, காலங்காலமாக அந்தப் பகுதியிலேயே இருந்த நிலையான நிர்வாக அலகு ஒன்றுடன் பழகியவர் ஒருவர் எங்களோடிருந்தார். அங்கு போய்க்கேட்டுப் பார்க்கலாம் என்று அவர் சொன்னார்.

அது ஒரு பாரிய நிர்வாக அலகு. அவர்களுடைய பொருட்கள் காடு முழுதும் நிறைந்து கிடந்தன. அவர்களிடமிருந்த அனைத்து ஊர்திகளையும் பயன்படுத்தினால்கூட, பதினைந்து நாட்களாவது எடுக்கும் அவர்களின் பொருட்களைமட்டும் நகர்த்தி முடிக்க. தொடர்ச்சியாக அவர்களது ஊர்திகள் ஓடிக்கொண்டிருப்பதும் எமக்குத் தெரியும். என்னவென்று போய்க் கேட்பது?

யோசனையாக இருந்தது. ஆனால் வேறு வழியே இல்லை. புறப்பட்டோம்.யார்? முன்னாள் முல்லை மாவட்ட அரசியல் போராளியும் நானும். பொறுப்பாளரை எனக்குப் பழக்கமில்லை. வீதியில் கண்ட அறிமுகம் மட்டுமே. எனவே நமது "முன்னாள்" அவரோடு கதைப்பதென்றும் தேவையேற்படும் நேரங்களில் நான் அவரை பார்த்துச் சிரிப்பதென்றும் முடிவு செய்தோம்.

சரி. காடு, கரம்பைகளுக்குள்ளால் உந்துருளியைச் செலுத்திக்கொண்டு போய்ச் சேர்ந்து விட்டோம். வாயிற்காப்போரிடம் பொறுப்பாளரைச் சந்திக்கவேண்டும் என்றோம். பொறுப்பாளர் இல்லை என்ற பதில் வந்தது. விழுந்தது இடி.

"எப்போது வருவார்?"

"அவர் வரமாட்டார் பிள்ளை. பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும் இடங்களில் அவர்நிற்கிறார். இங்கு இனி வரமாட்டார். எங்கு, எப்போது நிற்பார் என்பதையும் சரியாகச் சொல்ல முடியாது"

ம். சரியா கதை? காலையில் யார் முகத்தில் விழித்தோம் என்று யோசிக்கத் தொடங்கினோம்.

"அப்படியானால் இங்கு யார் நிற்கிறார்கள்?"

என்றார் "முன்னாள்"

"அடுத்தவர் நிற்கிறார் பிள்ளை"

ஆகா. ஆகா! காலையில் நாங்கள் யார் முகத்தில் விழித்தோமோ தெரியவில்லை. ஆனால் நாங்கள் விழிக்க முன்பே நரி வந்து எங்கள் முகத்தில் விழித்துவிட்டுப் போயிருக்க வேண்டும். அடியடா சக்கை. அடுத்தவர் நிற்கிறாரா! அவ்வளவும் போதுமே.

அவரை ஒருமுறை வரச் சொல்வீர்களா?"

மிகவும் பவ்வியமாகக் கேட்டு வைத்தோம். அவர் எழும்பி உள்ளே போனார்.

அடுத்தவரை நாங்கள் மிக நன்றாக அறிவோம். முற்றத்து ஒற்றைப்பனை போன்ற அவரின் நெடிதுயர்ந்த தோற்றம் தான் எங்களை அவரிடம் ஈர்த்திருக்கவேண்டும். புன்னகை தேங்கிக் கிடக்கும் முகம். விழிகளில் எப்போதும் நேசம் தெரியும். என்னவென்று சொல்ல முடியாத விருப்பம் எங்கள் எல்லாருக்கும் அவரிடம். முன்பு எங்களுடையதும் அவருடைய சில வேலைகளும் நடைபெறும் இடம் ஒரே இடமாக இருந்ததால், அடிக்கடி சந்தித்திருக்கின்றோம். ஒரு வார்த்தை பேசியதில்லை. காணவில்லையென்றால் கண்களால்தேடியிருக்கிறோம். கண்ட பின்பும் கதைக்கவில்லை. வீதியில் காணும்போது சிரிப்போமா என்று யோசிப்பதற்குள் கடந்து விடுவதால் சிரித்ததில்லை. சிரிப்பதா, விடுவதா என்ற முடிவை இடம்பெயர்ந்து வன்னி வந்த பின்னர்கூட எடுக்கவில்லை.

இந்த அழகில் ஊர்தியை அவரிடமே கேட்பது என்று தீர்மானமே எடுத்துவிட்டோம். இதற்கு முன்னைய பிறவிகளிலும் பழகியவர் என்பது போன்ற உணர்வு எங்களுக்குள் இருந்ததால், முதன் முதலாக அவருக்கும் எங்களுக்குமிடையே நிகழவுள்ள உரையாடலிலேயே உதவி கேட்பதற்கு நாங்கள் தயங்கவில்லை. கேட்டவுடன் செய்வார் என்ற நூறு வீத நம்பிக்கை [illegible]ளுக்கு.

அவர் வந்தார். புன்னகைத்தார். என்ன விடயம் என்றார்.

நாற்காலிகளில் இருந்த நாம் எப்போது எழும்பி நின்றோம் என்பது இன்றுவரை நினைவில்லை. விடயத்தைச் சொன்னோம்.

எல்லா ஊர்திகளுமே தொடர்ச்சியாகப் பொருட்களை ஏற்றிக் கொண்டிருப்பதாலும், அவசரமாக நகர்த்தி முடிக்க வேண்டி இருப்பதாலும் எங்களுக்கு உடனடியாக உதவ முடியாத நிலையில் தான் இருப்பதாக குறிப்பிட்டார்.

நான் 'முன்னாளைப்' பார்த்தேன். முகம் தொங்கிப் போய்க் கிடந்தது. அதற்கும் கீழே என் முகம் தொங்கியது. மண்டைக்கண்ணால் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தோம். ஆளைப்பற்றி நாம் நினைத்திருந்ததெல்லாம் பிழையோ?

உழவு இயந்திரம் ஒன்றின் ஒலி எங்களைப் பூமிக்கு அழைத்து வந்தது. பொருட்களை இறக்கிவிட்டு வெற்றுப் பெட்டியோடு வந்த உழவுஇயந்திரத்தைப் பார்த்த அவர்,

"இதை உங்களுக்குத் தரட்டுமா?"

என்றார். எங்களுக்கு வந்தது கெட்ட கோபம். உழவு இயந்திரத்தின் பின் பெட்டிக்கு பக்க மூடிகள் இல்லை. துருவுபலகைக்கட்டைபோல தட்டையாக இருக்கும் பெட்டியில் பொத்தகங்களை மடையன்கூடக் கட்டிப்போக மாட்டான். எங்களை ஏற்றிப்போகட்டாம். நாங்கள் செய்யும் வேலை அவருக்குத் தெரியும். எதை நாம் ஏற்றிப் போவோம் என்றும் தெரியும். எல்லாம் தெரிந்தும் இவர் என்ன கதைத்துக்கொண்டிருக்கிறார்?

மூக்கு நுனிவரை வந்த கோபத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

"நாங்கள் விறகு ஏத்திறதுக்கு உங்களிட்ட வாகனம் கேக்கேல்லை"

என்றேன் சடாரென்று.

அப்போதும் அவர் முகத்தில் புன்னகை தேங்கி நின்றது. விழிகளில் அதே நேசப் பார்வை. இது நேசமுமில்லை. ஒரு நசலுமில்லை. இந்த ஆளின் பிறப்பு வாசியே இப்படித் தானாக்கும்.

"அப்படியெண்டா உங்களுக்கு என்ன வேணும்?"

"லொறிதான் வேணும்"

எல்லாம் நாம் ஏற்கனவே தந்துவைத்திருக்கிறோம் என்ற தோரணையில் போனது எங்கள் பதில்.

"சரி பாப்பம். இண்டைக்கு சாமானோடை போன லொறி இரவுதான் திரும்பி வரும். அதைக் காலையில உங்களிட்டை அனுப்பி விடுறன்"

என்றார்.

"ம்"

என்றோம்.

"அப்ப நான் போகட்டோ?"

என்றார்

"ம்"

என்றோம். அவர் போய்விட்டார். நாமும் புறப்பட்டோம். கோபம் அதி உச்சத்தில் இருந்ததால் வார்த்தைகள் கொஞ்ச நேரம் வரவில்லை. வந்த வார்த்தைகள் பின்னர் நிற்கவுமில்லை.

"ரெண்டாவதே இப்படியெண்டால், தற்செயலாக நாங்கள் வந்த நேரம் முதலாவது நிண்டிருந்தா என்ன நடந்திருக்கும்?"

தளத்தில் நின்ற ஏனையவர்களால் நாங்கள் சொன்னதை நம்பவே முடியவில்லை.

"சீ. அந்தாள் அப்பிடிச் செய்யாது. நீங்கள்தான் ஏதோ பிழையா..."

— மலைமகள்

என்று ஏதோ நீண்ட வசனம் கதைக்க வெளிக்கிட்ட ஒருத்தி நான் பார்த்த பார்வையில் வாயை மூடிக்கொண்டாள்.

எனக்கும்தான் நம்ப முடியவில்லை. ஆளில்தான் பிழையோ? ஆளை நாம் பார்த்த பார்வையில் பிழையோ? ஒருவரின் பார்வை வேண்டுமானால் பிழைக்கலாம். ஒட்டுமொத்தப் பார்வையும் பிழைத்துப் போனதோ?

அவர் பற்றிய கடும் விவாதங்களோடு பாய்களை விரித்தோம். உறங்கிப் போனோம்.

11.30க்கு நான் காவல் கடமைக்குப் போனேன். நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டிருந்த எனக்கு நெடுங்கேணிப் பகுதியில் வெடிக்கும் எறிகணையின் ஒலி அமுங்கிப் போய்க் கேட்டது

தூரத்தே மரங்களுக்கு மேலால் ஒளிக்கோடு தெரிய, யோசனையோடு பார்த்தேன். சிறிது நேரத்தின் பின் அது ஒரு ஊர்தியின் ஒளி என்பது விளங்கியது. கவலையாக இருந்தது. சண்டை தொடங்கினால், களத்தில் நிற்பவர்களுக்கும் ஓய்வில்லை. பின்னணியில் நிற்பவர்களுக்கும் ஓய்வில்லை.

ஊர்தி சடுதியில் எங்களுடைய ஒழுங்கைக்குள் திரும்பியது. யாரது? இந்த நேரத்தில்?

இன்னும் கொஞ்சம் நெருங்கிவர, அது ஒரு பார ஊர்தி என்பது புலப்பட, எல்லாம் விளங்கி விட்டது.

"லொறி வந்திட்டுது. எழும்புங்கோ. லொறி வந்திட்டுது எழும்புங்கோ"

நேரம்12.40 எல்லாரும் எழும்பி ஓடி வாசலுக்கு வந்து பாரஊர்தியைப் பின்புறமாக உள்ளே எடுப்பதற்கு உதவி செய்யப்போனார்கள்.

"முட்டுது. முன்னுக்கு எடுங்கோ. கொஞ்சம் திரும்புங்கோ. சரி எடுங்கோ. ஆ.சரி. ஆ சரி வரலாம் வரலாம்...."

என்ற கதம்ப ஒலிகளின் நடுவே உள் நுழைந்த பார ஊர்தி தன் இயந்திரத்தை நிறுத்தியது. ஓட்டுநர் இருக்கையிலிருந்து இறங்கியவரை விளக்கு வெளிச்சத்தில் பார்த்த எங்களுக்குப் பேச்சும் வரவில்லை. மூச்சும் வரவில்லை. "வாங்கோ" என்று சொல்ல வாய்வரவில்லை. எல்லாரும் சங்கடத்தோடு ஆளை ஆள் பார்த்தோம்.

இப்போதும் அவர் முகத்தில் புன்னகை தேங்கிக் கிடந்திருக்கும். விழிகளில் நேசம் நிறையவே இருந்திருக்கும். எங்களுக்குத்தான் இருளில் கண் தெரியவில்லை.

கீழே நின்று நாம் தூக்கிக்கொடுக்க, மேலே நின்று வாங்கி அடுக்கி, நாம் சொன்ன இடத்துக்கு எம்மைக் கூட்டிப்போய் பொருட்களையெல்லாம் இறங்கி வைத்துவிட்டுப் புறப்பட்டபோது பயணத்தூரத்தைக் கணிப்பிட்டு, மனதில் குத்துமதிப்பாகக் கணக்குப்போட்டு எரிபொருளை மெல்ல அருகே எடுத்து வைத்துவிட்டுத் தயக்கத்தோடு அவரைப்பார்த்தோம். வேண்டாமென ஒரு தலையசைவில் மறுத்து, மறுபடியும் ஒட்டுசுட்டானில் எம்மை விட்டபோது எட்டு மணியாகிவிட்டிருந்தது.

மனிதத்தின் அளவை மதிப்பிட முடியாமல் மலைத்துப் போய் நாம் நிற்க, பார்வைத் தூரத்திலிருந்து பார ஊர்தி மறைந்தது.

இதற்கு முன்னரும், இதன் பின்னரும் ஒரு வார்த்தையேனும் பேசாத எங்கள் மதிப்புக்குரிய மனிதனே,

போய்வா.

பிறவிகள் கடந்தும் சந்திப்போம்.

சட்டத்தின் நெறிமுறைகள்,எப்பொழுதுமே, சுதந்திரங்கள் புதைக்கப்படும் கல்லறையாய் அமைந்துள்ளன. -ஆல்பியான் டூர்கி

# கை தவறிப்போன கவிதை...

25-04-2004அன்று மட்டக்களப்பில் தேசவிரோதிகள் நடத்திய தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கட்டன் வாமகாந் ஒரு போராளி மட்டுமல்ல ஒரு கவிஞனாக, கட்டுரையாளனாக என ஒரு ஆளுமை நிறைந்தபோராளி.

தன்னுடைய சக்கர நாற்காலியில் ஊர்ந்து ஊர்ந்து அவர் வெள்ளிநாதத்தில் பல படைப்புகளை படைத்தவர்.

அடிப்படையில் வாமகாந் ஒரு இதழியலாளன் அவரின் நினைவாக இந்த கவிதையினை இங்கு பிரசுரித்துஇந்த வீரனுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்வதோடு இவரோடு வீரச்சாவை தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.



போருள் இணைந்த உறவே
சமாதானத்துள் இழந்தோம்

உன் முகமறிந்து
எவ்வளவு இறுமாந்தோம்

பல்துறை ஆளுமை
தோளோடிருப்பதால்
கவலை மறந்தும்
கடுந்துணிவு கொண்டும்
இருந்தோம்

முறுவலிக்கும் உதடுகள்
ஆளமான விடயங்களையும்
அனாசயமாய் உதிர்க்குமே!

ஓடித்திரியும் எமக்கு
சக்கர நாற்காலியுடனிணைந்த
உலகளாவிய அறிவு
இன்றுவரை வியப்புதான்

என்றாலும் நண்பனே!
சமாதான வேளையில்
துரோகமுன் உயிர்
பறித்தது?

நம்பமுடியவில்லை நண்பனே

உன் நினைவும் கனவும்
உயிருள்ளவரை
உறவாடும் துணிவோடு
பணி தொடர்வோம்.

# சர்வாதிகாரிகள்

குருதியும் உடல்களும் சேர்ந்த
ஒருநாற்றம்
கரும்புச்செடிகளுக்கிடையே
விரவியிருந்தது.
வயிற்றைகுமட்டச்செய்கிற
பூவிதழ் போல்
அது ஊடுருவுகிறது.
தென்னைகளுக்கு இடையே உள்ள
புதைகுழிகளில்
சிதைந்த எலும்புகளால்
பேச்சிழந்து போன
சாவின் சலசலப்புகளால்
நிரம்பியிருக்கின்றன.

தொப்பிகள் தங்கப்பின்னல்கள்
கழுத்துப்பட்டிகளுடன்
ஊறுபாடு பொறாத
சர்வாதிகாரி பேசுகிறான்.
சிறிய மாளிகை
புதிய கடிகாரமாய்
ஒளிர்கிறது.

சிலசமயங்களிலே
கையுறை போட்ட வெடிச்சிரிப்புகள்
ஊடுபாதைகளைக்கடந்து
இறந்தகுரல்களுடனும்
புதிதாகப் புதைக்கப்பட்ட
நீலம்பாரித்த உதடுகளுடனும்
இணைந்து கொள்கின்றன.

முடிவேயில்லாமல்
விதைகளை நிலத்தில் தூவுகின்ற....
ஒளி இல்லாமல்கூட
வளருகின்ற
பெரிய குருட்டு இலைகள் கொண்ட
மரத்தைப்போல்
அழுகைகளைக்காணமுடியாது.
அளவேயில்லாமல்
வெறுப்பு வளர்ந்து விட்டது.
கூரலகிலே
சகதியும் மௌனமும்
நிறைந்த சதுப்பினுடைய
கோரமான நீரின்மீது
வீசுகாற்றே வீசு

தமிழாக்கம்: வின்சென்ற் புளோறன்ஸ்
மூலம்: சண்டே ஒப்சேவர்

**கவிஞர் பற்றிய குறிப்பு**

# பப்லோ நெருடா

மிக இளம் வயதில் அதாவது தனது 24 ஆவது வயதில் இலங்கையில் சிலிநாட்டு தூதுவராக பணியாற்றிய நெப்ராலி றிக்காடோ றெயெஸ் (NEFTALI RICARDO REYES) இன் புனை பெயரே பப்லோ நெருடா ஆகும். சிலி நாட்டு கொம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி உறுப்பினரான அவர், தனது நெருங்கிய நண்பரும் சல்வடோர் அலன்டே (salvador allende) க்கு சார்பாக 1970ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் இருந்து விலகினார். அதன் பின் அவர் பரிசிற்கான சிலி நாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டார்.

1971ஆம் ஆண்டில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு அவர் இறந்துபோனார். அலெலன்டே அரசின் ஆட்சியை கவிழ்த்த ஈவிரக்கமற்ற இராணுவ புரட்சியின் சிறிதுகாலத்தின் பின் புற்றுநோயால் மரணமானார்.

இலங்கையில் சிலி நாட்டு தூதுவராக இருந்த பொழுது அவர் 55-42ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை என்ற முகவரியில் உள்ள வீட்டில் வசித்தார் என அறியப்பட்டுள்ளது. அங்கு வைத்து அவர் தனது கவிதைகள் சிலவற்றை எழுதினார். 1957 ஆம் ஆண்டில் உலக சமாதான கவுண்சில் அமர்வுகளுக்கென இலங்கை வந்த அவர் தனது உரையை "பசுமையின் முத்தான தீவுகளின் புஷ்பமான, அழகின் கோபுரமான இலங்கை வாழ்க" என்று ஆரம்பித்தார்.

"முப்பது வருடங்களுக்கு முன் உனது கரைகளுக்கு வாழ்க்கை என்னைக் கொண்டு வந்தது. எனது நூல்களில் சிலவற்றை வெள்ளவத்தையில் எழுதினேன். எனது கருத்துகளுக்கும் கவிதைகளுக்கும் இந்தத்தீவுதான் அடிநாதமாக அமைந்தது. இதனுடைய பெருந்தன்மையான மக்களை நான் அறிந்திருக்கிறேன். அவர்களை நேசித்திருக்கிறேன்" என்று அப்போது கூறினார் அவரது கவிதையொன்றை மேலே காணலாம்.

# மனசின் போர்

அமைதி சூழ்ந்த இரவு
ஆளரவமற்றுக் கிடந்த ஒழுங்கையில்
எப்போவோ இருந்துவிட்டு,
சைக்கிள் சத்தம்...

ஊர் உறங்கு மெனினும்,
உறக்கம் தொலைத்த இரவெனக்கு...

இன்று அதிகாலை
சபிக்கப்பட்ட
எனது ஊரின்
தெருக்களைக் கடந்து
வந்தேன் நான்...

யாழ்ப்பாணம்
ஆரியகுளம் சந்தி கடந்து,
பல நாய்களும், ஓரிரு மனிசரும்
சில காக்கிச் சட்டைகளும்
உலவிய அதிகாலையில்
ஸ்ரான்லி வீதியில்
நண்பனுடன்
ஈருளியில் வந்தேன் நான்...

மண் குவியலாய் கிடந்த
சின்ன வயசில்
"தெய்வம்"படம் பார்த்த
வெலிங்டன் தியேட்டரின் முன்
அவள்
கெஞ்சிக்கொண்டிருந்தாள்...

"ஒருக்கா வாங்கோ
கெதியா வாங்கோ...
என,
அவள் கெஞ்ச
அருகினில்
கண்களால் கெஞ்சியபடி
இன்னுமொரு சோதரி...
சிலிங்குடன்
துவக்கைக் கொழுவிக்கொண்டு நின்ற
செவிட்டு "ஆவுரஞ்சிக் கல்லு"
அசையாமல் நின்றது.

அந்நேரம் அவள் வீட்டில்
என்னமும் நடந்துகொண்டிருக்கலாம்

தினாவோ, கில்லியோ
என்னவோ ஒரு
"நிழல் சண்டியர்கள்"
அவளது
வீட்டை உடைத்துக்கொண்டிருக்கலாம்
அவளது தாயை, தங்கையை
தம்பியை
என்னவும் செய்ய
அருகதை உண்டவர்களுக்கு...

காக்கி போர்த்த
"ஆவுரஞ்சிக் கல்லுகளின்"
ஆசீர்வாதங்களுடன்
என்னவும் செய்ய
அருகதை உண்டவர்களுக்கு...

கண்களை மூடித் தூங்கவென
முயற்சிக்க,
முன்னால் நிற்பது
அந்தச் சோதரியின்
பயத்தில் ஊறிய கண்கள்....

எனக்குள் நான் அழுது என்ன,
அவளுக்கான தீர்ப்பு...?

மனசின் காதுகள் வெடிக்க
குரல்வளை பிய்ய
அவள் கத்துகிறாள்

சோதரா
நீயுமா?

துணிகைமாறன்

நன்மை செய்ய விசேஷமான சந்தர்ப்பங்களுக்காகக் காத்திராதே. சாதாரண நிலைமைகளையே பயன்படுத்த முயல். -ஜீன் பால் ரிஷ்ட்டர்

# குழந்தைநாதம்

## இலட்சியம்



பிரதீப் ஒரு சிறந்த விளையாட்டு வீரன். அதேபோன்று இவனது சகமாணவனான காந்தனும் திறமைசாலியாகவே இருந்தான். பாடசாலையில் எந்த விளையாட்டுப் போட்டியாக இருந்தாலும் பெரும் பரபரப்பே ஏற்பட்டுவிடும். ஆனால் பிரதீப் வென்றாலும் தனது வெற்றிக்களிப்பை காட்டிக்கொள்வதில்லை காந்தனோ வென்று விட்டால் போதும். எல்லோரையும் ஒரு குலுக்கு குலுக்கியே தீருவான். ஆனால் ஏன் பிரதீப் இப்படி அமைதியாக இருக்கிறான் அவனிடம் உள்ள ஆற்றலுக்கும் அறிவுக்கும் எவ்வளவு பெருமைப்பட வேண்டியவன் அடக்கமாக அமைதியாக சாதாரணமாக இருக்கிறான் என்ற கேள்வி சகமாணவரிடம் இருந்தது.

ஒருநாள் சகமாணவனான சுரேஸ் பிரதீப்புடன் இவனுக்கு இருந்த அதிக நட்பையும் அவன் மீதுகொண்ட அன்பும் இவனிடம் எப்படியாவது இதைக் கேட்க வேண்டும் என்று தோன்றச்செய்தது. பிரதீப் ஓய்வுநேரங்களில் எங்கும் செல்லமாட்டான் வீட்டிலிருந்து விளையாட்டுக்களையே தொலைக்காட்சியூடாக பார்த்தும் கேட்டும் கொண்டிருப்பான். அதேபோன்று அன்றும் சுரேஸ் பிரதீப் வீட்டுக்குச் செல்லும்போது பிரதீப் கிரிக்கெட்டை மிக ஆர்வமாக பார்த்துக்கொண்டிருந்தான். இருவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதும் பிரதீப்பிடம் சுரேஸ் கேட்டான் ஏன் பிரதீப் நீங்கள் வெற்றியால் மகிழ்ந்ததை நான் ஒரு போதும் கண்டதில்லையே? எதையும் சாதாரணமாக ஏற்கிறீர்கள் என்று. அப்போது பார்த்துக் கொண்டிருந்த படத்தை நிறுத்திவிட்டு பிரதீப் சொன்னான் ''மாபெரும் வெற்றியை அடையுமுன் அதை அடைவதற்கான நம்பிக்கையைப் பெற வேண்டும்'' இப்பொழுது நான் பெறுவது வெற்றிக்கான நம்பிக்கையே தவிர, இது பெரிய வெற்றியல்ல. எனது இலட்சியம் வெற்றி பெறுவது மட்டுமே தவிர பெருமை பாராட்டுவதில்லை சுரேஸ் என பதிலளித்தான்.

சுரேஸ் அவனைப் பாராட்டினான். பிரதீப் வெற்றி வீரன் மட்டுமல்ல கொள்கைக்கும் இலட்சியத்துக்கும் எடுத்துக்காட்டானவன் என்பதை புரிந்து கொண்டான் சுரேஸ்.

ஈழவிழி

## கிராமப் பாடம்

குயில்கள் பாடம் படிக்கின்றன
கூ,கூ என்று பாடி!
மயில்கள் பாடம் படிக்கின்றன
மாவோ என்றே ஆடி!

கா, காப் பாடம் படிக்கிறது
கரைந்து செல்லுங் காக்கை
கீ, கீப் பாடம் படிக்கிறது
கீற்றில் குந்துங் கிளியும்!

கீச்சுப் பாடம் படிக்கிறது.
கிளையில் உள்ள குருவி!

மூச்சில் பாடம் படிக்கிறது
முரலிச் செல்லும் வண்டு!

அம்மா வணக்கம் பயிலுகின்றாள்
அறையில் தொழுது நின்று!
சும்மா தம்பி தூங்க லாமோ?
சோம்பல் நீக்கி எழுவாய்!

எழுக எழுக என்று பாடும்
எங்கும் கோவில் மணிகள்
தொழுக தொழுக விரைந்து பாடம்
தொடங்க வேண்டும் தம்பி.

## கவிதைத் துளிகள்

**அன்னை**

ஆயிரம் உறவுகள்
அருகிருந்தாலும்
ஆறுதல் தருகின்ற உறவு.

**நட்சத்திரங்கள்**


விடியல் உதிர்க்கும்
இரவுப் பூக்கள்.

**அந்தி**

சிவந்த கன்னம்
யார் அடித்ததோ!

கு. தவசீலன்

## கைவண்ணம்



ஆ.ஓவியா

## வாரம் ஒரு குறள்



ஒழுக்கம் என்பது மனிதருக்கு உள்ள உயரிய பண்புகளில் ஒன்றாகும். இவ் ஒழுக்கமானது இப் பூமியிலுள்ள ஒவ்வொரு பிறவிக்கும் முக்கிய காரணமாக அமைவது. இவ் ஒழுக்கம் என்பதனை கடமை, நியதி, ஒழுங்கு என்று எல்லாம் பல பெயர் கொண்டு அழைப்பர். இவ் ஒழுக்கத்தை ஒரு சீராகக் கடைப்பிடிப்பவனை உயர்ந்தவன் என்றும் ஒழுக்கமானது தவறும் பட்சத்தில் தாழ்ந்தவன் என்றும் கூறுவர். ஒழுக்கத்தினை ஒவ்வொரு மனிதர்களும் தமது உயிரினும் மேலானதாகக் கருதுகின்றனர். இதனையே வள்ளுவப் பெருந்தகையும் உயிரைவிட மேலானதாக ஒழுக்கத்தைக் கருதியே.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**

என்ற குறளினை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 38

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சு | கா | பு | ஹ் | ம் | ஜெ | எ |
| வ | ஆ | ய | டு | ன் | யு | னை |
| பா | பீ | ப | பூ | னி | ப | ண் |
| ரா | நா | ட | ல் | ய் | ட் | ஐ |
| ம | ன் | லி | ஜ் | க் | ஸ் | ர |
| ஞ் | சி | சி | டு | னா | ல | க |
| வி | சீ | ல் | ம | ர | ஷ் | வ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 36 இன் விடைகள்

01. நுங்கு
02. பனம்பழம்
03. பனையோலை

01. மலர்
02. புஷ்பம்

### சொற்சிலம்பம் - 36 இன் பரிசுக்குரியவர்

ஜெ.நிருபன், தரம் 09
யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

### சொற்சிலம்பம் - 36 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ம.யோகாந்தினி, 137 பண்டாரிக் குளம், வவுனியா.
02. செ.மேனகா, தரம் 04, கிளி/மத்தியகல்லூரி.
03. தே. கபில்தேவ் தரம் 5, யா/தொல்புரம் வி.வித்தியாலயம்.
04. அ.குந்தவை, மு/மல்லாவிமத்திய கல்லூரி, மல்லாவி.
05. சி.நிதர்சன், வற்றாப்பளை, முள்ளியவளை.
06. கோ.போஷகாந்த், தரம்-4 பூநகரி.


01 வீட்டு மிருகங்கள் மூன்று?
01) ....................................
02) ....................................
03) ....................................

02. ஊர்வன இரண்டு?
01) ....................................
02) ....................................

பெயர் :- ....................................
முகவரி :-....................................
....................................

சொற்சிலம்பம் - 38
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

## மறைந்திருக்கும் பொருட்களைக் கண்டுபிடியுங்கள்



# புரிதலும் தெளிதலும்

எந்தவொரு விடயத்தினதும் முதற் காரியம் பிரச்சினையை இனம் காணுதல்.

அதன் பின் பிரச்சிலைனக்கு தீர்வுகாணுதல்.

அதன் பின் பிரச்சினைக்கானதீர்வு - பிரச்சினை மீண்டும் எழாது தொடர்கிறதா என்பதே.

இப்போது இந்த பந்தியில் குறிப்பிடப் படும் பிரச்சினை மீண்டும் எழுவதுதான்.

அதாவது பாடசாலைகளிலிருந்து இடை விலகிய மாணவர்களை இனம் கண்டு அவர்களின் கல்வி மீண்டும் தொடர்வதற்கான ஏது நிலைகளை மேற்கொள்ளும் செயற்பாடு தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த செயற்பாடு மிகவும் பாராட்டப்பட வேண்டியதும் சமூகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியதுமான கட்டாய நடவடிக்கைகளில் ஒன்று.

இந்த பாடசாலைகளிலிருந்து இடை விலகி கல்வியைத் தொடராமல் தமது எதிர்கால வாழ்வில் என்ன செய்யப்போகிறோம் என்று எதைப்பற்றியும் சிந்திக்காது தாங்கள் சந்திக்கின்ற ஒவ்வொரு பொழுதையும் கழித்தால் போதும் என்று திரிந்த பல இளையவர்கள் இன்று இத்திட்டத்தின்கீழ் கல்வியை தொடர தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் மீண்டும் இத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இங்கு இத்திட்டத்தில் கவனத்தில் கெள்ள வேண்டி ஒரு விடயத்தை இங்கு குறிப் பிடுவது அவசியமாகிறது.

அதாவது முன்பு ஒருமுறை ஒரு மாணவன் பாடசாலையிலிருந்து இடைவிலகியிருப்பது இனம் காணப்பட்டு மீண்டும் பாடசாலையில் அவன் கல்வி கற்க எல்லா உதவிகளும் செய்யப் பட்டது.

## பல முறையல்ல ஒரு முறை தான் இனம் காணப்பட வேண்டும்

ஆனால் சில மாதங்களின் பின்னர் மீண்டும் அதே மாணவன் இடைவிலகல் மாணவனாக இனம்காணப்பட்டுள்ளார்.

அதற்கு அந்த மாணவன் கூறிய காரணம் தனக்கு தொடர்ந்து உதவி கிடைக்கவில்லை என்பதே.

இங்கு கவனத்தில்கொள்ளவேண்டி யது அந்த மாணவனுக்கு கல்வி கற்பதற்கு தேவையான உதவி தொடர்ந்து வழங்கப்படுவது. உறுதி செய்யப்பட வேண்டும். அல்லது அந்த மாணவனுக்குத் தேவையான செலவை வழங்க கூடியதாக அந்த குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யவேண்டும்.

அதேநேரம் மாணவனுக்கு ஏற்பட்ட மீள் எழும் இப்பிரச்சினை போன்று மீள எழாது இருக்க பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும்.

ஏனெனில் சமூகத்தில் இத்தகைய திட்டங்கள் அவசியமானதோடு அத்தியாவசியமானது கூட.

அத்தோடு, இத்தகைய மாணவர்கள் பாடசாலை செல்வதை பெற்றோர்கள் ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களுக்கும் இதுதொடர்பான விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

இல்லாதுவிடின் ஒரு மாணவன் பல முறை இடைவிலகல் மாணவனாக இனங் காணப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

— வேழினி

## தொடர் - 21

"ஏன் அப்படி?" அயூப்பின் வியப்பு மாறியதாயில்லை

"..... எப்படி ஓட முடியும்?" கேள்விகளை அடுக்கினார்.

இருபதாண்டு காலப் போர், இருத்தல் பற்றிய பிரச்சினை எல்லாவற்றையும் சொல்லவேண்டியிருந்தது. "போதாக்குறைக்கு பொருளாதாரத் தடை எரிபொருள் வர முடியாமல்!" "எரிபொருள் என்ன மருந்தே கூட!" இதைச் சொன்னது நானோ செல்வாவோ அல்ல விமுக்தி. அயூப் திறந்த வாய் மூடாமல் கேட்டபடி வானைச் செலுத்திக் கொண்டிருந்தார். எல்லாம் சொல்லி முடிந்த பின்

"இப்படி ஒரு ஊரிலிருந்தா வந்திருக்கிறீர்கள்? என்றார் பிரமிப்போடு! இப்படி ஒரு ஊரில் எப்படி இருந்திருக்கிறீர்கள்? என்று




கேட்க நினைத்ததுதான் அப்படி வந்திருக்க வேண்டுமென்று பட்டது பிறகு கேட்டார்.

"எப்படி மண்ணெண்ணையில் இயங்குவது?ஸ்ராட்டே ஆகாதே!"

"இஸ்ராட்டுக்கு மாத்திரம் பெற்றோல்...எப்படி. விசேஷமான மெனிஃபோல்ட் பொருத்துவது, எப்படி பெற்றோல் 'காட்டுவது' எல்லாம் விளக்கினேன்.

"ஹ்ஹோ!", திறமான ஓட்டுநராக மட்டுமன்றித் திறமான திருத்துநராகவுமிருந்த அயூப் சுலபமாகவே புரிந்துகொண்டார்.

"நீங்கள் சொன்னதைக் கேட்டபிறகு, எனக்கும் மண்எண்ணையில் காரொன்றை இயக்கிப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது!"

இதற்குள் 'ஒலுலைமுட்டியாகேற்' வந்துவிடவே, வானை நிறுத்திவிட்டு, அந்த இடத்தில் பதிவு செய்வதற்காக இறங்கிப்போனார்.

"ஜன்னல்களையோ, கதவையோ திறந்து விடாதீர்கள்: இந்த விற்பனைக்காரர்கள் உங்களை விட்டுவைக்க மாட்டார்கள்"

அயூப் அந்தப்பக்கம் போனதுதான் தாமதம், எங்கிருந்தென்றில்லாமல் ஏழெட்டுப் பெண்கள் வானைச் சூழ்ந்துகொண்டார்கள். எல்லோருமே மஸாய்கள். எல்லோர் கைகளிலும் விற்பனைக்கான மணிகள், மாலைகள், மற்றும் கைவினைப் பொருட்கள். அவற்றைவிட அவர்கள் வேறு மாலைமாலையாய்க்கழுத்திலும் தலையிலும் அணிந்திருந்தார்கள். கைகளில், பாசிமணிகளைக் கோர்த்துத்தைத்த பட்டிகள்,வளையல் போல உடலைச் சுற்றிய கடும்நிறப் போர்வைகள்.

என்ஜெங்காவைப் பார்த்த போது, எங்களவர் ஒருவரைப் பார்ப்பது போலவே இருந்தது. ஜோன் என்ஜென்கா, 'மாறாசோப்பா' விடுதியின் முகாமையாளர். அறிவுக்களையும் நட்புமுறுவலும் ஒன்றாயமைந்த முகம். 'சோப்பா' நிறுவனத்தின் விடுதிகள் மூன்று தன்ஸானியாவிலும் ஒன்று கென்யாவிலுமிருக்கின்றன. மஸாய் மாறாவிலுள்ள இந்த விடுதியில்தான், அன்றைய மீதிப்பொழுதும் அடுத்தநாள் முழுதும் எங்கள் தங்கல்.

ஒலுலைமுட்டியாகேற்றைத் தாண்டிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் நுழைந்த்துமே, சூழல் மாறிவிட்டதாகப் பட்டது. வெட்டவெளிகள் மறைந்து, மரங்களும் பற்றைகளும் படர்ந்திருந்த மலையடிவாரங்கள்தென்படலாயின. ஒடுங்கிய மண்பாதையை ஊடறுத்து வெகு வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்த இரண்டு ஆறுகளைவேறு வானோடு தாண்டவேண்டியிருந்தது.

"அவை ஆறுகளல்ல: மழைவெள்ளம்" என்றார் அயூப்,

"பெருமழை நாட்களில் இப்படித்தான்."

தொலைவில் ஒரு மலைச் சரிவில் ஒரு குடியிருப்புத்தென்பட்டது. குடிசைகள் நெருங்கித்தோன்றிய குடியிருப்பு. ஆனால் இந்தக் குடிசைகள், வழியில் நாங்கள் பார்த்த மஸாய்களின் பெட்டிபோன்ற வீடுகளாயன்றி, வழமையான ஆபிரிக்கப்பாணிக்கூர்முகட்டுக் குடிசைகளாய்த் தெரிந்தன.

"அதென்ன, மஸாய்களின் வீடுகள் போல இல்லையே!"

"இல்லை, அதுதான் மாறாசோப்பா விடுதி!"

விடுதியின் முன்முகப்பு - போர்ட்டிகோ கூட - பெரியதொரு கொட்டிலாக அமைந்திருந்தது. பெரிய பஸ்களிரண்டை நிறுத்தக்கூடிய விசாலம். என்ஜென்காவும் அவருடைய ஆட்களும் பார்த்திருந்தார்கள். மலைவிடுதியில்




அளிக்கப்பட்டஅதேவரவேற்பு - துவாயும், பானங்களுமாய். அறிமுகங்கள் முடிந்ததுமே, எங்கள் உடைகளைப் பார்த்த என்ஜென்கா, "எந்த இடத்தில் சிக்கிக்கொண்டீர்கள்?" என்று கேட்டார்: 'என்ன நடந்தது?' என்று கேட்கவில்லை.

"சரி, நன்றாகக் களைத்திருக்கிறீர்கள்.. மாலையில் ஸஃபாரிகூட இருக்கிறது. இரவு ஆறுதலாகப் பேசுவோம்" என்றபடி விடைபெற்றார்.

மலைச்சரிவோடு - அதற்கேற்றாற்போல, அழகாக - அமைத்திருந்தார்கள் விடுதியை - போர்ட்டிகோ கொட்டிலிலிருந்து 15,20,படிகள் இறங்கினால்,வரவேற்பு, அலுவலகம்,நடுக்கூடம், உணவுச்சாலை எல்லாம். அந்தத் தளத்திலிருந்து பிறகும் இறங்கினால், இடமும் வலமுமாய்ப் பிரிகிற பாதைகளில் ஒரு புறம் மட்டும் வரிசையாய்க் 'குடிசை'கள்.உண்மையில் அவைபயணிகளின் தங்கும் அறைகள்: எல்லாவசதிகளுங்கொண்ட கட்டடங்கள். பார்வைக்குக் குடிசைபோல அமைத்துக் கூரையைப் புல்லால் வேய்ந்திருந்தார்கள். 'மக்குற்றிப் புல்' என்று பெயர். மூன்றாண்டுகளுக்கொருமுறை புதிதாக வேயவேண்டும்: எங்களைப் போலத்தான்!

இந்தக் 'குடிசை' வரிசைகளுக்குமுன்னால் பாதையைத்தாண்டி, பள்ளத்தாக்கு சரிந்துகிடந்தது. விடுதி எல்லையில் பலமானவேலி, மிருகங்கள் நுழைந்துவிடாமல் குடிசையிலிருந்து மையக்கட்டடத்தை நோக்கிப் பிறகு நடந்தபோது, மண்டபத்தின் கூரை ஒரு குன்றுபோல் எதிரே நின்றது. அதையும் மக்குற்றியால்தான் வேய்ந்திருந்தார்கள். மண்டபத்தின் விசாலத்திற்கும் கூரையின் சரிவிற்கும் அந்தளவு உயரம் வரத்தான் வேண்டும்.

ஐந்துமணிக்கு வானோடு வந்து நின்றார், அயூப். சேறுசகதி எல்லாங்கழுவிப் பளிச்சிட நின்றது. ஒரு மணிநேரத்தில் எல்லாம் செய்வித்திருந்தார். "இன்றைக்கு, சிங்கங்களைத் தேடிப் போகிறோம்.."

வேறெந்த வானுமே கண்ணிற்படவில்லை. சற்றுமுன் நாங்கள் வந்திறங்கியபோதே எல்லோரும் காடுநோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருந்ததைக் கண்டிருந்தோம். குழைகளும் கொப்புகளும் உரசுகிற வழித்தடத்தால் மெல்ல நகர்ந்தது வான்.

"பலாலி எயார்போர்ட்டுக்கு நாங்கள் போறபாதைமாதிரி இல்லையா?" என்றார், செல்வா. சிரிப்பை அடக்கமுடியவில்லை.

"நாங்கள் சிங்கத்தைத் தேடித்திரியிறம். ஆனா. யாழ்ப்பாணத்திலையே இப்ப கன 'சிங்கங்கள்' இருக்கு எண்டு அங்க ஒருதர் சொன்னார்!"

சிரித்து முடித்தபின்தான் எங்கள் சிரிப்பிற்கான காரணத்தை மற்றிருவருக்கும் சொல்லியிருக்கவேண்டுமென்று பட்டது. சொன்னோம். எவ்வளவு புரிந்திருக்கும், இரண்டும், என்று தெரியவில்லை.

பள்ளத்தாக்கின் மறுபுறமாயிருக்கவேண்டும், பாதை மீண்டும் - மரங்கள் மறைய - வெளியில் முடிந்தது. பழையபடி பரந்தவெளி. அதை மூடி மண்டிய ஆளுயரப் புல். இடையில், ஓட்டுநர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தபாதை. வானைச் செலுத்தியபடியே, "கூஜா,கூஜா..." என்று யாருடனோ தொலைத்தொடர்புக்கருவியில் உரையாடிக்கொண்டிருந்த அயூப், அது முடிந்ததும் சொன்னார்: "அதிர்ஷ்டமிருக்கிறது: அருகேதான் ஓரிடத்தில் சிங்கங்கள் எருமையொன்றை அடித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றன"

(தொடரும்)

செட்டாக வாழ்வதே, சிறந்த செல்வம்: ஊக்கத்துடன் உழைக்கும் பழக்கம், உயர்ந்த ஆஸ்தி. -பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

## தாய்

என் வாழ்வில்
ஒளிவீச உருகும் மெழுகாய்
உன்னை
மாற்றிக் கொண்டாய்
மற்றவர் முன் தன் மகன்
தலை குனியக் கூடாதென
சேலையை
கந்தலாக்கிக் கொண்டாய்
உன்னை. பாலை வனமாக்கி
எனக்குச் சோலை வனம்
அமைத்துக் கொடுத்தாய்
மீண்டும்
மீண்டும்
உன் வயிற்றில்
உதைத்தேன்
இது அறிந்த பருவம்
இருப்பினும்
முகம் சுழிக்காமல்
தாங்கிக் கொண்டாயே
இது தான் தாய்மையோ?

ப.யமுனா

## தட்சனை

சமாதானமே உனக்காக
சிந்திய இரத்தங்களும்
சிதறிய உடல்களும்
ஏந்திய நெஞ்சங்களும்
உனது வருகைக்காக
தரப்பட்ட தட்சனைகளா?

பெண்ணே -நீ
விம்பம் காட்டும்
கண்ணாடியல்ல
சுக்குநூறாய் உடைவதற்கு
கண்ணாடியை ஊடறுக்கும்
வைரம் நீ
பெண்ணவளை துரத்தியடித்த
காலம் மலையேறிவிட்டது -
இன்று
உன் அருகில் கூட
வர பயப்படுகின்றான்- எனவே
பெண்ணே நிலை
குலையாதே
நிமிர்ந்து நில்

ந.விதுரா

### போராளிகள்

விடுதலை எனும்
போர்க்களத்தின்
வீரர்கள் - இவர்கள்.
ஈழ மண்ணின்
சுதந்திரத்திற்காகவும்
எதிர்கால மக்களின்
நல்வாழ்வுக்காகவும்
தம்மையே ஆகுதியாக்கும்
ஒப்பற்ற செல்வங்கள்.....!

### மாவீரர்கள்

காலத்தால் அழியாத
வரலாற்றை
பொறித்தவர்கள்
விடுதலையின்
விருட்சங்கள்
வீரம் விளைந்த
ஈழமண்ணில்
வித்தாகிய
விழுதுகள்.......!

### தொழிலாளி

தன்னையே
அர்ப்பணித்து
தன் நல வாழ்வுக்காக
இரத்தம் சிந்தி,
வியர்வை சிந்தி
அயராமல்
உழைப்பவர்......!

### சிறுவர்கள்

இன்றைய விடியலின்
வித்துக்கள்
நாளைய நம் நாட்டின்
மொட்டுக்கள்
மலரப்போகும் தாய்
நாட்டின்
வளரப் போகும்
தேசப்பற்றாளர்கள்
இவர்கள்- ஈழத்தின்
சிட்டுக்கள்
இனித்திடும்
முத்துக்கள்.....!

### அன்னை

ஈரைந்து மாத காலம் -
எமை இனிதாக
சுமந்து பெற்றெடுத்தவள்
பாலூட்டி, சீராட்டி, ஆராட்டி
அன்பு தந்து வளர்த்தெடுத்து
நல்வழிப்படுத்தியவள்.....!

வே.அருள்குமார்

## ஊக்கமாத்திரை

# மனசே மனசே... சோர்ந்து விடாதே!

மனச் சோர்வு என்பது மனிதனை வெற்றிப் பாதையிலிருந்து விலகிட வைக்கும் தீய சக்தியாகும். சாதனைகள் புரியக் கூடிய இளம் வயதில் மனச் சோர்வு பலரைப் பாதித்து விடுகிறது. இதற்கு பல காரணங்கள் உண்டு.

வாழ்க்கையில் மனச் சோர்வை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்று, 'தோல்வி'ஆகும். எமது இலக்குகளை நோக்கிய எமது பயணத்தில் நேரடித் தோல்விகள் ஏற்படும் போது மனச் சோர்வு ஏற்படலாம். இதைவிட முக்கியமாக மனச் சோர்வை ஏற்படுத்துவன மனித மனதில் ஏற்படும் அகத் தாக்கங்களும், புறத்தாக்கங்களும் ஆகும்.

மனச் சோர்வு எவ்வகையில் ஏற்பட்டாலும் அது மனிதனின் வாழ்வோட்டத்தை ஸ்தம்பிதமடைய வைப்பதுடன், வெற்றி இலக்கு நோக்கிய வாழ்வின் இலட்சியப் பயணத்தையும் தகர்த்தி விடுகிறது.

வாழ்க்கையில் வசந்தம் என்பது எவ்வளவு வசீகரமான வார்த்தை! அந்த வசந்தம் தொலைந்துவிடும் சந்தர்ப்பங்களில் மனித மனம் மிகவும் சோர்வுற்றுப்போகின்றது. இளமைக்கேயுரிய வேகத்தையும், உழைக்கும் திறனையும், இலக்கு பற்றிய சிந்தனையையும் இது பாதித்துவிடுகிறது. இரண்டும் கெட்டான்



பருவமான கட்டிளம் பருவத்தினில் அடிக்கடி தரிசனமாகின்ற இச் சோர்வு திறமைகளையும் புரட்சிகரமான கருத்துக்களையும் மழுங்கடிக்கின்ற இவ்வேளைகளில் இளையதலைமுறையினர் மிகவும் கவனமாகவும், தைரியமாக வும் இருக்கவேண்டும்.

ஆனால் வாழ்வில் முன்னேறவேண்டிய பருவத்தில் துவண்டுபோதல், மனச்சோர்வை ஏற்படுத்தி இலட்சிய இலக்குகளையும் தகர்க்கின்றமையினால், இவ்வாறான சூழ்நிலைகளில் இளையதலைமுறையினர் நிதானமாகச் செயற்படவேண்டும்.

தோல்வியைக் கண்டு சோர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டாலோ, அல்லது வேறு தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டாலோ வாழ்வு கருகுவதைத்தவிர வேறு ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை இப்படியான சூழ்நிலைகளில் வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியத்தை மனதில் ஏற்படுத்த வேண்டும்.

இளமைதான் ஒருவரின் எதிர்கால வாழ்வை நிச்சயிக்கிறது. இளமையில் சரியான தடத்தில் நடக்காதுவிட்டால், சோர்ந்து போய் செயற்படாது விட்டுவிட்டால் பின் நாளில் உயர்ந்த நிலைகளை அடைவது முடியாத காரியமாகிவிடும். இளமையின் தோல்விகளில் ஏற்படும் வலிகளை எல்லாம் தாங்கிக்கொண்டு, அடுத்த அடியை நிதானமாக எடுத்து வைப்பதே வலிக்கான நிவாரணியுமாகும்.

சகிப்புத் தன்மையுடன், அறிவுத் திறனைப் பயன்படுத்தி விடாமுயற்சியில் இறங்குகின்றபோது வேதனைகளும் மறைந்து, வெற்றிக்கான கதவு திறக்கும். கனவு சுமந்த பயணம் தோல்விகளால் என்றுமே தடைப்பட்டுப்போக நாம் விட்டுவிடக்கூடாது.

நம் வயதும் பருவமும் ஒரு சிறிய காலக்கணக்கு. அதுவேதான் மெத்த வாழ்வு அல்ல. காலம் நம்மை வெவ்வேறு வயதுக்குக் கூட்டிச் செல்வதும், வெளியேற்றுவதுமாக இயங்குகிறது. இளமையின் வலிகள் பின் ஒரு பருவத்தில் நினைத்துப்பார்க்கையில் வேடிக்கையாக இருக்கும்.

எனவே தோல்விகளை நினைத்து நினைத்து வாழ்க்கையை வீணாக்கிவிடாதீர்கள். மனநிலை சாதகமில்லாத போது சூழ்நிலைகளை சாதகமாக்குங்கள். தோல்வியிலும் கூட தளர்ந்து போகாமல் வாழ்ந்து காட்டவேண்டும்.

ச.முருகானந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 73

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | 03 | | | | 07 |
| 08 | | | | | | |
| 15 | | | | | 20 | |
| | 23 | | | | | |
| | | | 32 | 33 | | |
| | | | 39 | | 41 | |
| | | | | | | |

பெயர்:-.............................................
முகவரி:-.............................................
.............................................
.............................................

### இடமிருந்து வலம்

01. திருக்குறளின் பிரிவுகளில் ஒன்று.
08. மதி (குழம்பியுள்ளது.)
15. கணவன் -மனைவி (குழம்பியுள்ளது.)
20. வீடு.
23. மீன் வகைகளில் ஒன்று.
32. வயலும் வயல் சார்ந்த இடமும் (மாறியுள்ளது)
39. தாய்.

### மேலிருந்து கீழ்

01. இரகசியம்.
03. உண்மை (குழம்பியுள்ளது.)
07. புல்மோட்டையில் அரிதாய் காணப்படுவது (குழம்பி உள்ளது.)
23. திருடன்.
33. இளைய சகோதரன்.
39. கடலில் இருந்து தோன்றுவது.
41. மாதங்களில் ஒன்று.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.71 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வானவில்
06. வழி
08. அன்னை
12. ஆதி
16. பரி

**மேலிருந்து கீழ்**

08. அணை.
12. ஆலயம்
13. திருப்புகழ்
16. பட்டம்.
21. புத்தாண்டு
25. ஞாயிறு
29. பாசம்
38. வலி
47. பூ

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.73
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.71 இன் பரிசுக்குரியவர்**
**ஞா.கேமச்சந்திரன்**
**212, ஜெயபுரம் தெற்கு**
**பல்லவராயன்கட்டு.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.71 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

01. பு.ஜெர்மிலராஜ்
விக்னேஸ்வரா ஒழுங்கை
கரவெட்டி.

02. ந.சுஜாதா
ஆனந்தபுரம்
கிளிநொச்சி.

03. பா.தெய்வேந்திரன்
கற்கோவளம்
பருத்தித்துறை.

04. க.பிரதீபன்
மானிப்பாய்
யாழ்ப்பாணம்.


05. ச.குமார்
9ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

06. காந்தி
புளியங்குளம்
கிளிநொச்சி.

ஒருவர் செய்த தீங்கை மறப்பதே, அவரை நயமாகப் பழிவாங்குவதாகும். -தாமஸ் ஃபுல்லர்

# இராட்சதக் குழந்தை

18 மாதங்களே ஆன ஷாக்கினுடைய நிறை 35 கிலோ ஒரு மாதத்திற்கு 2 கிலோ வீதம் நிறை அதிகரிக்கின்றது. தந்தையாரின் சம்பளத்தில்



அரைவாசிப் பகுதி செலவாவது ஷாக்கினுடைய ஆடைகள் தைப்பதற்கு.

நியூயோர்க் நகரில் சிறிய குழந்தைகள் பூங்காவில் ஒரேயடியாக சிறிய பிஞ்சுகளின் மிகப் பலத்த சத்தம் கேட்டது. இராட்சதக் குழந்தையொன்று ஒரே தடவையில் பருத்த கிழங்கு போன்ற இரண்டு கால்களாலும் ஓடி ஓடி சிறிய குழந்தைகள் இருந்த பக்கத்திற்குச் சென்றது. அந்தச் சிறிய குழந்தைகள் அச்சத்தினால் தூரத்திற்கு ஓடிய போது இராட்சதக்குழந்தையின் பிஞ்சு மனதில் பெரிய துக்கம் ஏற்பட்டது. சொல்லமுடியாத மிகப் பெரிய துக்கம் அந்தச் சின்னஞ்சிறிய விழிகளினூடே வைப்பிலிடப் பட்டிருந்தது. அந்த இராட்சதக் குழந்தை 'ஷாக்ஸ்ரேன்காட்' தற்பொழுது அந்தக் குழந்தைக்கு 18 மாதங்களே வயசாகின்றது. அதன் நிறை 35 கிலோ கிராம் ஒன்பது வயதுக் குழந்தையின் சாதாரண எடை. தற்பொழுதும் ஒவ்வொரு மாதமும் 5சென்ரிமீட்டர் உயரமாகின்றது. நிறை 2 கிலோவினால் அதிகரிக்கின்றது.

"எனது மகன் பிறக்கும் பொழுது 5 கிலோ எடையாக இருந்தான். அசாதாரண தன்மை இருக்கவில்லை. சிறிய கொஞ்சு மொழி பேசும் சின்னஞ்சிறுவன் எங்களது உலகமே நிரம்பிவழிந்தது. நாங்கள் அதிகம் பெருமைப்பட்டோம். இப்படிப்பட்ட மகனுக்காக நான் அவனை அணைத்துக் கொண்டு விழிகளை மூடியவண்ணம் அதிகம் கனவுகள் கண்டேன்".

ஷாக்கினுடைய தாயாரான லோரி அதிகம் துக்கத்துடனேயே கூறினார். சின்னஞ்சிறு மழலை சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்த பொழுது அந்த அதிகரிப்பு அசாதாரணமாக இருந்ததைக் கண்டு அதனை உணர்ந்தபொழுது லோரி மிகவும் அச்சம் அடைந்தாள்.

ஆரம்ப நாட்களில் இது அசாதாரண ஒன்று என வைத்தியர்கள் அந்த அளவிற்கு கணக்கில் எடுக்கவில்லை. சாபக்கேடாக இந்தக் குழந்தை சாப்பாட்டை எடுக்கவில்லை. அதனது உணவு சாதாரண ஒரு குழந்தை எடுக்கின்ற உணவின் அளவிலேயே எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் அதிகம் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவனது மூளையில் ஸ்கானிங் பரிசோதனைகள் பல தடவைகள் செய்யப்பட்டதன் பின்பே வைத்தியர்கள் அதற்கான காரணத்தைக் கண்டு பிடித்தார்கள். எங்களுக்கு ஷாக் பாரமில்லை நாங்கள் எப்படியாவது இவனைப் பார்த்துக்கொள்வோம். எதிர்காலத்தைப் பற்றி சிறியதோர் அச்சம் ஏற்படுகின்றதுதான். நாங்கள் அதிகம் கஷ்ரப்பட்டு அவனுக்காக பணத்தை மிச்சம் பிடிக்கின்றோம். ஷாக்கினுடைய தந்தையாரின் பணத்தில் அதிகம் செலவாவது அவனுடைய 'நப்கின்'களுக்காகவே ஷாக்கிற்கு விளையாடுவதற்கு ஆசை. அவனது அக்கா 'சமர்' தம்பி மீது அதிக ஆசை வைத்திருந்தாள். ஆனால் மற்றைய பிள்ளைகள் தன்னைக்கண்டு அச்சப்படுவதுதான் ஷாக்கிற்கு உள்ள பிரச்சினை. அடுத்த பிரச்சினைதான் உடுப்புப் பிரச்சினை. இந்தவாரம் எடுத்த உடுப்பு அடுத்த வாரம் உடுக்கும் போது உடுப்புக் கிழிந்து போய்விடும்.


"மற்றையவர்களைப் போன்று நாங்கள் எங்கள் பிள்ளையை ஒழித்து வைக்கவில்லை. நாங்கள் அவனையும் தூக்கிக்கொண்டு வார முடிவில் பூங்காவிற்கு செல்வோம். அவனோடு விளையாடுவோம். சிறிய ஷாக்கிற்கு விளையாடுவதற்கு விளையாட்டுக்கார், விளையாட்டுக் கதிரை போன்ற எதுவுமே கிடைக்கவில்லை. கதிரைகள் எவற்றிலுமே அவனால் இருந்துகொள்ள முடியாது. அவனை இடுப்பில் சுமந்து கொண்டு சிறிது நேரம் இருக்கும் பொழுது எனது நாரி வலிக்க ஆரம்பித்தது. தூக்கிக் கொண்டு இருபது அடி தூரத்திற்கு செல்லும் பொழுதே எனக்கு இயலாமற் போகின்றது. ஆயினும் இவை எல்லாவற்றையுமே செய்வது சரியான மகிழ்ச்சியுடனேயே எனது மகன் சிறிய இராட்சதக் குழந்தை என்று சொல்ல முடிவது எனக்கு மிகுந்த பெருமையே. ஷாக்கிடம் நடக்கச் சொல்லிப் பார்த்துக்கொண்டு இருந்தேன். சிறிய இராட்சதக் குழந்தை மீண்டும் ஓடத்தொடங்கியது. முன்பு அஞ்சி ஓடிய சிறிய குழந்தைகள் சிறிது சிறிதாக ஷாக்கை அண்மித்தார்கள். அந்த இராட்சதக் குழந்தையின் கரங்களை, பாதங்களை, தடவிப்பார்த்தார்கள். ஆயினும் மற்றைய பெற்றோர்கள் ஓடிவந்து மற்றைய குழந்தைகளைப் பிரித்துவிட்டார்கள். "ஐயோ இவன் எங்களது பவாவின் உடலின் மேல்விழுந்தால்....?" அந்தக் கண்களில் இருந்தது அந்தளவு அச்சம்.

சிறிய ஷாக்பெரியவனாகும் பொழுது இவை அனைத்தும் சரியாகி விடும் என நினைத்து லோரி பெரு மூச்சொன்றினை விட்டாள்.

வல்வையூரான



# கிளிநொச்சி நகர் பற்றி இப்போதே சிந்திக்க வேண்டும்




மிகவும் இளைய வயதிலேயே அதிகமதிகம் இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்த பட்டினம் என்று கிளிநொச்சியைச் சொல்லலாம்.

கிளிநொச்சிப்பட்டினத்தின் வயது ஏறக்குறைய ஐம்பது அறுபது வருடங்களுக்குள்தான். அதாவது அது ஒரு பட்டினம் என்ற அடையாளத்தைப் பெற்றது இந்தக் காலப்பகுதிக்குட்தான். அதாவது வன்னியின் குடியேற்றத்திட்டங்களோடுதான் கிளிநொச்சியின் எழுச்சியும் தொடங்கியது.

ஒரு கட்டத்தில் - எண்பதுகளில் நடுப்பகுதியில் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையிலான [illegible]தைமையமாக கிளிநொச்சி வளர்ச்சி பெற்றிருந்தது.

வன்னிக்குடியேற்றத்திட்டங்களில் பலவும் பெரிய குளங்களை ஆதா[illegible]வைத்தே நிறுவப்பட்டன. குள[illegible] மூலமாக விவசாயத்தை[illegible] பெருக்குவதே நோக்கம். (யாழ்ப்பாணத்தை - அதன் கிராமங்களை [illegible]ரிய அளவில் வெளியே கொ[illegible]ந்ததும் இந்தக் குடியேற்றத் திட்டங்கள்தான்) கிளிநொச்சியை வடபகுதியின் 'நெற்களஞ்சியம்' என்று சொல்லுமளவுக்கு விவசாயச் செய்[illegible] அமோகமடைந்திருந்தது. இதனால் கிளிநொச்சி தவிர்க்க முடியாதபடி ஒரு கவனிப்புமையமாக மாறத் தொடங்கியது.

ஆனால், ஈழப்போர் உக்கிரம் பெற்றிருந்த எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து கிளிநொச்சி சிதையத்தொடங்கியது.

மாறிமாறி அழிவதும் எழுவதுமாகக் கடந்த இருபது வருடங்க[illegible]ன்வரலாறு இழப்பும் அ[illegible] எழுதலும் வீழ்தலும் சி[illegible]ம் மீள்வதும் என்றே இரு[illegible]கிறது.

[illegible]இளையவயதிலேயே அழிவுக[illegible] கண்டதற்கு அடையாளமாக [illegible]பட்டு பதினைந்து வருடங்களு[illegible]ளேயே நகரில் வீழ்த்தப்பட்டுக்[illegible]ும் அந்த மிகப்பெரிய தண்[illegible]தாங்கியைக் காணலாம். அல்[illegible]றிலங்கா இராணுவத்தால் பிடிக்[illegible]பட்டு, மலக்குழிகளுக்குள்[illegible] கிணறுகளுக்குள்ளும் கொ[illegible]டப்பட்டவர்களை மீட்கப்பட்ட [illegible]புக்கூடுகளைச் சொல்லாம். அல்லது ஒரு காலத்தில்அவர்களே திறந்துவைத்து பிறகு இன்னொரு காலத்தில் அவர்களே குண்டு போட்டழித்தபின்னும் இன்னும் மிஞ்சியிருக்கும் தபாற்கந்தோரைக் காணலாம்.

(கிளிநொச்சி தபாலகத்தை 1967 இல் அப்போதைய கட்டு வேலை தபாற்தந்தி அமைச்சர் மொன்ரேகு ஜெயவிக்கிரம அவர்கள் திறந்துவைத்தார். பின்பு பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரத்வத்த 1996இல் அதனைக் குண்டுபோட்டழித்தார்.)

இப்போது கிளிநொச்சி மீண்டும் புத்துயிர்பெற்று எழுகிறது. அதற்கொரு சாட்சியாக வீழ்த்தப்பட்டிருக்கும் தண்ணீர்த் தாங்கியின் அருகே தாய்வாழையினருகில் குட்டிவாழை முளைத்தெழுவதுபோல புதிதாக ஒரு தாங்கி கட்டப்படுகிறது.

இப்படி கிளிநொச்சி முன்னரும் அழிவுகளிலிருந்தும் இடிபாடுகளிலிருந்தும் எழுந்திருக்கிறது.

கடந்த இருபது வருடங்களில் அது சந்தித்த படையெடுப்புகள் கொஞ்சமல்ல. ஒவ்வொரு படையெடுப்பின்போதும் அது சந்தித்த சிதைவுகளும் குறைந்தவையல்ல.

எத்தனைதான் அழிவு என்றாலும் எவ்வளவுதான் சிதைவு என்றாலும் அதையெல்லாம் மிஞ்சியெழுந்துவிடும் சிறப்பு கிளிநொச்சிக்குண்டு.

ஒன்று அது அமைந்துள்ள கேந்திரம். யாழ்ப்பாணத்துக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமான இணைப்பான A-9இல் அது அமைந்திருக்கிறது. அத்துடன் வன்னியின் ஏனைய பகுதிகளுடன் உள்ள இணைப்பு.

இரண்டாவது கிளிநொச்சிக்கும் ஈரலிப்பு இரணைமடு உட்பட கிளிநொச்சியைச் சுற்றியிருக்கும் ஏராளமான சிறிய - பெரியகுளங்களும் அவற்றின் மூலமான நீர்ப்பாசனமும் பயிர்ச்செய்கையும்.

அடுத்தது இப்போது அரசியல் மையமாக கிளிநொச்சி மாறியிருப்பது. 'இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கக்கூடியளவுக்கு தீர்மானங்களை எடுக்கவல்ல மையமாக கிளிநொச்சி இருக்கிறது' என்று அரசியல் விமர்சகர்களே கூறியிருக்கிறார்கள்.

இப்பொழுது கிளிநொச்சி ஒரு புகழ்மிக்க நகரமாக மாறிவருகிறது.

**வெளிவாசல்பாலன்**

ஒரு காலத்தில் அது விவசாயிகளின் நகரம். இன்னொரு போதில் றிவிரசவின் பின் அது அகதிகளின் நகரம். பிறகு சத்ஜெயவின்போது படையினரின்நகரம். பிறகு அது குண்டேந்திநகரம். ஓயாத அலைகள் ஒன்றின் பின் இப்போது உயிர்பெற்றுவரும் 'றிமோட்' நகரம்.

கிளிநொச்சிக்கு மீடியாக்காரர்கள் வருகிறார்கள். வெளிநாட்டுத் தூதுவர்கள் வருகின்றார்கள். வியாபார உடன்படிக்கை செய்வோர் வருகிறார்கள். துறைசார்ந்த வல்லுநர்கள் வருகின்றார்கள்.

கிளிநொச்சியில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன. கிளிநொச்சியின் பதில் முக்கியமானதாக இருக்கின்றது. கிளிநொச்சிக்கு வரவேண்டியது தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. இதெல்லாம் ஒரு வளர்ச்சிநிலை யதார்த்தம். வரலாற்று மாற்றம்.

சரி, இனி இதனுடன் இணைந்ததாக, ஆனால் வேறு சிலதைப் பார்ப்போம்.

கிளிநொச்சி மீண்டும் இப்போது புதிதாக எழத்தொடங்கியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அது நகரொன்றுக்குரிய கட்டுமானங்களுடன், பொருத்தமான அமைவுகளுடன் நிர்மாணிக்கப்படுகிறதா என்றே இங்கே கவனங்கொள்ளப்படுகிறது.

நகருக்கான திட்டமிடல் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகச் சொன்னாலும் இன்றைய நிலையில் இப்படியே போகிற போக்கில் நகர விரிவை விடுவது நல்லதல்ல.

தினமும் விபத்துக்கள் நடக்கின்ற இடமாக இன்று கிளிநொச்சி மாறியிருக்கிறது.

சன நெரிசலும் போக்குவரத்து நெருக்கடியுமே விபத்துக்கான பிரதான காரணி என்று தொடர்ந்து நிலைமையை அவதானித்தவர்கள் சொல்கிறார்கள்.

நகரை ஊடறுத்து ஒரேயொரு வீதிமட்டும்தான் போகிறது. அதுவும் யாழ்ப்பாணத்துக்கும் இலங்கையின் பிறபாகங்களுக்குமான பிரதான வீதி. எப்போதும் வாகனப் போக்குவரத்து அதிகமாக நடக்கும் வீதி அது. ரெயில்வேப் போக்குவரத்தில்லையென்றபின் பயணிப்போர் அனைவரும் A-9 வீதியாலேயே போய்வரவேண்டிய யதார்த்தமுள்ள வீதி. இரவில் வாகனப்போக்குவரத்துக்கு அனுமதிமறுப்பு என்பதால் இன்னும் குறிப்பிட்ட நேரத்துக்குள் பயணிக்கவேண்டிய நெருக்கடியுள்ள வீதி A-9 இலங்கையின் மிக நீளமான நெடுஞ்சாலையாக இருப்பதால் வேகமும் நெருக்கடியும் அதிகமிருப்பது இயல்பு.

இப்படி நெருக்கடி நிறைந்த வீதியைத் தன் மடியில் வைத்திருக்கும் கிளிநொச்சி தினமும் விபத்துக்களை ஏற்கவேண்டியிருக்கிறது.

இப்போது கிளிநொச்சியை 'விபத்துகளின் நகரம்' என்றுகூடச் சொல்லலாமா என்று எண்ணத் தோன்றுகிறது.

தொலைதூரப்போக்குவரத்து நெருக்கடி மட்டும் கிளிநொச்சிக்குப் பாதிப்பைத்தரவில்லை. கிளிநொச்சிப்பட்டினத்தின் அமைப்பு முறையும்கூட மேலதிக நெருக்கடியைக் கொடுக்கிறது என்பதையும் கவனிக்கவேணும். வன்னியின் பிற பகுதிமக்கள் கிளிநொச்சிக்கு வருவதும் அயல்மக்களின் கூடுகையும் கூட நெருக்கடியையே தருகிறது.

இந்த A-9 வீதியை மையமாக வைத்தே கிளிநொச்சிப்பட்டினம் நிர்மாணிக்கப்பட்டுவருகிறது. இது அடிப்படையில் தவறானது. அது மட்டுமல்ல ஆபத்துகள் நிறைந்ததும் கூட. விபத்து மட்டும்தான் ஆபத்தானது என்று கருதக் கூடாது. ஒரு குவிமையத்தில் எல்லாம் இருந்தால் அது சேதமாகும் போது எல்லாமே ஒரேயடியாக அழிந்துபோய் விடும் ஆபத்தே பெரிது.

பாருங்கள், கண்டிவீதியில் கரடிப்போக்குச் சந்திக்கும் 155ஆம் கட்டைக் குமிடைபட்ட மூன்றரைக்கிலோமீற்றருக்குள் மூன்று கல்லூரிகள், அரச மாவட்டச்செயலகம் (கச்சேரி) ஆறுவங்கிகள், பிரதான விளையாட்டு மைதானம், பொதுச் சந்தை, பிரதான பஸ் நிலையம், விவசாய விரிவாக்க நிலையம், காவல்துறை பணிமனை நீதிமன்றம், பொதுமருத்துவமனை தொலைத்தொடர்பு பணிமனை, தேவாலயங்களும், கோவில்களும், கல்வித்திணைக் களம், தபாற்கந்தோர், உள்ளூராட்சி அலுவலர் பணிமனை, நீர்ப்பாசனத் திணைக்களம், அழகியற்கலாமன்றம், கலாசார மண்டபம், தொழில் நுட்பக்கல்லூரி, மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிராந்திய வைத்திய அதிகாரி அலுவலகம், கூட்டுறவுத் தலைமைப்பணியகம், கூட்டுறவுக் கல்லூரி, தேசியவீடமைப்புச்சபை. பிரதான தனியார் மருத்துவமனை எனப் பொதுமக்கள் அதிகமாகக் கூடுமிடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

இவற்றுடன் அரசு சாரா நிறுவனங்களின் அநேகமான பணியகங்களும் இந்த வீதியை அண்மித் தேயிருக்கின்றன.

ஏனிப்படி எல்லாவற்றையும் இந்த வீதியை மையமாகவைத்து அருகருகாக அமைக்கவேண்டும் என்றுதான் புரியவில்லை. போக்குவரத்து வசதிகளுக்காக இந்த அமைவு என்று யாரும் சொல்லக்கூடும். ஆனால் வணிகமையங்கள் மாதிரி வீதியைப்பார்க்கும்படி காட்சிப்படுத்தல், கவர்ச்சிப்படுத்தலாக மக்கள் கூடும் இடங்களைபணியகங்களை சந்தையை மருத்துவமனையை இன்னும் புதிதாக அமையும் அலுவலகங்களையெல்லாம் ஏன் அமைக்க வேண்டும். இது பெருங்குருட்டுத்தனமே.

வன்னேரியில் இயங்கிய தொழில் நுட்பக்கல்லூரியைக் கூட A-9 வீதிக்கே கொண்டுவந்திருக்கிறார்கள்.

கூட்டுறவுக்கல்லூரியும். நெரிசலான பகுதியில்தான் இயங்குகிறது. குழந்தைகளுக்கான சிறுவர் பள்ளி, இளைஞர் அலுவலகம் என்பனவும் நெரிசலான பகுதியில்தான். பயணிகள் விடுதி கூட தெருவுக்கே வந்திருக்கின்றன.

ஏன் இவற்றை கொஞ்சத் தூரம் தள்ளி வெவ்வேறிடங்களுக்கு நகர்த்தக்கூடாது? அப்படி நகர்த்தும் போது அவை அமையும் அந்த வீதிகள், அந்த இடங்களெல்லாம்கூட சிறிதேனும் அபிவிருத்தியடையக் கூடுமே. இங்கே பொழுது போக்கு மையம்கூட இரைச்சலும் நெருக்கடியும் நிறைந்த A-9 வீதியோரத்தில்தான் வரப்போகிறது. கடைத் தொகுதிகூட இந்த மூன்றரைக் கிலோமிற்றர் தொலைவுக்கும் விரிந்தே கிடக்கிறது ஒழுங்கற்ற விரிப்பு. ஊர்தி திருத்தங்கள், நகைக்கடைகள், துணிக் கடைகள், உணவுக்கடைகள், அலங்காரப்பொருட் கடைகள், மின்பொருட்கடைகள், சிகைஅலங்கரிப்பகங்கள். வெண்மையகங்கள், உதிரிப்பாகக்கடைகள், கட்டடப்பொருட்கடைகள், மொத்தவிற்பனை நிலையங்கள், விவசாய உள்ளீட்டு நிலையங்கள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று கலந்தேயிருக்கின்றன. ஒரு பொருளை வாங்குவதற்கு ஒருவர் தெரு நீளம் நடக்கவேண்டியிருக்கிறது கடைமாறி கடைமாறி நடந்தால் மூன்று கிலோமீற்றருக்கு மேல் போகவேணும்.



இன்ன இன்ன பொருட்கள் இன்ன இன்ன பகுதியில் என்று வகைப்படுத்துவதன்மூலம் அலைச்சலைக் குறைக்கலாம். தெருவில் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்க்கலாம். சுத்தத்தையும் ஒழுங்கமைதியையும் காணமுடியும் நேரவிரயம் ஏற்படாது. அழகும் கவர்ச்சியும் கூடும்.

அலுவலகங்கள் பிரதான வீதியை அண்மித்ததாக இருக்கும் போது சனங்கள் வீதியில்தானே பெருகுவார்கள்.

இப்படி ஒரே மையத்தில் எல்லாம் குவிவது வேறுவழிகளில் திட்டமிடப்பட்டிருக்கவேண்டும். நிர்வாகப்பகுதி, பொதுச்சேவைப்பகுதி,

(19ஆம் பக்கம் பார்க்க)

# நீர்ப்பாசனம் செய்யும் போது திட்டமிடல் அவசியம்

காலத்துக்குக் காலம் பருவ மழை மூலம் விவசாயம் செய்து கொள்வது வெற்றிகரமாக அமையாது. சில காலங்களில் பருவ மழை பொய்த்து விடும். சில காலங்களில் அதிகமாகவும் அல்லது உரிய காலங்களில் மழை பிந்தியும் முந்தியும் கிடைப்பதால் மழையை நம்பி விவசாயத்தை மேற்கொள்ள முடியாது. விவசாயச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

ஆகவே மழை நீரை குளங்களில் சேமித்து வைத்து நீர்ப் பாசனம் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் கால் நடை வளர்ப்போருக்கும் இந் நீர் பயன் படுகிறது. பருவ மழை பிந்தி அல்லது முந்தி கிடைப்பதால் பங்கஸ், பற்றீரியா நோய்களை ஊக்குவிப்பதாலும் கருக்கட்டல் காலங்களில் மகரந்த மணி கழுவப் படுவதாலும் பாரிய வருமானம் பாதிக்கப்படுகிறது. எனவே மழை நீரிலும் பார்க்க நீர்பாசனமுறை சிறந்ததாக கருதப்படுகிறது.

இருந்த போதிலும் திட்ட மிடாத நீர்பாசணம் விவசாயநிலங்கள் உவர் நிலமாக மாறுதல் அமில நிலமாக மாறுதல் நீர்த் தேக்கங் களை உண்டாக்குதல் போன்ற தீங்கான முடிவுகளை ஏற்படுத்தும்.

வயல்களில் நீர்பாசனம் செய்யும் போது இராசாயன உரங் கள் களுவப்பட்ட களைகள் பீடை நாசினிகள் போன்றவை வடிகால் கள் மூலம் நீரோடும் வேற வழிள் மூலம் நீர் நிலைகளை அடை வதால் நைத்திரேற் செறிவுகள் அதிகரித்தல் நீர் நிலைகளில் வாழும் தாவரங்கள் உயிரினங்களுக்கு இடையூறாக இருத் தல் போன்றன நடை பெறுகின்றன.

ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பது போல் நீர்பாசனத்திட்டத்தின் கீழ் அள வுப் பிரமாணத்தின் படி நீர் பாய்ச்சுதல் அவசியமானது. ஒரு அடி உயரத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கும் நீரின் அளவே ஒரு ஏக்கர் அடி எனப்படும்

நெற் செய்கையை எடுத் துக் கொண்டால் 3-31/2 மாத நெல் இனங்களுக்கு சிறு போகத்தில் 07 ஏக்கர் அடியும் பெரும் போகத்தில் 5 ஏக்கர் அடி நீரும் தேவைப்படும். 4-41/2 மாத நெல்லினங்களுக்கு சிறு போகத்தில் 09 அடியும் பெரும் போகத் தில் 07 அடியும் தேவைப்படு கிறது.

பயிரின் வெவ்வேறான வளர்ச்சி நிலைகளில் நீர் முகா மைத்துவம் பேணப்படல் அவசியமாகும்.

## மட்டம் வெடிக்கும் நிலை

கதிர் தொடக்க வடிவம் உருவாகும் நிலை (குடலைப் பரு வம்) பூத்தல் தானியம் நிரப்பு நிலை இந் நிலைகளில் நீர் முக்கிய மாகும்.

வயலில் நீர் துருசில் இருந்து வாய்க்கால் வழியே செல்லும் போது ஊடுவடிதல் ஆவியுயிர்ப்பு ஆவியாதல் நீர் வடிதல் போன்றவற்றா லும் நீர்ப்பாசனத்தை கையாளும் கவலையீனங்களாலும் நீர் இழப்புக் கள் ஏற்படுகின்றன.

நீர் விரயமாகாமல் தடுப் பதற்கு பயிர் வளர்ச்சிக் காலம் முழுவதும் வரம்புகள் வாய்க்கால்கள் முழுவதும் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். சிறந்த நிலம் பண்படுத்தல் மூலம் ஊடுருவும் நீர் இழப்பை முற்றாகத் தடை செய்யலாம். வய லில் மேலதிக நீர் தேங்காமல் இருக்க வடிகால் வசதிகளை அமைத் துக் கொள்ள வேண்டும்.

குளத்தில் இருக்கும் நீர் உரிய அளவில் பாவிக்கப்படின் நீர் மீதப்படுத்தப்படும். கமக்காரர் மத்தி யில் ஒற்றுமை ஏற்படுத்தப்பட வேண்டும் நீர் முகாமைத்துவம் பற்றி அறிந்திருத்தல் அதிக நிலப்பரப்பில் நீர்த் தேவையைக் குறைக்கும் வகையில் குறுகிய கால வயதில் உள்ள பயிர்வகைகளை மக்கள் செய்கை பண்ண ஊக்குவிக்க வேண்டும்.

மழையோடு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு குளத்து நீர் மீதப்படுத்தப்பட வேண்டும்.

நீர் முகாமைத்துவ கொள் கைகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பாரிய சிறிய குளங் களுக்கும் சிறு போகம் கால போக மாகிய இரு பிரிவுகளுக்கும் கமக் கூட்டங்கள் கூட்டப்பட்டு விதைத்தல் நீர் பாய்ச்சுதல், வெட்டுதல், சூடுமிதித் தல் போன்ற செயற்பாடுகளுக்கு கால வரையறை இடப்படுகிறது. எனவே அக்கால அட்டவணையின் படி செய்கைகளை மேற்கொண்டு கமக் கார பெருமக்கள் கடைபிடித்து வந் தால் நீர் மிகுதிப்படுவது சாத்திய மாகும் நல்ல முகாமைத்துவம் ஏற்படும் தொடர்ந்து பயிர்ச் செய்கையும் மேற் கொள்ளப்படின் நாட்டிற்கு பலன் தரக் கூடிய செய்கை முறைகளை கடைப் பிடிப்போமாக.!

**சிவகமலா.**

(சீ-9609)




## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

யூன் மாதம் 5 ஆம் திகதி உலக சூழல் தினமாகும். மனித வாழ்க்கைக்கு மனித வாழ்க்கை மேம்பாட்டுக்கு எதிர் காலத்திற்கு என்று எதற்குமே முக்கியமானது சூழல் தொடர்பான மனிதர்களுக்கு உரிய அக்கறைதான்.

உலகம் தோன்றிய காலம் முதல் மனிதர்கள் இயற்கைச் சமநிலையை மாசுபடுத்தாமல் அதனைப் பேணுவதன் ஊடாக சூழலைப் பாதுகாத்து வந்தனர்.

விஞ்ஞான அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இயற்கை என்றைக்கு காவு கொடுக்க மனிதன் ஆரம்பித்தானோ அன்றைக்குத் தொடக்கம் இயற்கைச் சமநிலை குலைந்துவிட்டது.

மழை, நீர், காற்று, சூரிய ஒளி என்று சகல விடயங்களும் தமது இயற்கை நிலையைக் குளப்பிக் கொண்டன.

இன்று நாங்களே எங்கள் சூழலை மகிமைப்படுத்திக் கொண்டு சூழல் தொடர்பாக பேச வேண்டியவர்களாக உள்ளோம்.

கண் கெட்டபிறகா சூரிய நமஸ்காரமா? அல்லது கண்ணை கெடப்பண்ணிக் கொண்டு சூரிய நமஸ்காரமா? என்பது தொடர்பாக ஆராய்வதை விடுத்து நாங்கள் சூழல் தொடர்பாக அக்கறைப்பட வேண்டும்.

சூழல் தொடர்பான அக்கறை என்பது "மரங்களை" நடுகை செய்து தனியே தண்ணீர் வார்ப்பதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதில்லை.


சாதாரனமாக நாம் கிடங்கில் கொட்டும் குப்பையிலிருந்து குவித்து எரிக்கும் குப்பைகள் வரையில் மட்டும் நின்றுவிடுவதில்லை பல்வேறு விடயங்களை உள்ளடக்கியது. அதன் காரணமாகத்தான் ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் சகல நடவடிக்கைகளையும் சீர் தூக்கிப் பார்த்து சூழல் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பில் கரிசனை உள்ளவர்களாக இருக்க முனைய வேண்டும் அதனால்தான்.

யூன் மாதத்தில் சூழல் விழிப்புணர்வு மாதமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சூழல் பாதுகாப்புப்பகுதி பிரகடனப்படுத்தியுள்ளது.

சூழல் பாதுகாப்பு தொடர்பாக நாங்களும் அக்கறை கொள்வோம்.

# அந்த வெள்ளிக்கிழமை தெரிந்த ஒரு காட்சி

கடந்த 21ம் திகதி மாலையில் தெரிந்த பிறையும் அதன் ஒரு நுனியில் ஆரோகணித்திருந்த வெள்ளிக் கிரகமும் (VENUS) அதனை கண்டவர்களை தம்மை மறந்து வானில் லயிக்கச் செய்துவிட்டது. இந்தக் காட்சி கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் நீடித்தது. பின் வெள்ளிக்கிரகம் மெதுமெதுவாக கீழிறங்கி பிறைக்குக் கீழே வெகு தூரம் போய்விட்டது. இயல்பாகவே வெள்ளிக்கிரகம் பிரகாசமானது. அன்றைக்கு நிலவோடு பிரகாசமான வெள்ளிக்கிரகமும் இணைந்து கண்கவர் இயல் கடந்த நிகழ்வு ஒன்றை உருவாக்கியிருந்தன.



வெள்ளியன்று எல்லோரும் வெள்ளிக் கிரகம் நிலவின் பின்னாலிருந்து முன் வந்த காட்சியைத் தான் கண்டனர்.

யூன் 8 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் பூமிக்கும் சூரியனுக்குமிடையே வெள்ளிக்கிரகம் வரும் நிகழ்வுக்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. பூமி- சூரியன் இடையே வெள்ளிக்கிரகம்வருவது ஒரு அரிதான நிகழ்வாகும் கடைசியாக அது 1878 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. வெள்ளிக்கிரகத்துக்கு முன்னால் நிலவு வருவது (LUNAR OCCULTATION) ஓரளவு கிரமமாக நிகழ்வதாகும். இறுதியாக சென்ற வருடம் ஏப்ரல் மாதம் இப்படி நிகழ்ந்தது.

இது குறித்து 60,70 வயதுகளில் இருந்த முதியவர்களிடம் கேட்டபொழுது இவ்வாறான ஒரு காட்சியை தாம் தமது ஆயுள் காலத்தில் கண்டதில்லை என்று வியப்போடும் ஒருவித பிரமிப்பு உணர்வோடும் தெரிவித்தார்கள்.

©

# என்றும் உங்கள் நினைவு வாழும்...



துப்பாக்கியும்,
எழுதுகோலும்
ஒன்றானால்
எதிரிக்கு பயமில்லை –
எனினும்
துப்பாக்கியைவிட
எழுதுகோல்
வலிமையானதால்
எதிரிக்கு இத்தனை பயம்
நடேசனின் மரணம்
ஓங்கி ஒலிக்கும் குரல்களின்
வீழ்ச்சியல்ல – அந்த
குரல்களின் ஊக்கி.

நாட்டுப்பற்றாளர்

## திரு. ஐயாத்துரை நடேசன்

மூத்த பத்திரிகையாளரும் நாட்டுப்பற்றாளருமான திரு. ஐயாத்துரை நடேசன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் நாங்களும் பங்கேற்கின்றோம்.

பொறுப்பாளர்,
ஈழநாதம் பணியாளர்கள்,
மற்றும் வாசகர்கள்.

# இலக்கியப் பகிர்வு




செயற்திறன் அரங்க இயக்கத்தின் வெளியீடும் "கூத்தரங்கம்" இதழின் இரண்டாவது வெளியீடு வந்துள்ளது. முதல் இதழ் போலவே பன்னிரண்டு பக்கங்களில் கட்சிதமான அடக்கத்துடனும், குறைந்த விலையுடனும் வந்திருப்பது பாராட்டுக்குரியது.

"எம்மிடம் எஞ்சியுள்ள தேட்டங்களை கூத்தரங்கில் பதிவு செய்து கொள்ள விரும்பி இனி வரும் இதழில் இருந்து "பதிவுகள்" பகுதியை ஆரம்பிக்கவுள்ளோம்."

"ஆய்வுகள் சரியானமுறையில் மேற்கொள்ளப்படாமையினால் பல அரிய வைகள் பற்றிப்பேசப்படாத எழுதப்படாத நிலைமைகள் காணப்படுகின்றன. கூத்தரங்கம் தன்னாலானவரை திறந்த மனத்துடன் இப்பணியை அரங்கத்துறை ஆர்வலர்களின் துணையுடன் மேற்கொள்ளும்."

"தேட்டம் என்ற பகுதியூடாக பல்வேறு பாரம்பரியங்களிலும் காணப்படும் அரங்க வடிவங்களை வெளிக்கொண்டுவர முயல்கிறோம்."

"எதிர்வரும் காலங்களில் ஒரு விடயத்தை / கருவை ஆழமைத்து கூத்தரங்கம் வெளிவர முயற்சிக்கும்."

எனப்பல்வேறு முன் அறிவுப்புக்களை கூத்தரங்கம் செய்துள்ளது. இதனை அவர்கள் தமது ஆசிரியர் தலையங்கத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

கூத்தரங்கத்தின் முதலாவது இதழ் ஆயிரம் பிரதிகளும் விற்பனை செய்திருப்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இவ்வாறான மாற்றம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது. "தெரிதல்" போலவே "கூத்தரங்கமும்" விற்பனையை இலகுவாக்கியுள்ளது.


இதற்கு இவற்றின் விலையும், கைக்கடக்கமான வடிவும் ஒரு காரணமாக அமையலாம். எந்த விதத்திலாவது இவ்வாறான வெளியீட்டு முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே எம் முன் உள்ள பணியாகும்.

கூத்தரங்கத்தின் தொடக்கம் அந்தப் பணிய்யை செவ்வனே செய்யும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்துகின்றது. மேற் கொள்ளப்பட்ட அதன் பிரகடனங்கள் அதனை வலியுறுத்துகின்றன.

01. கூத்தரங்கின் தொடர் வெற்றி என்பது தனியே செயற்திறன் அரங்க இயக்கத்தினாலோ, கூத்தரங்கத்தின் ஆசிரியர் குழுவாலோ மட்டும் அடையக் கூடிய சங்கதிகள் அல்ல.

02. கலை இலக்கிய நாடகத்துறை சார்ந்த சகலரினதும் ஆர்வத்திலும், செயற்பாட்டிலும் தான் இது தங்கியுள்ளது.சேர்ந்து கை கொடுக்க இவர்கள் மென்மேலும் முனைய வேண்டும்.

முதலாவது இதழ் ஆயிரம் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டாலும் "கூத்தரங்கம்" போன்ற வெளியீடுகளின் தொடர் வெளியீட்டில் உள்ள தடைகள் பற்றி வெளியீட்டாளர்கள். நன்கு உணர்ந்துள்ளார்கள். முதலாவது வெளியீட்டின் வெளியீட்டினை நிகழ்த்திய



குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களும் இது தொடர்பாக அறிவுறுத்தியுள்ளார்.

"நாடகமும் அரங்கியலும் துறை சார் சஞ்சிகைகள் பல ஏற்கெனவே வந்திருப்பது பற்றி குழந்தை ம.சண்முகலிங்கம் குறிப்பிட்டார். அவற்றில் பல இடைநடுவில் நின்றுவிட்டன. தற்போது திருமறைக் கலாமன்றத்தின் "ஆற்றுகை" தொடர்ந்து வெளிவருகின்றது. இருப்பினும் தொடர்ந்து இயக்குவதில் சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். இந்தியாவில் இருந்து "கட்டியம்" என்ற உலகத் தமிழ் அரங்க இதழ் வெளிவருகின்றது. அவர்களுக்கும் ஆக்கங்கள் பெறுவதில் சிரமங்கள் உள்ளன.

"அரங்கம்" "கல்யாணி" "நாடக வெளி" (இந்தியா) போன்றன இடைநடுவில் நின்று போன நாடக சஞ்சிகைகள் என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்தப் பின்னணியில் மிக்க நம்பிக்கையுடன் செயற்திறன் அரங்க இயக்கத்தின் கூத்தரங்கம் ஒரு செய்தி இதழாகக் கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. தளராது தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்றும் குழந்தை ம.சண்முகலிங்கம் குறிப்பிட்டார்."எனக் கூத்தரங்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியிலேயே கூத்தரங்கத்தின் தொடர் செயற்பாடு தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும்.

1,2 இதழுக்கான படைப்புக்கள் ரீதியாகவும் விற்பனை விநியோகம் தொடர்பாகவும், இவர்கள் கூடிய கரிசனை கொள்ள வேண்டும்.

புதிது புதிதாக சஞ்சிகை வெளியீடுகள் தொடங்குவது இலகு. ஆனால்- இருக்கும் சஞ்சிகைகளை தொடர்ச்சியாக வெளிக் கொண்டுவர முயற்சித்தல் கடினமான பணியாகும் இந்த கடினமான பணியையே இலகுவாக்க வேண்டும். வெளியிடப்படும் இதழ்களை தொடர்ச்சியாக தரமாக, சிறப்பாக வெளியிட வைக்க இயலுமான வரை எல்லோரும் முயல வேண்டும்.

படைப்புக்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பிலும், விற்பனை விநியோகத்தை மேம்படுத்தல் சார்பாகவும், வெளியீட்டுடன் பலபேர் தொடர்புபட வேண்டும்.பலருடைய அனுபவங்கள் ஆக்கங்கள் இணைக்கப்பட வேண்டும்.

ஆனால் போதுமான தரமான படைப்புக்கள் கிடைக்காமையால் ஆசிரியர் குழுவினர் அல்லது ஆசிரியர் பக்கங்களை நிரப்பும் ஒரு போக்கும் இருந்தது. இருந்து வருகின்றது. இதற்கு கூறப்படும் முக்கியமான காரணம். தரமான தகுதியான ஆக்கங்கள் கிடைக்காமையே என்பதாகும்.

இவ்வாறு ஒன்றை ஒன்று வெட்டும் அல்லது மேலும் நடவடிக்கைகளை மீறி வென்று கூத்தரங்கம் போன்ற சஞ்சிகைகள் வெளிவர துணை புரிவோம்.

கூத்தரங்கத்தில் எங்கள் மூத்த கவிஞரும் நாடக எழுத்துப் படைப்பாளியுமான கவிஞர் இ.முருகையன் அவர்கள் கூறிய கருத்து ஒன்று முக்கியத்துவம் பெற்றது.

"ஈழத்தமிழ் ஆக்கத் துறையில் செல்நெறி என்று பார்க்கும் போது எங்கள் உடனடி வருங்காலத்தில் மகத்தான அற்புதங்கள் எவற்றையும் என்னால் எதிர்வு கூற

## கூத்தரங்கம்

முடியவில்லை. இன்று நம் கல்வியுலகில், பல்கலைக்கழக மட்டத்திலே "நாடகமும் அரங்கியலும்" ஒரு கற்கை நெறியாய் இருக்கிறது. ஆண்டுதோறும் நமது பல்கலைக்கழகத்தில் இருந்து இப்பாடத்திலே தேர்ச்சி பெற்றவர்கள் வெளியேறுகிறார்கள். இவர்களில் எத்தனைபேர் தாம் கற்றவற்றைப் போற்றிப் பேணி வருங்காலத்தலை முறையினரிடம் கையளிக்கும் ஆர்வமும் வேட்கையும் பெற்றவர்களாகப் போகிறார்கள்?

இது தொடர்பாகவும் சம்பந்தப் பட்டவர்கள் யோசிக்க வேண்டும்.

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்திநாதன்**




## இது எப்படி

'கப்லோட்டிய தமிழன்' படம் பார்க்கச் சென்றிருந்தோம். குறித்த நேரம் தாண்டியும் படம் ஆரம்பமாகவில்லை. பொறுமையிழந்த ஒருவர் தியேட்டர்காரரிடம் கேட்டார் "என்னையா கப்பலை நேரத்திற்கு ஓட்டலாம்தானே..." அதற்கு அவர் பதிலாக-

கப்பலை ஓட்டுவது தமிழனல்லவா... எப்படி அவரால் சரியான நேரத்திற்கு ஓட்டமுடியும்.

## கோயில் வாயிலில்...

நேற்று மாலை கோயிலின் சலவைக்கல் படிகளில் ஒரு பெண்மணி இரு ஆண்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தாள். அவள் முகம் ஒருபுறம் வெளுத்திருந்தது... மற்றொரு புறம் வெட்கத்தால் நாணிக்கொண்டிருந்தது.

## ஒரு முன்னுரையிலிருந்து...

மக்களிடம் படிப்பது அதை மக்களிடமே திருப்பிக் கொடுப்பது என்ற கொள்கையை முன்நிறுத்தி எழுதி வருபவன் நான் தனிமனித சுதந்திரத்தை அழித்தொழித்து, எல்லாம் எல்லோருக்குமான சுதந்திரத்தைப் பெறுதல் என்ற முனைப்புடன் நான் பார்ப்பவைகளை அனுபவிப்பவைகளை எனது அடிப்படை கொள்கைகளுக்கிணங்க எழுதிவருகிறேன்....

இந்த மக்கள் அதாவது அடக்கி ஒடுக்கப்படும் பஞ்சமர்களை மக்கள் எல்லோரும் வர்க்க அடிப்படையில் ஒன்றுபட்டு நின்று நில ஆதிக்கக்காரர்களால் சுமத்திவைக்கப்பட்டிருக்கும் நுகத்தடியை உடைத்தெறியவேண்டும் என்பதே எனது வேட்கை...

"இந்த மண்ணில் கடைசி மனிதனும் சுதந்திரம் பெறும்வரை ஓய்வதில்லை என்ற திடசங்கற்பத்துடன் நிரந்தர சமாதானத்திற்காகப் போராடி வருவோருக்கும் இந்நூல் சிறு ஆயுதமாக அமையுமானால் அதுவே எனக்கு பெருமகிழ்ச்சியைத்தரும்.

## எண்ணும் எழுத்தும்

ஈரடிக்குறள்
முத்தொள்ளாயிரம்
நாலடியார்
நான்மணிக் கோவை
ஐந்திணை முப்பால்
ஏர் எழுபது
இன்னாநாற்பது
இனியவை நாற்பது
பதிற்றுப்பத்து

இவையனைத்தும் தமிழ் நூல்களின் பெயர்களே எல்லாமே என்னுடன் தொடர்புடைய பெயர்களைக் கொண்டவை.

## 'கல்லறை' தோண்டி

ஒருமுறை நான் என் அகங்காரங்களைப் புதைத்துக்கொண்டிருக்கும் போது, கல்லறைக் குழி தோண்டுபவன் என் பக்கம் வந்து, "இங்கே புதைக்க வருபவர்களிலேயே உங்களைத்தான் நான் அதிகம் விரும்புகிறேன்"என்றான்.

"கேட்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது... என்னை ஏன் உனக்குப் பிடிக்கிறது....?"

ஏனெனில், "இங்கே வருபவர்கள் எல்லாம் அழுதுகொண்டேவருகிறார்கள்.. அழுதுகொண்டே போகிறார்கள்.. நீ மட்டும் தான் சிரித்துக்கொண்டே வருகிறாய்.. சிரித்துக்கொண்டே போகிறாய்.."

**பொறுக்கி**

# படித்ததில் பிடித்தது

கடற்கரை.....

ஒருவன் மற்றொருவனிடம் கூறினான். "பல நாட்களுக்கு முன்பு, பேரலைகள் எழும்பும் நேரம் என்கைத் தடியின் நுனியால் இந்த மணற்பரப்பில் ஒரு வரி எழுதினேன். போவோரும் வருவோரும் நின்று அதைப்பார்த்துவிட்டுச் சென்றனர். யாரும் அதைக்கலைக்கவில்லை.

## நம்பிக்கை

மற்றவனோ,"இந்த மணலில் நானும் ஒரு வரி எழுதினேன். அலைகளும் அதிகம் இல்லை. ஆனாலும் கடலின் அலைகள் அதை அழித்துவிட்டன. ஆம்..நீ அப்படி என்ன எழுதினாய்?" என்றான்.

அதற்கு அவனோ

"நான் நிரந்தரமானவன் என எழுதினேன். நீ என்ன எழுதினாய்?" என்று கேட்டான்.

"இந்த மகா சமுத்திரத்தில் நான் ஒரு திவலை என்று எழுதினேன்" என பதிலுரைத்தான்.

## போரும் சிறு நாடுகளும்

ஒரு செம்மறியாடு அதன் குட்டியும் மேய்ந்து கொண்டிருந்த புல்வெளிக்கு மேலே உயரத்தில் ஒரு கழுகு பசியோடு, அந்த ஆட்டுக்குட்டிக்குக் குறிவைத்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அது கீழே இறங்கி, அந்தக் குட்டியைப் பிடிக்குமுன் மற்றொரு கழுகு வானில் வட்டமிட்டது. பிறகு, இந்த இரண்டு கழுகுகளும் வானில் மிகவும் பயங்கரமாகச் சண்டையிட்டுக்கொண்டன.

செம்மறியாடு உயரே பார்த்தது. மிகவும் திகைப்படைந்தது. அது தன் குட்டியைப் பார்த்துச்சொன்னது: "இங்கே பார் இந்த இரண்டு பெருந்தன்மையான கழுகுகள் இப்படி சண்டையிட்டுக்கொள்கின்றன...இந்த அகன்றவானம் அவர்களுக்குப் போதவில்லையா.... என்ன? சண்டையிட்டுக் கொள்ளும் இரண்டு கழுகுச் சகோதர்களும் சமாதானம் ஆக வேண்டும் என ஆண்டவனிடம் வேண்டிக் கொள்."

தாய் சொன்னது போலவே, ஆட்டுக்குட்டி மனசுக்குள்ளேயே ஆண்டவனை வேண்டிக் கொண்டது.

திருப்தி அடையாமலிருப்பது, துணிவு இல்லாமையின் அறிகுறிதான். –சார்ல்ஸ் சர்ச்சில்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழுதுபோக்கு, அறிவியற்பகுதி என ஒரு முழு அமைவில் அவை அமையலாம். அதற்குரிய ஒழுங்கும் பொருத்தப்பாடும் கருதி அவற்றை நிர்மாணிக்கலாம். இதற்குரிய நடைமுறையை இப்போதே செய்யவேண்டும். சாட்டுகள் சொல்வது தீர்வாகாது.

அப்படிச் செய்யும்போது, சன நெருக்கடியும் ஏற்படாது. இலகுவாக மக்கள் தேவைகளைப் பெற்றும் கொள்ளலாம்.

பல நிறுவனங்கள், அலுவலகங்களை வெவ்வேறு இடங்களுக்கு நகர்த்தவேண்டியது ஒரு கட்டாயத்தேவையாகிவிட்டது. அல்லது பிரதான சாலையை தொலைதூரப் பயணப்பாவனைக்குவிட்டு விட்டு நகரத்தில் சமாந்தரமாகவோ வேறு விதமாகவோ வீதிகளை உருவாக்கவேண்டும்.

ஆனால் கிளிநொச்சியில் வெகு இலகுவாக சமாந்தரவீதியை அமைத்துவிடமுடியாது.

ஒன்று வயல்களும் வாய்க்கால்களும் நிறைந்த புவியியல் அமைப்பு. இரண்டு, இனி சமாந்தரவீதியை அமைக்கமுடியாத அளவுக்கான குடிசனநெருக்கம்.

இவ்வாறு நெருக்கடிகள் பலவுண்டு, சரியான தீர்வைநோக்கி நகர்வதற்கு. ஆனால் அதை எதிர்கொண்டுவென்றே தீரவேண்டும்.

ஆனால் உள்ள நிலைமையோ தொடர்ந்தும் A-9 வீதியை நோக்கி எல்லாத்தரப்பும் நகர்வதுதான்.

இது யாழ்ப்பாணத்துக்குப் போகும் சிங்களவர்கள் கிளிநொச்சியைப்பார்த்து அதிசயப்படும் அளவுக்குத்தான் கருதவைத்துள்ளது. பெரிய அளவில் கட்டுமானத்தோடு கிளிநொச்சி அபிவிருத்தியடைந்து வருகிறது என்றும் இயல்பு நிலைமை வெகுவாகத் திரும்பிவிட்டது என்றும் அவர்கள் நினைத்துக்கொண்டு போகிறார்கள்.

ஆனால், A-9 வீதியை விட்டு ஒரு நூறுநூற்றம்பது மீற்றர் தூரம் உள்ளே இறங்கினால் எந்த மாறுதலுமில்லாத உண்மை நிலைமையிருக்கிறது. இதனை யார்தான் பொருட்படுத்துகிறார்கள்? நாங்களோ இயல்புவாழ்க்கை திரும்புவதற்கு அரசாங்கம் பொறுப்பெடுக்கவேண்டும் என்கிறோம். அப்படியாயின் உள்ள நிலைமையை, யதார்த்தத்தை அனைவரும் அறியக்கூடியமாதிரிச் செயற்படவேண்டுமல்லவா!

அதற்காக இடிபாடுகளையும் சிதைவுகளையும் தொடர்ந்தும் வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்றில்லை. நகரமையத்தில் போர் நினைவுச் சின்னமொன்றை வைத்துக்கொண்டு ஏனையவற்றை மீளமைக்கலாம். இந்த மீளமைப்பு வீதியோரத்துக்குமட்டும் என்றில்லாமல் சமாந்தரமாக நகரின் உட்புறங்களை நோக்கியும் விரிய வேண்டும்.

ஒரு உதாரணத்துக்குச் சொன்னால் கிளிநொச்சி திருநகர் வீதியைப்பார்த்தால் சமாந்தரமற்ற தன்மையைப் புரிந்துகொள்ளலாம் தினமும் ஐயாயிரம் பேர்வரையில் பயணிக்கும் அந்தவீதியில் சைக்கிள் கூட ஓடமுடியாத அளவுக்கு குண்டும் குழியுமாக இருக்கிறது அது. குடிசன நெருக்கம் நிறைந்த அந்த வீதியில் மின்சாரம்கூட பாதியுடன் நின்றுவிட்டது. இப்படிப்பலதைச் சொல்லலாம். அவ்வளவுக்கு கரிசனை கொள்ள வேண்டியவை நிறையவுண்டு.

நகர அபிவிருத்தி பற்றி பேசுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் இன்னும் பலதையும் பார்க்கலாம்


## விற்பனையாகிறது......


*புலமைப் பரீட்சை வழிகாட்டி , தரம் -05*

(ஆசிரியர்:- வேலுப்பிள்ளை- அன்பழகன்)
விற்பனையாகிறது.
வன்னியின்:-ஏக விநியோகத்தர்

**பிள்ளையார் பொத்தகசாலை கிளிநொச்சி**
T.P 021.2285750
வணிகர்களுக்கும்
பாடசாலைகட்கும் விசேட கழிவுண்டு.

கி.-9621


## 31 ஆம் நாள் நினைவுநாள்



| அவதாரம் | அமரத்துவம் |
|---|---|
| 21 - 04 - 1939 | 05 - 05 - 2004 |

அமரர்

## சின்னப்பு - பொன்னுத்துரை

*கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை*


*இறைபதம் அடைந்த எமது அன்புத்தந்தையும் குடும்பத்தலைவருமான பொன்னுத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 04.06.2004 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.*

*அன்றைய நிகழ்விலும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.*

*"சாந்தி"*

*(4567)* *குடும்பத்தினர்.*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -71



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் -71

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ................................................ ஈழநாதம்
முகவரி : ................................................ யாழ்சாலை,
................................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -70



சு.சிவாஜினி
மந்துவில்
புதுக்குடியிருப்பு

### பரிசுக்குரிய வரிகள்

*தனைச் சருகாக்கி பிள்ளைகளை தளிராக்கிய*
*தாயை அனாதரவாய் ஆலமரத்தடியில்*
*தவிக்க விட்டனரோ பிள்ளைகள்.*
*தாயேகண் திறந்து பார் புலிப்பிள்ளை நானுள்ளேன்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*நெஞ்சம் வெடிக்கின்றது.*
*பிஞ்சு மனம் கொதிக்கின்றது-தாயே*
*பஞ்சமது பிடித்ததனால்-வனத்தில்*
*தஞ்சமது புகுந்தனையோ.*

க.பிரதீபா
கிளிநொச்சி.

*வறுமையின் பிடியில் ஜீவன் ஒன்று ஊசலாடுகின்றது.*
*வரிப்புலி அதனை நோக்குகிறது.*
*நாளை இந்நிலை உருவாகக் கூடாது - என*
*மனதில் உறுதி கொள்கிறது.*

பு.யோதிகா
வட்டக்கச்சி.

*தமிழ் அன்னைக்கு ஈடான தாயே!*
*உந்தன் உறவோ உன்னை அணைக்கவில்லை*
*தமிழ் ஈழமண்ணில் தலை சாய்த்து சுமை இறங்கும் நேரம்*
*தமிழீழக் காவலாலி இவள் தாயின் கரம் பற்றுகிறாள்*

வே.அகமொழி
தமிமீழம்.

*அன்னையே! குந்தியிருந்த உன் சொந்த நிலம் இழந்தாயா?*
*கூடி உறவாடிய உன் உறவுகளையும் தொலைத்தாயா?*
*வாழ வழி தெரியாது வீதிக்கு வந்தாயா?*
*கவலையை விடு தாயே உன் சொந்தம் நானே.*

செ.கௌதமன்
தர்மபுரம்.

*மனிதர்கள் என்ற போர்வையில்*
*மனித நேயமற்ற பிறவிகளை பார்த்திருக்கின்றேன்*
*இப்பொழுது நான்பார்ப்பது அவைகளையல்ல*
*ஒரு உயர்ந்த மனிதப்பிறவியை.*

செல்வா நிக்ஷன்
கிராஞ்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

## ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

### சிறந்த படைப்புக்கு 25,000 /= ரொக்கம் பரிசு

### போட்டிக்கான இறுதித்திகதி யூன் 25 வரைநீடிப்பு.

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவித்திருந்தது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்குமாறும் அது வேண்டியிருந்தது.

இதற்கமைவாக ஏராளமான படைப்பாளிகள் குறுநாவல் போட்டியின் முடிவுத்திகதியை நீடிக்குமாறு வேண்டியதற்கிணங்க எதிர்வரும் யுன் 25 வரை குறுநாவலை அனுப்பிவைக்கவேண்டிய கால எல்லையை நீடித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கதை எவ்விடயப்பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன்பு தவறி வந்ததோ, வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்ட தாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசாகக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**ஆசிரியர் வெள்ளிநாதம்,**
**ஈழநாதம், கிளிநொச்சி.**













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூன் மாதம் 04 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.